# கல்கி

KALKI 6.9.92 ரூ. 3.00




## நிதியமைச்சர்

### சிறப்புப் பேட்டி

# BPL

## புதிய பிபிஎல்-அஜீத் 1404
## ப்ளாக் & ஒயிட் போர்ட்டபிள் டிவி




இந்தியாவிலேயே அதிக விற்பனை யாகும் ஒரே ப்ளாக் அண்டு ஒயிட் டிவி அஜீத் 410. இதனை தயாரிப் பவர்கள் வழங்கும் மற்றுமொரு அரிய படைப்பு பிபிஎல் அஜீத் 1404. சர்வதேச தரத்தோடு கூடிய 36 செ.மீ. டெலிவிஷனில் அற்புதத்தை கண்டு களியுங்கள். மோனிட்டர் ஸ்டைல் தோற்றம், டர்ரட் ட்யூனர் ... போன்றவை விசேஷ அம்சங்கள்.

* SMPS - கலர் டிவியில் கிடைக்கும் முக்கிய அம்சம். - வோல்டேஜ் ஸ்டெபிலைஸர் இதற்கு தேவையில் லாததால், பாதுகாப்போடு உங்களுக்கு கிடைப்பது சேமிப்பும் கூட. 110Vக்கு வோல்டேஜ் குறைந்த போது கூட, துல்லியமான படக் காட்சி கிடைக்கும். குறைந்த பட்ச 65Vயிலும் உங்களுக்கு தெளிவான ஆனால் சற்று அளவு குறைந்த படக்காட்சி கிடைக்கும்.
* 12V DC யில் செயல்புரிகிறது.
* வண்ணமான மௌல்டட் கேபினெட்.
* வி.சி.ஆர் இணைப்பு
* இணையற்ற படக்காட்சி.

SMPS

மேற்கூறிய சிறப்பு அம்சங்களைக் கொண்டு கிடைக்கக் கூடிய பிபிஎல் அஜீத், உங்களோடு இணைந்து வாழ் நாள் முழுவதும் உழைக்கக்கூடியது.

## ஏற்ற தாழ்வான மின்சாரத்திலிருந்து முழுமையான பாதுகாப்பு



மனதிற்கினிய ஒலி
**பிபிஎல்-அஜீத்தின்**
ஒளி

KAMERAD NEWS/BPL-186-92 TAM




# படுபயங்கர குகையில் பரமசாந்த ஜீயர்!

''அஹோபில மடத்துக்குச் சொந்தமான நிலம் ஐயாயிரம் ஏக்கர் இருக்கிறது. அதிலிருந்து குத்தகைப் பணமாக வருஷத்துக்கு சுமார் இருபது லட்சம் ரூபாய் வசூலாக வேண்டும். ஆனால் உண்மையில் வசூலாவது எவ்வளவு தெரியுமா? ஐம்பதாயிரம் ரூபாய் கூட இல்லை. இந்தப் பணத்தை மடத்தின் காரியஸ்தர்கள், குத்தகைக்காரர்களிடமிருந்து வசூல் செய்வதற்கே ஆயிரக்கணக்கில் மடத்துக்குச் செலவாகிறது'' என்று கூறுகிறார் ஸ்ரீரங்கம் அஹோபில மடத்தின் நாற்பத்தைந்தாவது ஜீயராகப் பொறுப்பேற்றிருக்கும் ஸ்ரீ ஸ்ரீவன் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்திர மகாதேசிகன் ஸ்வாமிகள்.

''இதற்கு என்னதான் தீர்வு?''

''மூன்று வருடங்களாகக் குத்தகை பாக்கி வரவில்லையென்றால், குத்தகையை வேறு ஒருவருக்கு விருப்பம் போல மாற்றி விட அதிகாரம் தர வேண்டும்; அதற்கும் வழி இல்லை; நிலங்களை விற்று விடலாம் என்றால், அதுவும் முடியவில்லை. நிலத்தை வாங்கிக் கொள்ள முன்வருபவரைத் 'தலையைச் சீவி விடுவேன்' என்று மிரட்டி, விரட்டி விடுகிறான் குத்தகைக்காரன்.



"ஏதோ டாக்டர் வரன் ஒண்ணு வந்து உங்க பெண்ணைப் பார்த்துட்டுப் போனதாச் சொன்னீங்களே, பெண் பிடிச்சிருக்காமா?"

"ஹூம்.... எதையும் 48 மணிநேரத்துக் கப்புறம்தான் சொல்ல முடியுங்கறாங்க!"

- எஸ். ரமேஷ்



"அடுத்தடுத்து சுமார் அரை-டஜன் கதைகள் அனுப்பினதாலே... ஆசிரியரிடமிருந்து ஏதோ பரிசு வந்திருப்பதாகச் சொன்னீங்களே?"

"ஆமா, 'சிறுகதை எழுதுவது எப்படி?' என்கிற புத்தகம் தான்!"

- பெ. கலாசாமி

பேசாமல், மடத்துக்குச் சொந்தமான நிலம் அனைத்தையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளட்டும். அவற்றுக்கு இன்றைக்கு என்ன மார்க்கெட் ரேட்டோ, அதில் பாதியை மடத்துக்குக் கொடுத்து விடட்டும்; அதுவே போதும்'' என்கிறார் புதிய ஜீயர்.

''சன்னியாசியாக இருக்கும் வரைதான் பணத்தைப் பற்றி நினைப்பதும், தொடுவதும் தவறு. ஆனால் பீடாதிபதி ஆகி விட்டால், நிறையப் பணம் வசூலிக்கலாம்; நிறையக் கைங்கர்யங்கள் செய்யலாம். மடத்துக்கு நிரந்தரமான வருவாய்க்கு வழி ஏற்படுத்தலாம்'' என்று கூறும் புதிய ஜீயருடைய பூர்வாசிரமப் பெயர் வில்லிவலம். பி. என். கிருஷ்ணமாச்சாரியார். வில்லிவலம் என்ற ஊர் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. வயது 66. புதிய ஜீயர், தமிழிலும், சமஸ்கிருதத்திலும் புலமை மிக்கவர். ஆங்கிலமும், இந்தியும் அறிந்தவர்.

தமிழ்ப் பண்டிதராகப் பணிபுரிந்திருக்கிறார் ஜீயர். அதன்பின் மதுராந்தகம் அஹோபில மடத்தின் சமஸ்கிருதக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் உண்டு. பத்தாண்டுகளுக்கு மேல், சென்னையிலிருந்து வெளிவரும் 'நரசிம்மப் பிரியர்' என்ற வைணவப் பத்திரிகையின் இணையாசிரியராய் இருந்திருக்கிறார். தமிழ் நூல்களை, சமஸ்கிருதத்திலும், சமஸ்கிருத நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்திருக்கிறார். கடந்த முப்பது வருடங்களுக்கும் அதிகமாய் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இலவசமாக சமஸ்கிருத வகுப்புகள் நடத்தியிருக்கிறார். பம்பாய், டெல்லி, நாக்பூர், பெங்களூர் போன்ற வெளியூர்களிலும், தமிழ்நாட்டில் அனைத்துப் பெரிய ஊர்களிலும் ராமாயணம், பாரதம், கீதை உபந்யாசங்கள் வழங்கியுள்ளார்.

''அஹோபிலம் என்றால், படுபயங்கர மான குகை' என்று பொருள். இது 108 வைணவ திவ்ய க்ஷேத்திரங்களுள் முக்கியமானது. கருட பகவான் தவம் செய்து நரசிம்மரைத் தரிசித்த இடம் அஹோபிலம். நரசிம்மர் என்பதைத்தான் தமிழில் 'அழகிய சிங்கர்' என்கிறார்கள். அஹோபிலத்தில் முதன் முதலில் மடம் ஸ்தாபிக்கப்பட்டது 1398ல். முதல் ஜீயர் ஆதி-வன் சடகோப ஜீயர். இதுவரை நாற்பத்து நான்கு ஜீயர்கள் இந்தப் பீடத்தை பரிபாலனம் செய்திருக்கிறார்கள். அந்த நாற்பத்து நான்கு ஜீயர்களிலும், மிக நீண்ட காலமாக முப்பத்தைந்து வருட காலம் இப் பீடத்தில் அமர்ந்து கோலோச்சிய பெருமைக்குரியவர் அண்மையில் சித்தியடைந்த நாற்பத்து நான்காவது ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸ்வாமிகள்'' என்கிறார் புதிய ஜீயர்.

சித்தியடைந்த ஜீயரிடமிருந்து சென்ற வருடம் அக்டோபரில், சந்நியாசம் பெற்றுக் கொண்டவர் புதிய ஜீயர். அப்போதே தமக்குப் பின் இவர்தான் ஜீயராக பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆவணம் எழுதி வைத்து விட்டார் பெரியவர்.

புதிய ஜீயர் கல்கி வாசகர்களுக்கு அளித்த செய்தி :

''உலக மக்களுக்கு மன அமைதியையும், பரஸ்பர அன்பையும் தருவது பகவத் பக்தி ஒன்றுதான். ஒவ்வொருவருக்குள்ளேயும் பற்பல வேற்றுமைகள் இருந்தபோதிலும் கூட, யாவரும் பரஸ்பரம் நேசமனப்பான்மையுடன் வாழ முடியும். சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி ஒருவருக்கொருவர் நேசத்தோடு வாழ்ந்து, உலகத்துக்கு நன்மை விளைவிக்க வேணும்.''

- எஸ். சந்திரமௌலி

# ஆகஸ்ட் புரட்சிக்கு ஆலயமாம்; ஆட்ட மைதானத்துக்கு அபாயமாம்!



● லக்ஷ்மி சகல்



● வத்ஸல் ஷா

'வெள்ளையனே வெளியேறு' தினத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் பம்பாயில் சில பிரச்னைகளைக் கிளப்பி விட்டது. இந்தக் கோஷம் முதன் முதலில் 1942 - ஆம் ஆண்டு பம்பாய் ஆகஸ்ட் கிராந்தி (புரட்சி) மைதானத்தில் ஒலித்தது! இதே மைதானத்தில் சுபாஷ் சந்திரபோஸின் ஐ.என்.ஏ. படையைச் சேர்ந்த இருபது பெண் வீராங்கனைகளுக்குப் பாராட்டு விழா நடந்தது. இவர்களில் காப்டன் லக்ஷ்மி சகால், கமலா ஹீரா நந்தானி என்னும் இருவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தைப் பெற மறுத்து விட்டனர். லக்ஷ்மி பேசும்போது, ''நாம் பெற்ற சுதந்திரம் பொய்யானது. பண வெறி, அதிகார வெறி, ஜாதி, மத வேறுபாடுகள் நாட்டில் தலைவிரித்தாடுவதைப் பார்க்கவா சுதந்திரம் பெற்றோம்?'' என்று விரக்தி மீதுறக் குறிப்பிட்டார்.

இச் சம்பவம் நடப்பதற்கு முன்பு வேலையில்லா ஆலைத் தொழிலாளர்கள் வெறும் ஜட்டியுடன் இந்த மைதானத்திற்கு வர முயன்றபோது, அவர்களைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர்.

இந்தக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக மஹாராஷ்டிர அரசாங்கம் சில கோடி ரூபாய்ச் செலவில் இந்த மைதானத்தில் ஒரு நினைவாலயம் எழுப்ப இருக்கிறது. இப்பகுதி வாழ் சிறுவர்களின் ஒரே பெரிய விளையாட்டு மைதானமாக இதுநாள் இத்தனை நாள் இருந்து வந்தது. எனவே, இப்பகுதி மக்கள் இங்கு நினைவாலயம் உருவாவதை எதிர்க்கின்றனர். ''தேவையானால் கோர்ட்டுக்குச் செல்லவும் நாங்கள் தயார்!'' என்கின்றனர். ''இப்படி விளையாட்டு மைதானங்களில் கட்டடங்களை எழுப்பிக் கொண்டே போனால், ஒலிம்பிக் என்ன, லோக்கல் லெவலில் கூட இந்தியாவிற்கு ஒரு பரிசும் கிடைக்காது'' என்று ஒரு விளையாட்டு வீரர் கூறினார்.

## விசித்திர வழக்கு!



● குழந்தையைக் கடத்திய கொடியவர்கள்

அந்தேரி சன் - அன் - சீ (Sun-n-sea) கட்டட வாசிகள் பம்பாய் சிவில் நீதி மன்றத்தில் கொண்டு வந்த வழக்கு விசித்திரமானது. குதிரைகளின் பிடியிலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு இந் நீதி மன்றத்தில் இவர்கள் மனு கொடுத்துள்ளனர். இக்கட்டடத்திலேயே வசிக்கும் ரேஷ்மா கௌர் என்ற பெண்மணி வளர்க்கும் நான்கு குதிரைகளில் ஒன்று ஒரு சிறுவனின் கால்மேல் ஏறியதாலும், வேறு ஒன்று ஒருவரைக் கடித்து விட்டதாலும் இக் கட்டட வாசிகள் மிகுந்த பீதிக்கு உள்ளாகி உள்ளனர். அதனால் குதிரைகளை அங்கு நிறுத்தக் கூடாது என முறையிடுகின்றனர். ''மற்றவர்கள் தங்கள் வாகனங்களான கார்களை நிறுத்த இடம் ஒதுக்கப்படும்போது, என் வாகனமான குதிரைக்கு அது மறுக்கப்படுவது ஏன்?'' என்கிறார் இந்த ஜான்ஸி ராணி!

## சோகத்தில் முடிந்த கடத்தல் :

சிறுவன் வத்ஸல் ஷா கடத்தல் செய்யப்பட்ட ஜூலை 13 அன்றே இறந்து விட்டான் என்ற சோகச் செய்தி, ஆகஸ்ட் 10 - ம் தேதி அவனது சடலம் கிடைத்தபோதுதான் தெரிய வந்தது. அவனைக் கடத்திச் சென்ற மனீஷ் தக்கா, ராஜேஷ் தக்கா இருவரும் வத்ஸல் ஷாவைத் தூக்கத்தில் ஆழ்ந்த அளவுக்கு மிஞ்சி மயக்க மருந்து அளித்ததால் அவனை மீளாத்துயிலில் ஆழ்த்திவிட்டனர். இதை அவர்களே எதிர் பார்க்கவில்லை. அவனது சடலத்தை ஒரு கோணியில் போட்டு, காண்டிவிலியில் வாடகைக்கு எடுத்திருந்த ஒரு வீட்டின் சமையலறை மேடைக்கு அடியில் ஒளித்து விட்டனர். இருப்பினும் அவர்கள் தொடர்ந்து மீட்புப் பணத்திற்காக அவனது குடும்பத்தாரைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டிருந்ததால் பிடிபட்டனர்.

- அம்ருதா பார்த்தசாரதி

# "புகழுக்கு ஆசைப்பட்டுச் செயல்படுவதில் எனக்கு விருப்பமில்லை!"

## - நிதியமைச்சர் மன்மோகன் சிங் சிறப்புப் பேட்டி

தில்லி அரசுச் செயலகத்தின் பிரசித்தமான 'நார்த் பிளாக்'கின் முதல் மாடி. சரியாக மாலை 4:55க்கு, நிதியமைச்சரின் அறைக்குள், அவரது செயலர் பாட்டியா நாம் வந்திருப்பதைத் தெரிவிக்கிறார். வெண்மைப் புரட்சி செய்த டாக்டர் குரியன் அவரது அறையிலிருந்து வெளிவருகிறார்.

''25லிருந்து 30 நிமிடங்கள் வரை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்!'' என்று, கூடவே வந்த நிதியமைச்சக பொது மக்கள் தொடர்பு இயக்குநர் சாஹேப் சிங் நம்மிடம் கூற, உள்ளிருந்து அழைப்பு வருகிறது.

நிதியமைச்சர் மன்மோகன் சிங்கின் அறைக்குள் அழைத்துச் செல்லுகிறார் சாஹேப் சிங்.

பிரம்மாண்டமான அறை. தமது ஆசனத்திலிருந்து எழுந்து வந்து அறையின் நடுவே போடப்பட்டிருக்கும் சோபாவில் நம்மை உட்காரச் சொல்லி விட்டு, கை குலுக்கிப் புன்னகை செய்கிறார். அதிக உயரமில்லை. வெகு எளிமையான கதர் குர்த்தா - பைஜாமாவில், பந்தா எதுவுமே இல்லாமல், இருந்தார் நிதியமைச்சர்.

''நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். என் பேட்டிக்காக நேற்றுக் காத்திருந்ததில் உங்களின் உருப்படியான ஒரு மணி நேரத்தை வீணாக்கியதற்கு நான் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன். அப்படிச் செய்வதும் எனக்கு வழக்கமே இல்லை. ஜே.பி.சி. மீட்டிங்கில் உட்கார்ந்து விட்ட பிறகு, அது நீண்டு கொண்டே போய் விட்டது...''

மன்னிப்புக் கோரும் அவரது பண்பு சற்றே நம்மை நெகிழ வைக்கிறது. அந்த வாரத்திய 'கல்கி' இதழையும், சிறப்பு முத்திரை பதித்த பொன் விழா தபால் உறையையும், அவரிடம் கொடுத்து, 'கல்கி' பற்றி இரண்டு வரிகள் சொன்னதுமே, ''கல்கி இதழ் பற்றி நான் நன்கு அறிவேன்!'' என்று மகிழ்ச்சியோடு சொன்ன டாக்டர் மன்மோகன் சிங், ''உங்கள் கேள்விகளை ஆரம்பிக்கலாம்!'' என்றார் புன்முறுவலுடன்.

● ஆட்சி செய்பவர்களையும் சரி, மக்களையும் சரி, விலைவாசி ஏற்றம், மிகுந்த சங்கடத்தில் ஆழ்த்தி விடுகிறது. இதைக் குறைக்கவும் கட்டுப்படுத்தவும் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? இதில் வெற்றி கண்டீர்களா?

●● உண்மையைச் சொல்லுவதென்றால், நாங்கள் எதிர்பார்த்த அளவு வெற்றி, எங்களுக்குக் கிடைக்கவில்லைதான். நான் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் சொன்னேன் : பொருளாதாரச் சமநிலை ஒருமுறை குலைக்கப்பட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளைச் சீர்படுத்த 18 முதல் 24 மாதங்கள் ஆகும் என்றேன். இன்றைக்கு ஓரளவு மனநிறைவு தரும் அளவுக்கு விலைவாசி உயர்வு மட்டுப்பட்டிருப்பதையும், மேலும் சீராவதற்கான சூசகங்கள் இப்போதே தென்படுவதையும் நான் மகிழ்ச்சியோடு சொல்ல வேண்டும். இரண்டு 'டிஜிட்' விலைவாசி உயர்வுச் சதவீதக் குறியீடு, இன்றைக்கு 9.1%க்கு வந்திருப்பதை நீங்களே காணலாம்.

இந்த வருடம் மழை பொய்த்துப் போகாமல் - போகாது என்றே நம்புவோம் - பயிர்களுக்கு உதவுமானால், விலைவாசி உயர்வுக் குறியீடு இன்னும் கீழே இறங்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

● சரி, அதற்கான வழிமுறைகள் என்னென்ன கண்டிருக்கிறீர்கள்?

●● அடிப்படையாகவே, நம் நாட்டில் அரசாங்கம் அதிகமாகச் செலவழித்து வருகிறது. எனவே, முதலும் முக்கியமுமான வேலை நிதிப் பராமரிப்பில் கவனம் செலுத்தி, உற்பத்திக்கு உதவாத செலவினங்களைக் கட்டுப்படுத்துவதுதான். அடுத்தது நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவது. அ த ா வ து உபரி பட்ஜெட்



இல்லாவிட்டாலும் பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தை மட்டுப்படுத்துவது. மூன்றாவது, பொருள்கள் விநியோகத்தை மேம்படுத்துவது. ஆனால் இறக்குமதியில் சற்றே கடுமையான நெருக்கடி இருந்து வந்தது. இதனோடு ரூபாய் நாணய மதிப்புக் குறைவும் செய்ய நேரிட்டது. ஆனால் இப்போது பல கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருப்பதும், தாராளமயமாக்கல் கொள்கை காரணமாகவும், லைசன்ஸ்கள் விஷயத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலையை மாற்றியதும், தொழில்கள் பெருக மட்டுமல்லாது, உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

அடுத்ததாக, அதிக கிராமப்புறப் பகுதிகளுக்குப் பொது விநியோக முறையை விஸ்தரிப்பது. மிகவும் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகள் என்று பிரதமர் கண்டறிந்துள்ள சுமார் 1700 இடங்களில், அடிப்படைத் தேவையான பொருட்கள், தானியங்கள் எவ்வளவு தேவைப்படும் என்று கணக்கெடுத்து வருகிறோம். இது தவிர, நுகர்வோர் இயக்கத்துக்குத் தேவையான ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, நடுத்தட்டு மக்கள் அநாவசியமாகச் சிரமப்படுத்தப்படாமல் இருக்கக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம். இவை எல்லாம் நீண்ட கால அடிப்படையில் எடுக்கப்படும் முயற்சிகள்.

● மானியங்கள் கொடுக்கப்படும் விஷயத்தில் உங்கள் நிலை என்ன? எத்தனை காலத்துக்கு நீங்கள் இப்படிக் கொடுத்துக் கொண்டே இருப்பீர்கள்?

●● என்னைப் பொறுத்தவரை, இந்த மானியங்களைக் குறைக்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம். சென்ற ஆண்டு நான்



நிதியமைச்சராகப் பொறுப் பேற்ற போது, 91-92 ஆம் ஆண்டின் ஏற்று மதி மானியத்தில் 3,500 கோடி ரூபாயை எடுத்து விட்டேன். உர மானியத்தைக் குறைத்தேன். இன்னொரு முக்கிய அம்சம், மத்திய உணவுப் பொருள்கள் வழங்கலில் இருந்து வரும் மானியம். நம்முடைய பொது விநியோக அமைப்பில், எல்லா தரத்திலும் உள்ள மக்களும் இதன் பலனை அனுபவிக்கப் பார்க்கிறார்கள். இதையும் கூடுமானவரை சீராக்கப் பார்க்கிறோம். பொது விநியோக முறை அமைப்புக்கு வெளியே யாரெல்லாம் பொருட்களை வாங்க முடியுமோ, அவர்கள் அப்படி வாங்கினால் நல்லது. அப்படிச் செய்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளில் மானியத்தைக் கணிசமாகக் குறைத்து விட முடியும். ஆனால் அதற்கென்று எல்லாவற்றையும் துடைத்துப் போட்டு விட முடியாது. அத்தியாவசியமான உணவுப் பண்டங்கள் விஷயத்தில், பிரதமர் கருத்துப்படி, ஏழை மக்கள் பயனடையும்

விதத்தில், சில மானியங்களைத் தொடரத் தான் வேண்டும்.

மின்சாரம், நீர்ப்பாசனம், போக்கு வரத்து - இவை அத்தியாவசியமானவை; ஆனால் மாநிலங்கள் அளவில் நம் பொருளாதாரத்தை அதிகமாகப் பாதிப்பவை. மத்திய பொருளாதாரத்தில் ஒரு நிர்ப்பந்தத்தை உண்டாக்குபவை. இவற்றிலும் மானியங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் தான். ஆனால், மாநிலங்களை நாம் கேட்டுக் கொள்ளத்தான் முடியுமே தவிர, நிர்ப்பந்திக்க முடியாது!

● புதிய பொருளாதாரக் கொள்கையில் கணிசமான வெற்றி கிடைத்திருக்கிறதா?

●● ஆரம்பத்தில், புதிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்ட போது, பொருளாதாரச் சீர்குலைவைத் தடுத்து நிறுத்தும் குறுகிய காலத் திட்டக் குறிக்கோள் மட்டுமே வைத்திருந்தோம். நாங்கள் பதவிக்கு வந்த போது, இரட்டை இலக்க விலைவாசி உயர்வுக் குறியீட்டெண் இருந்தது. ஆகஸ்ட் 91ல் 17 சதவீதம் இருந்தது! இரண்டு வார இறக்குமதிக்குத் தேவையான அளவுக்கு மட்டுமே அந்நியச் செலாவணிக் கையிருப்பு இருந்தது. யாரும் நமக்கு இந்த நெருக்கடியான நிலையில் நிதியுதவி செய்ய முன்வரவில்லை. அயல்நாட்டில் வாழும் இந்தியர்களும், இங்கே அவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு போக ஆரம்பித்து விட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், அரசின் மீது நம்பிக்கையை உருவாக்கும் பணிதான் முக்கியமானதாகப் பட்டது. இப்போது ஆறு பில்லியன் டாலர்கள் அந்நியச் செலாவணி நம்மிடம் இருக்கிறது; இதில் 1.6 பில்லியன் டாலர்கள் என். ஆர். ஐ. எனப்படும் அயல்நாடு வாழ் இந்தியர்கள் போட்ட பணம் - 'இந்தியா பாண்ட்' பத்திரம் வாயிலாக. இன்டர்நேஷனல் மானிடரி ஃபண்ட், மற்றும் உலக வங்கியுடன் வெற்றிகரமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, கணிசமான நிதியுதவி பெற முடிந்தது. மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தேவைக்கான அந்நியச் செலாவணிக் கையிருப்பு இப்போது இருக்கிறது. விலைவாசி உயர்வுக் குறியீடு 9 சதவிகிதத்துக்கு இறங்கி விட்டது. இது இன்னும் குறையும் என்பது எங்கள் கணிப்பு.

சென்ற ஆண்டுத் துவக்கத்தில் தொழில் உற்பத்திப் பெருக்கம் இருக்கவில்லை. இப்போது அதுவும் அதிகரித்திருக்கிறது 4 சதவிகிதத்துக்கு மேற்பட்ட அளவில். ஜெனரல் கரன்சி ஏரியா எனப்படும் ஏற்றுமதித் துறை வட்டாரத்தில், டாலர் அளவுகோல் படி, எட்டு சதவிகித உயர்வு ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில், தேசிய வருமானத்தில் ரீ உயர்வைக் காண முடிந்தது. அடுத்த வருடம் இது இன்னும் வேகமாக உயர வழி இருக்கிறது. குறுகிய காலச் சீரமைப்பு, நல்ல பலன் அளித்திருக்கிறது. அகர வேக விலைவாசிப் பாய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; தேசிய வருமானத்தில் குறைவு ஏற்படவில்லை. பொருளாதார நிலைமையே மொத்தத்தில் ஒரு திருத்தமான கட்டமைப்பை எட்டியிருக்கிறது. ஆனால் இதன் முழுமையான முடிவுகள் இனிமேல் தான் நமக்குக் கிடைக்கப் பெறும். தொழில் - போட்டி, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தரமான பொருட்களையே உற்பத்தி செய்து விற்கும் அளவுக்கு நிலைமையை உருவாக்கியிருக்கிறது. வரிகள் சீரமைப்பு, முதலீடுகளில் புதிய சிந்தனை, அதிகாரங்களைப் பரவலாக்குதல், அநாவசியக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், ஆகியவை நிச்சயம் உற்பத்திப் பெருக்கத்துக்கு வழிவகுக்கும். சில பொருட்களுக்கு இருந்து வந்த தேவையற்ற கட்டுப்பாடுகளை நீக்கி விட்டதில், தொழிலதிபர்கள் தில்லிக்கு ஓடிவரும் நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது. அத்தியாவசியமான பல பொருட்களின் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அந்நிய முதலீடும் கணிசமாக உயரும். வரும் காலத்தில் அந்நிய முதலீடு என்பது ஹைட்ரோகார்பன் இண்டஸ்ட்ரீஸ், மின்சக்தி போன்ற முக்கியத் துறைகளில் அதிகரிக்கும்.

● இப்போது அதிகமாகப் பேசப்படும் விஷயம் - பங்குமார்க்கெட் சந்தை ஊழல் - அதாவது ஹர்ஷத் மேத்தா



"எவ்வளவோ இரகசியமாகச் செய்யும் நாம கள்ளச் சாராயம் காய்ச்சறது அரசாங்கத்துக்குத் தெரிஞ்சுடுச்சு!"

"எப்படிச் சொல்றீங்க அண்ணே?"

"தொழில் வரி கட்டச் சொல்லி நோட்டீஸ் வந்திருக்கு!"

- வேதபுரி எஸ். ரமேஷ்

## அடுத்த இதழில்...



●● சினிமாவில் பயங்கரவாதம்!

– கவர் ஸ்டோரி

விவகாரம். இதில் ரிசர்வ் வங்கியின் நிலை சரியானதுதானா? ஓரளவு ஊழலின் நுனி தெரிந்தபோதே செயல்பட ஆரம்பித்திருக்க வேண்டாமா?

●● உங்கள் கேள்வியில் தவறு ஏதும் இல்லை. ஆனால் நாடாளுமன்றக் கூட்டு கமிட்டி (JPC) அமைக்கப்பட்டு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டிலுமிருந்தும் முக்கியமான உறுப்பினர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு, இதை ஆராயும் முழு முயற்சியில் இறங்கி விட்ட பிறகு நான் எதையும் கூறுவது நியாயமாகாது. ரிசர்வ் வங்கியின் செயல்பாடு பற்றி நான் அன்றே நாடாளுமன்றத்தில் கூறி விட்டேன். இருந்தாலும், அதையும் மனத்தில் வைத்துக் கொண்டே சொல்லுகிறேன் : ரிசர்வ் வங்கியின் மேற்பார்வை அமைப்பு (சூபர்வைசரி ஃபங்ஷன்) இன்னும் அழுத்தமானதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இன்றைய தேதியில், நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் முடிவுகளுக்காக நாம் காத்திருக்கத்தான் வேண்டும். இந்த வருட முடிவுக்குள் அறிக்கையை அவர்கள் சமர்ப்பிக்கலாம். இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் எல்லாம் வெளியாகி விடப் போகிறது. எது உண்மை என்று அப்போது வெட்ட வெளிச்சமாகும். அதுவரை, இந்த விஷயத்தில் நான் எதுவும் கூறுவது, வரம்பு மீறிய செயலாகவே கருதப்படும்.

● ரிசர்வ் வங்கியில், இந்த ஊழலின் ஊற்றுக்கண்ணாக இருந்த பப்ளிக் டெட் ஆபீசின் தஸ்தாவேஜுகளை கம்ப்யூட்டர் அமைப்புக்கு மாற்றி விட்டீர்களா?

●● ஆமாம். அந்த வேலையைத் தொடங்கி விட்டோம். அந்த இலாகா ஊழியர்கள் யூனியனுடன் பேசி, அவர்கள் சம்மதமும் பெற்று விட்டோம்.

● நஷ்டமடைந்து வரும் தேசியமயமாக்கப்பட்ட சிறிய வங்கிகளை லாபமடையச் செய்யும் வகையில் இயங்க வைக்கப் போவதாகச் சொன்னீர்களே, ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா?

●● ஆமாம், நரசிம்மன் கமிட்டி அறிக்கைப்படி, நஷ்டமடைந்து வரும் சிறிய வங்கிகளை, சிறப்பாக நிர்வகிக்கும் பெரிய வங்கிகளுடன் இணைக்கும் ஆலோசனை இருக்கிறது. இது பற்றி இன்னும் தீவிரமாக விசாரித்து வருகிறோம். எப்படிச் செயல்படுத்துவது என்ற வழிமுறைகளையும் ஆராய்ந்து வருகிறோம். வங்கிகள் ஆரோக்கியமான போட்டிகளில் ஈடுபட்டு லாபமீட்டும் வகையில் இயங்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம் என்பதை இங்கு தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

● நரசிம்மன் கமிட்டி அறிக்கை பற்றி அறிந்திருக்கிறோம். அது என்ன அமிதாப கோஷ் கமிட்டி அறிக்கை?

●● வங்கிகளில் நடக்கும் முறைகேடுகள் பற்றிய ஆய்வு அறிக்கைதான் அமிதாப கோஷ் அறிக்கை. இதை நியமித்தது நான்தான். உலகம் முழுதும் வங்கிகளில் நடைபெறும் தில்லுமுல்லுகள் சிலவற்றைக் கேள்விப்பட்டு, அஞ்சியே இந்தக் குழுவை அமைத்தேன். சென்ற மாதம் இதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இப்போது ஆராய்ந்து வருகிறோம்.

● மாத வருமானக்காரர்களுக்கு ஒருவிதத்தில் உபகாரமாயிருந்த 80–cc சலுகைகளை பட்ஜெட்டில் எடுத்து விட்டீர்களே, நியாயமா? அதனால் மாநிலங்களுக்கும் அல்லவா சேமிப்பில் கிடைக்கும் பங்கு பாதிக்கப்பட்டது?

●● மாநிலங்களைப் பொறுத்தவரை நியாயமான பங்குக்கு மேலேயே அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறேன். அவர்கள் மீது அக்கறை காண்பித்தே இதைச் செய்திருக்கிறேன். மாநிலங்களுக்கு அதிகப்படியான நிதி மாற்றம் செய்வதில் நிதியமைச்ச

ரான நான் குறுக்கே நின்றதே இல்லை என்பதை ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

மாத வருமானக்காரர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் - குறிப்பாகக் கீழ்த்தட்டு, மத்தியதர வர்க்க மக்களுக்கு. நிதி ஆதாரத்தில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அதை நான் சரிக்கட்டியாக வேண்டும். வெறுமனே எல்லாரும் என்னைப் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்பதற்காக முடியாததை எல்லாம் தர, போலியான வாக்குறுதிகளை அள்ளி வீசி, பிறகு சங்கடத்தில் நாட்டையே சிக்க வைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்தினால், அதுவே பெரிய சாதனை. அதன் மூலம் கிடைக்கும் லாபத்தை, பலனை, மக்கள் அனுபவித்து, என்னை வாயார வாழ்த்துவதுதான் நிரந்தர மானது; நியாயமானது. நாட்டின் பொருளாதாரத்தை மனதில் கொள்ளாமல், சும்மா சலுகைகளையே வாரி வழங்கிக் கொண்டிருந்தேன் என்றால், நாட்டுக்கு நான் செய்யும் துரோகமாகவல்லவா இருக்கும்? அதை நான் ஒருநாளும் செய்ய மாட்டேன்.

● ஒருபுறம் வீடு கட்டும் பணிகளை முடுக்கி விடுகிறீர்கள். இன்னொருபுறம், அதனால் ஏற்படும் நஷ்டத்தை (வட்டி முதலிய) வீட்டு முத வீட்டு வருமானத்தில் குறைத்துக் கொள்ளத் தடை செய்து விட்டீர்களே, இது சரிதானா?

●● இதைப் பலரும் தவறாகப் பயன்படுத்துவதை நானே பல கேஸ்களில் கண்டேன். ரீஃபண்டு கிடைப்பதற்காகவே முறைகேடாக இந்தச் சலுகையைப் பலரும் பயன்படுத்துவதை அறிந்துதான் இதைச் செய்தேன். வீடு கட்டி ஏற்படும் ஆரம்ப கால நஷ்டத்தை, வேறு வருமானப் பகுதியில் குறைத்துக் கொள்ளுவதை நான் ஏற்க வில்லை. இது அரசுக்கு நிறையவே நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறது. இது நியாய மானதாகப்படவில்லை.

● சென்ற ஆண்டு வரை நீங்கள் ஓர் அரசு அதிகாரி, உலக அளவில் புகழ் பெற்ற நிர்வாகி, பேராசிரியர். ஆனால் உங்களை நிதி அமைச்சராகப் பிரதமர் நியமித்தார். உங்கள் எண்ணங்கள் அப்போது எப்படி இருந்தன?

●● செய்தி கிடைத்த போது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். என்னுடைய நாட்டுக்கு என்னால் முடிந்த அளவு கடமை ஆற்ற முடியும் என்ற சந்தோஷம் உண்டாயிற்று. அரசின் நிதிச் செயலர், ரிசர்வ் வங்கி கவர்னர், திட்டக் குழுத் துணைத் தலைவர் என்று பல பதவிகள் வகித்திருந்தாலும், இந்தப் பதவி உருப்படியாக நாட்டுக்கு ஏதாவது செய்ய முடியும் என்ற வாய்ப்பை அளித்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தேன். சில பொருளாதார மாற்றங்களை அறிமுகப்படுத்த முடியும்.... இதற்காக நான் பிரதமருக்கு என் நன்றியைத் தெரிவித்தாக வேண்டும். அவருடைய ஆசிகளுடன், அவருடைய வழிகாட்டுதலுடன் நிலைமையைச் சீரமைக்க முடிந்தது. இதில் எனக்குத் திருப்திதான். கடுமையான சவால்கள் காத்திருந்தாலும், அவற்றைச் சந்திக்கப் போதுமான திராணியை இது அளித்திருக்கிறது. சவால்களைச் சந்திக்கத் தயங்காதவன் நான். வாழ்க்கையே சவால்கள் நிறைந்ததுதானே? அவற்றைச் சந்திக்காமலா போகிறோம்?

**ம**ணியைப் பார்த்த போது, சரியாக 5:30. சரளமான நடையில் நிதியமைச்சர் விவரங்களை எடுத்து நம் முன் வைத்ததில் நேரம் கடந்ததே தெரியவில்லை.

''உங்கள் நேரத்தைக் 'கல்கி'யின் பேட்டிக்காக ஒதுக்கியதற்கு மிக மிக நன்றி!'' என்று எழுந்த போது -

நிதியமைச்சர் மன்மோகன் சிங் எழுந்து, மறுபடி முதல் நாள் சந்திக்க முடியாது போனதற்கு வருத்தம் தெரிவித்து, மன்னிப்புக் கோரி, கூடவே வந்து கதவைத் திறக்கிறார்.

அந்தப் பெருந்தன்மை ஒருக்கால் அவருக்கு இயல்பானதாக இருக்கலாம். ஆனால் அது நெஞ்சைத் தொடுகிறது.

- சாருகேசி

அட்டை வண்ணப்படம் - நன்றி :
'ஃப்ரண்ட் லைன்'
புகைப்படங்கள் : யாதவ்



''உங்க கணவர் நல்லவர்னு சொல்றீங்க; பிறகு ஏன் அவரை விவாகரத்து பண்ணினீங்க...?''

''நல்லவரா இருக்காரே, பாவம்னுதான்...!''

- சீர்காழி வி. ரேவதி

உங்களின் சேமிப்பு தொழில் வளத்தையும்
உங்கள் வீட்டின் வளத்தையும் பெருக்கும்!

# ''லில்லி'' உள்பாவாடைகள்

தயாரிக்கும்

## ''கரூர் P.R.C. கார்மெண்ட்ஸ்ஸாரின்''

தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குப் பயன்தரும்

''புதுமைத் திட்டம் எண். 2''ல் சேர்ந்து பயன்பெறுங்கள் :

நமது நாட்டின் பல மாநில மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்புதுமைத் திட்டம் 17.9.92 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் :**

★ ரூ. 200/- ஐ D. D. அல்லது M.O. மூலம் ''P.R.C. கார்மெண்ட்ஸ்'' என்ற எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.

★ நீங்கள் செலுத்திய ரூ. 200/- ஐ $5\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு பிறகு திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் கரூர் கிளை ''கரூர் வைஸ்யா பாங்க்''-ன் ''காயத்ரி கேஷ் சர்டிபிகேட்'' (GCC) ஒன்றை உடனடியாக உங்கள் பெயருக்கு நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள். இதனால் நீங்கள் பெறுவது உங்கள் தொகைக்கு முழு பாதுகாப்பு.

★ நீங்கள் பணம் செலுத்திய முதலாண்டு முடிவிலிருந்து ஆண்டுக்கு ஒரு முறை வீதம் ரூ 84/- மதிப்புள்ள இரண்டு ''லில்லி'' உள்பாவாடைகள் (NORMAL SIZE) பதிவுத் தபாலில் எந்த செலவுமில்லாமல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மொத்தம் 10 'லில்லி' உள்பாவாடைகள் (மொத்த மதிப்பு ரூ. 420/-) பரிசாகப் பெற்றுக் கொள்கிறீர்கள்.

★ $5\frac{1}{2}$ ஆண்டுகள் கழித்து நீங்கள் திரும்பப் பெறும் ரூ. 200/-ம் மேலும் ஒரு பரிசாக ரூ. 100ஐயும் பெற்றுக் கொள்கிறீர்கள்.

★ இப்பொழுது பாருங்கள்! நீங்கள் செலுத்திய ரூ. 200/- $5\frac{1}{2}$ ஆண்டுகளில் ரூ. 720/- மதிப்புடையனவாக உங்களுக்கு முற்றிலும் பயன்தரத்தக்கவையாக மாறுவதை!

பங்கு கொள்வீர்! பயன் பெறுவீர்!

**நினைவிருக்கட்டும், இத்திட்டத்தில் பங்கு பெறக் கடைசி தேதி : 17.09.1992**

------------- பணம் அனுப்ப வேண்டிய முகவரி : -------------

போன் : 21946

## P.R.C. கார்மெண்ட்ஸ்

**26, பிரதட்சணம் ரோடு, Aபிளாட், கரூர் – 639 002.**

இது ஒரு ''பாரதப்பிரதமரின்'' படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1984 முதல் கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவனமாகும்.


குறிப்பு :- 1. நீங்கள் பணம் செலுத்தும் பொழுது உங்கள் பெயர், முகவரி மற்றும் போஸ்டல் பின்கோடு எண்ணையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

2. ஸ்பெஷல் சைஸ் (ஃப்ரீ சைஸ்) வேண்டுவோர் அதற்குண்டான விலை வித்தியாசத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பெங்களூர் ரிப்போர்ட்

# வீரப்பன் விரித்த வலை!

சமீபத்தில் கர்நாடக மக்களைக் குலுக்கிய சம்பவம் ஹரிகிருஷ்ணனின் மரணம் தான். சந்தனக் கடத்தல் வீரப்பனால் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட மைசூர் எஸ். பி. ஹரிகிருஷ்ணனின் மறைவினால் போலீஸ் இலாகா மிகத் திறமைவாய்ந்த ஒரு பெரிய போலீஸ் அதிகாரியை இழந்து விட்டது. தைரியமும் மதிநுட்பமும் வாய்ந்த மிகச் சில அதிகாரிகளில் அவரும் ஒருவர். பத்து வருடங்களுக்கு முன்னால் கபாலி தியேட்டரை ஒட்டிய கங்காராம் பில்டிங்ஸ் விழுந்த போது உயிரை துச்சமென மதித்து இடிபாடுகளுக்குள் புகுந்து சாகக் கிடந்த பல உயிர்களைக் காப்பாற்றியவர் இந்த எஸ். பி. இவரது தலைமையில்தான் மீட்புப் பணியே நடந்தது. வீரப்பனின் பயம் காரணமாக மைசூர் மாவட்ட போலீஸ் தலைமைப் பொறுப்பை ஏற்கப் பல அதிகாரிகள் தயங்கிய போது, தாமே முன்வந்து அந்தச் சவாலை ஏற்றவர் இவர். ''எனக்குச் சவால்களைச் சந்திப்பது எனில் விருப்பம் அதிகம்'' - என்று பத்திரிகையாளர்களிடம் சொன்னார். இப்படிப்பட்ட தைரியமும் திறமையும் உள்ள அதிகாரி, வீரப்பன் விரித்த வலையில் இவ்வளவு சுலபமாய் எப்படிப் போய் விழுந்தார்?



● சூரியகாந்திச் செடியைக் குதறிவைக்கும் வண்டுகள்...

வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த கமல் நாயக் என்பவன் போலீஸ் 'உளவாளியாக' மாறி, வீரப்பன் கூட்டம் பற்றிய 'தகவல் களை'த் தருவது போல் தந்து, இவர்களைக் கூட்டிச் சென்று பலியாக்கி விட்டான் என்பது செய்தி.

'யானைத் தந்தங்களை விற்கப் போகிறான் வீரப்பன். வியாபாரி போல் வந்து, பேரம் பேசுவது போல் பேசி, மொத்தக் கூட்டத்தையும் வளைத்து விடுங்கள்' - என்று கமல்நாயக் சொல்லியதை நம்பி, சிவில் உடையில் ஹரிகிருஷ்ணனும் மற்ற அதிகாரிகளும் ஒரு அம்பாசிடரிலும் அவர்களைத் தொடர்ந்து டிரக் ஒன்றில் மற்ற போலீசாரும் செல்ல... குறிப்பிட்ட இடம் வந்ததும் காரை மேலே போக விடாமல் நிறுத்தி பதுங்கு குழிகளிலிருந்த வீரப்பனும் அவனது ஆட்களும் கமல்நாயக் ஒருத்தனைத் தவிர மற்ற ஆறு பேரையும் கோரமாய்ச் சுட்டுக் கொன்று விட்டார்கள் என்ற செய்தியைப் பல அதிகாரிகளே நம்பத் தயாரில்லை.

இப்போது வேறொரு செய்தி வந்திருக்கிறது. யானைத் தந்தம் வியாபாரம் எல்லாம் ஒன்றுமில்லை. 'என்னுடைய மனைவி கர்ப்பமாயிருக்கிறாள். மருத்துவ வசதி முதல் பல வசதிகளும் தடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே சரணடைய விரும்புகிறேன்' -என்று கமல்நாயக் மூலம் வீரப்பன் செய்தியனுப்பியதாகவும் அதை நம்பியே ஹரிகிருஷ்ணன் சென்றார் என்றும் கூறுகிறது இப் போதைய செய்தி.

உண்மை இன்னமும் விளங்கியபாடில்லை.

ஆனால் ஒரு போலீஸ் அதிகாரியின் சவ ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதும் பல மாவட்டங்களில் அடையாளக் கடையடைப்பு நடத்தியதும் இதுதான் முதல் தடவை.

கர்நாடகத்தில் புதிதாக ரேஷன் கார்டுகள் விநியோகிக்கப்படவிருக்கின்றன. ஏற்கெனவே தரப்பட்டிருக்கும் ரேஷன் கார்டுகளுக்கான ஆயுளே இன்னமும் இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்கும் போது,

இப்போது புதிய ரேஷன் கார்டுகள் வழங்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவசியம் அரசியல் மூலம் வந்திருக்கிறது. புதிதாக வழங்கப்படவிருக்கும் கார்டு களின் அட்டையில் இந்திரா காந்தி யின் படத்தை அச்சிட்டுத் தரப் போகிறார்களாம். குடும்பத்திற்கு ரேஷன் தருவதே அன்னை இந்திரா காந்தியால்தான் என்று பாமரர் களை நம்பச் செய்து வோட்டுப் பிடுங்குவதற்கு இந்த உத்தி. இதனை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகப் போவதாகச் சில கன்ஸ் யூமர் இயக்கங்கள் எச்சரித்துள்ளன.


● கலவரத்தில் பாதிக்கப்பட்ட பெண்மணி

பெங்களூரில் ஏற்படும் சாலை விபத்துக்களில் சிக்கிக் கொள்கிறவர்களைப் பற்றி விசாரித்து அவர்களின் குடும்பங்களுக் குத் தகவல் தெரிவிக்கவும் உடனடியாகச் சில உதவிகளைச் செய்யவும் முன்வந் துள்ளது ஏரிஸ் என்ற தனியார் நிறுவனம். பெங்களூர் நகரப் போக்குவரத்துப் போலீஸாரும் இந்த நிறுவனத்துடன் சேர்ந்து ஒத்துழைக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள தனி யார் நிறுவனங்களும் இம்மாதிரி வாலண்டரி உதவிகள் செய்வதற்குத் தாமா கவே முன்வரலாமே...

கன்னட நடிகர் ராஜ்குமாரின் திரைப் படம் ரிலீசானதை முன்னிட்டு அவர் ரசிகர்கள் நடத்திய ஊர்வலத்தின் போது தமிழர்கள் பகுதிகள் தாக்கப்பட்டதும், பல வீடுகள் தீக்கிரையாக் கப்பட்டதும், கல வரத்தில் பாதிக்கப் பட்ட சாமுவேல் என்ற ஒருவர் மரண மடைந்ததும் ஏற் கெனவே தெரிந்த விஷயம்.


● ஹரிகிருஷ்ணன்

இம்மாதிரி தாக்கு தல்கள், கடந்த பத்து வருடங்களாகவே நடைபெற்று வரும் ஒன்றுதான். ராஜ் குமாரின் ஒவ்வொரு பட ரிலீசின் போதும் அவரது ரசிகர்கள் ஊர்வலம் வருவதும் அந்த ஊர்வலத்தில் கல்லோ செருப்போ வந்து 'விழுவதும்', 'டென்ஷனாகும்' ரசிகர்கள் தமிழர் வீடுகளையோ கடை களையோ அடித்து நொறுக்குவதும் தவறாமல் நடைபெறும் சம்பவம்தான். இதுபற்றிக் கண்டு கொள்ளாமல் இருப்ப தும், விஷயம் அளவுக்கு மீறிப் போய் விட்ட பிறகு சாவ காசமாய் 'என்னுடைய ரசிகர்கள் நடத்திய ஊர்வலத்திற்கும் எனக் கும் சம்பந்த மில்லை' - என்று ஒரு அறிக்கை விடுவதும் ராஜ்குமாரின் ஸ்பெ ஷாலிடி.

இந்த முறையும் வன்முறையும் கலவர மும் பெரிதாகத் துவக்கப்பட்ட போது, உடனடியாகத் தலையிட்டு, தமிழர்களுக் கும் அவர்களின் உடைமைகளுக்கும் வீடு களுக்கும் பெரிதான சேதம் வராமல் தடுத் தது, அரசாங்கமோ, போலீஸோ அல்ல... மழை. கடுமையான மழை வந்து கலவரம் மேலும் பரவாமல் தடுத்து விட்டது.

பார்த்தீனியம் விஷச் செடியை அழிப் பதற்கு வெளிநாட்டிலிருந்து ஒரு பூச்சியை இறக்குமதி செய்தார்கள் விஞ்ஞானிகள். பார்த்தீனியச் செடியின் விதைகளை இந்த Mexican Beetles என்ற பூச்சிகள் சாப்பிட்டு விடுவதால் இந்தத் தாவரங்கள் பரவாமல் தடுக்க முடியும் என்பது தாவரவியல் வல்லு நர்களின் கணிப்பாக இருந்தது. சில நாடுகள் இந்த முறையில் வெற்றியும் அடைந் துள்ளன. இப்போது இந்த வண்டுகளால் வேறொரு ஆபத்து வந்திருக்கிறது. சூரிய காந்திச் செடியின் மீது இந்த வண்டுகளுக்கு 'மோகம்' ஏற்பட்டு, அந்தச் செடிகளின் மீது குறிவைத்துப் படையெடுக்க ஆரம்பித்திருக் கின்றன. இது தொடர்ந்தால் சூரியகாந்திப் பயிருக்கு ஆபத்து உருவாகலாம்.... எனவே இந்த வண்டுகளை இறக்குமதி செய்வதற்கு உடனடியாகத் தடைவிதிக்க வேண்டும் என்று கர்நாடக அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது Centre for Science and Technology மையம். தலைவலி போனால் திருகுவலி வரும் என்பார்களே இதுதான் போலும்...

– பெர்னாண்டஸ்


முதலமைச்சர்னா என்ன, கொம்பா முளைச்சிருக்கு? என்னைப் போலத்தான் நீயும்!
தமிழகத்தில் காம-ஆட்சிக்கு முயற்சி
மூப்பனார்
வாழப்பாடி
ஐய்யய்யோ... கருணாநிதி உட்கார நாற்காலி தயார் பண்றாங்களா...!
ஷூட்டிங் நடக்குதுன்னு தெரியலே? இதெல்லாம் எடுத்திட்டுப் போ... அழகா ஒரு ஃபைல்ல, 'பூரண மதுவிலக்கு'ன்னு எழுதிக் கொண்டாங்க! வை! ஒரு செட்டப்பா இருக்கட்டும்!
நீங்க நல்லா இருக்கணும்
டேக் ஒன்...



கல்கி



1992
செப்டம்பர் 6
மலர் : 51
இதழ் : 6
ஆங்கீரச
ஆவணி 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

# (ஆ)பாச அரசியல்

'மலிவு விலை மதுக் கடைகளை மூடி விட்டேன்' என்று மார்தட்டிய கையோடு, ஏராளமான அளவில் புதிய ஒயின் ஷாப்புகள் திறக்கத் திட்டமிட்டதே ஆபாசம். அதுவும் போதாதென்று அவற்றில் பார்கள் நடத்தவும் அனுமதி வழங்கி, கள்ளச் சாராயம் பெருக்கெடுக்கவும் வழிவகுத்தாகி விட்டது. இப்போது மதுவிலக்குப் பிரசாரத்துக்காக அரசு மானியத்துடன் சினிமா படமாம்; அதில் முதல்வரே மேக்-அப் போட்டு நடிப்பாராம்! மக்கள் காதிலே பூ சுற்றுகிற இந்தக் காரியம், ஆபாச அரசியல் நெ. ஒன் ஆகும்.

கர்நாடகத்திலே பங்காரப்பாவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர்களில் முதன்மையானவரான வீரப்ப மொய்லி, "முதல்வர் என்பவர் சம அந்தஸ்துள்ள அமைச்சர்களில் முதலில் இருப்பவரே தவிர, அவருக்கு ஒன்றும் சிறப்பு அதிகாரங்கள் கிடையாது" என்கிறார். "உண்டு" என்று நிரூபிப்பதே போல் மொய்லியிடமிருந்து கல்வித் துறையைப் பறிக்கிறார் பங்காரப்பா. நாளைக்கு மொய்லியே முதல்வராக வந்து விடுவதாக வைத்துக் கொண்டால், சம அந்தஸ்து ஃபார்முலாவை அமுல்படுத்தவா போகிறார்? முதல்வர் மாறும் போது, சூத்திரமும் மாறி விடாதா? இதற்கிடையில் மூன்றாவது ரவுண்டு குத்துச் சண்டைக்குக் கர்நாடகக் களம் தயாராகிறது!

இந்தக் கர்நாடக காங்கிரஸ் ஆபாச அரசியலுக்குத் தமிழக காங்கிரஸின் ஆபாச அரசியல் சளைத்ததல்ல என்று நாளொரு பாய்ச்சலும் பொழுதொரு சலாமுமாக நிரூபித்துக் கொண்டிருக்கிறார் வாழப்பாடியார். இவர் பாய்ச்சல் மூப்பனார் கோஷ்டி மீது; சலாம் யாருக்குச் சமர்ப்பணம் என்று கூறத் தேவையில்லை. "எனக்கும் இங்கே காங்கிரஸ் பதவிக்கு வரவேண்டும் என்றுதான் ஆசை; ஆனால் அதற்கு முன் தி.மு.க.வை ஒழித்துக் கட்ட வேண்டும்; அதற்காகத்தான் அ.தி.மு.க. முதுகில் சவாரி" என்று நொண்டிச் சமாதானம் சொல்கிறார். இவருக்கு தி.மு.க. ஒழிப்புத் திட்டத்தை விட முக்கியமானது, மூப்பனார் கோஷ்டி ஒழிப்புத் திட்டம் தான். அதற்காகத் தமிழக காங்கிரஸின் முதுகெலும்பை உருவி, ஜெயலலிதா பாத கமலங்களில் சமர்ப்பித்து அடிமைப்பட்டுப் போய்க் கிடக்கிறார்.

"விடுதலைப் புலிகளுடன் ஜெயலலிதாவுக்கு உறவு; பாரிஸில் பேச்சு வார்த்தை" என்று வெடிக்காத, நமுத்துப் போன பட்டாசை வெடிகுண்டு என்று எண்ணிப் பற்றவைக்கிறார் சுப்பிரமணியம் சுவாமி. இவருடைய ஆபாச அரசியலில் இவர் ஒருவரைத் தவிர மற்ற எல்லாருமே முட்டாள்கள்! இந்த அதிமேதாவி இனி தமிழகத்தையே தமது தலைமையகமாகக் கொண்டு இயங்கப் போகிறாராம். பாவம், தமிழர்களின் தலையெழுத்து அப்படி இருக்கிறது!

கருணாநிதி, ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீச, ஜெயலலிதா பதிலுக்குக் கருணாநிதி மீது விசாரணைக் கமிஷன் நியமித்தாகி விட்டது. பிறகென்ன, ஆபாச அரசியல் அம்புகள் இருபக்கமும் தாராளமாகப் பாய வேண்டியதுதானே!

இந்த ஆபாச அரசியலுக்கெல்லாம் உச்சகட்டமாக, "நடராஜன் எம்.பி. பதவி கேட்டார்; நான் தர மாட்டேன் என்றதும் என் ஆட்சியையே கவிழ்க்க முயற்சி செய்தார்; அவருக்கு முதல்வர் ஆக ஆசை!" என்று குற்றம்சாட்டுகிறார் ஜெ. "என் மனைவியும் குடும்பமும் ஜெ. வீட்டிலேயே இருக்க, நான் எப்படி சதி பண்ண முடியும்? கனவிலும் துரோகம் பண்ண மாட்டேன்!" என்று பதில் அறிக்கை விடுகிறார் நடராஜன். ஊர் சிரிக்கிறது; உலகம் சிரிக்கிறது என்றால் இதைவிட வேறு எதற்காக இருக்க முடியும்?

இத்தகைய நாலாந்தர அரசியல்வாதிகளிடையே சிக்கி, இன்று தேசமே திண்டாடுகிறது. மூச்சு முட்டித் திணறுகிறது. அதற்குப் பிராணவாயு அளித்துக் காப்பாற்றுவார் யார்? நல்ல மனம் படைத்த அறிஞர்கள், அப்பழுக்குச் சொல்ல முடியாதவர்கள், மக்களின் மதிப்பிலே உயர்ந்தவர்கள் நாலே நாலு பேர் திக்குக்கு ஒருவராகப் புறப்பட்டு மையத்துக்கு வந்து கைகுலுக்கினால் போதும். பதவி ஆசை இன்றி, ஆலோசனை மையமாகச் செயல்பட்டாலே போதும். இத்தகைய குழு ஒன்றுதான் அரசியல் தலைவர்களின் மனச்சாட்சியை உசுப்பி விட இயலும். ஆபாச அரசியல், மக்கள் மீது பாச அரசியலாக மாற ஓர் ஆரம்பம் ஏற்படும்.

டூன் ஸ்கூல் :

# ராஜீவ் படித்த பள்ளிக்கூடம்



* நுழைவு வாயில்

"பெங்களூரிலிருந்து புறப்பட்ட ஒரு ரயில் வண்டியில், ஒரு விஷமக்காரப் பையன், சின்னதாக ஏதோ ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டிருந்தவன், 'டபக்' கென்று அதை வாயில் போட்டுக் கொண்டு விட்டான். பையனின் பெற்றோர், பயந்து போய் ஓவென்று கூச்சலிட ஆரம்பித்து விட்டனர். வேறு ஒரு கம்பார்ட்மெண்டிலிருந்த டாக்டர் ஒருவர் வந்து பார்த்து, ஆன மட்டும் முயற்சி செய்தார். ஊகும்! ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், பரபரப்புக்குக் காரணத்தை அறிந்த ஒரு இளைஞன் குழந்தையிடம் ஓடி வந்தான். அவன் நேவல் அகடமி பயிற்சிக்காகப் பயணம் மேற்கொண்டவன். குழந்தை படுகிற அவஸ்தையைப் புரிந்து கொண்டான். மெல்ல அவனை அப்படியே தன் மடி மீது குப்புறக் கிடத்தினான். மெதுவாக நடு முதுகில் தட்டித் தட்டி, குழந்தை விழுங்கிய பொருளைத் துப்பச் செய்தான். சக பயணிகளும், குழந்தையின் பெற்றோரும் கலவரம் நீங்கி, சந்தோஷப்பட்டார்கள். 'இந்த வித்தையை நீ எங்கேயப்பா கற்றுக் கொண்டாய்?' என்று கேட்டார்கள். 'இந்த முதல் உதவி எங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் கிடைத்த பயிற்சி. நான் படித்தது டூன் ஸ்கூல்' என்றான் இளைஞன் பெருமையுடன்!"

சொன்னவர் : துணைத் தலைமை ஆசிரியர் வோரா. (தலைமை ஆசிரியர் தாஸ் வெளியூர் சென்றிருந்தார்.)

"முதலுதவி மட்டுமல்ல; ஓவியம், சிற்பம், மண்பாண்டம் வனைதல், தச்சு வேலை, மெஷின் ஷாப், லேத் பயிற்சி, இந்திய, மேற்கத்திய இசைப் பயிற்சி, கம்ப்யூட்டர், மலையேற்றப் பயிற்சி, உடற் பயிற்சி, எல்லாம் இங்கே சொல்லிக் கொடுக்கிறோம்!" என்றார் வோரா.

வோரா 1959 முதல் இங்கே ஆசிரியராக இருக்கிறார்.

"ராஜீவும் சஞ்சய்யும் என்னிடம் கணிதம் படித்தார்கள். பிறகு ராஜீவின் பிள்ளை ராகுல் மூன்று வருடங்கள் இங்கு படித்தார். செக்யூரிடி கெடுபிடி காரணமாக மேற்கொண்டு அவரால் இங்கே தொடர முடியவில்லை...."

"ராஜீவ் எப்படி?"

"நல்ல மாதிரி. அமைதியான மாணவர். படிப்பில் ஓகோ என்று இல்லாவிட்டாலும் குட் ஸ்டூடண்ட்!"

**ப**ள்ளி அமைந்திருக்கும் இடமே ரம்மியமாக இருக்கிறது - நூற்றுக் கணக்கான மர வகைகளுடன். சுமார் எழுபது ஏக்கர் பரப்பளவில், விளையாட்டு மைதானமும், கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்கும் சிறு சிறு பங்களாக்களுமாக விஸ்தாரமாக இருக்கிறது. (முதலில் வன ஆராய்ச்சி மையம் இங்கேதான் இருந்ததாம்.)

"எப்போது இந்தப் பள்ளி ஆரம்பிக்கப் பட்டது? யார் ஆரம்பித்தார்கள்?"

வோரா சொல்லத் தொடங்கினார் :

* வோரா



''டி.ஆர். தாஸ், எஸ்.ஆர். தாஸ் என்ற சகோதரர்கள் கல்கத்தாவிலிருந்து வந்து, 1935 - ல் இதை ஆரம்பித்தார்கள். இங்கிலாந்திலிருக்கும் பப்ளிக் ஸ்கூல் மாதிரியே இங்கேயும் நடத்த வேண்டும் என்று அவர்களுக்கு ஆசை. இதற்காக 'இந்தியன் பப்ளிக் ஸ்கூல் சொசைடி' என்று ஓர் அமைப்பை நிறுவினார்கள். இது மாதிரி நிறையப் பள்ளிகளை நாட்டில் தொடங்க வேண்டும் என்பதுதான் சகோதரர்களின் விருப்பம். ஆனால் அவர்களில் ஒருவர் இறந்து விடவே, நிதிக்குத் தட்டுப்பாடு உண்டாயிற்று. அதனால் இதை ஒட்டி இருந்த கர்னல் ஸ்கின்னர் என்பவரின் இடத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, பள்ளியை ஆரம்பித்தார்கள்.

''முதல் தலைமை ஆசிரியர் ஆர்தர் ஃபோர்ட். இங்கிலாந்துக்காரர். அதற்குப் பிறகு சேர்ந்தார் மார்ட்டின். 48 - ல் ஃபோர்ட் ஓய்வு பெற்றதும் மார்ட்டின் அந்தப் பதவிக்கு வந்தார். இவர் 65 - ல் ரிடயர் ஆகியும், இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்லவில்லை; இங்கிலாந்தில் நடந்து வந்த புகழ் பெற்ற பப்ளிக் ஸ்கூல்களான ஹீடன், ஹேரோ, வின்செஸ்டர் இவற்றின் நல்ல அம்சங்களை எல்லாம் அப்படியே இங்கே அமல் செய்தார் ஆர்தர் ஃபோர்ட், அதைத் தொடர்ந்தார் மார்ட்டின். முன்பு சீனியர் கேம்ப்ரிட்ஜ் தகுதிப் பரீட்சைக்குத் தயார் செய்தோம். இப்போது இந்தியன் ஸ்கூல் சர்ட்டிபிகேட் (ISC) தேர்வுக்கு அனுப்புகிறோம், பத்தாவதுக்கும், ப்ளஸ்-டூவுக்கும்.''

**ப**டிப்பதற்கும், படுப்பதற்கும் தனித் தனி வசதி கொண்ட அறைகள். 575 மாணவர்கள். 44 ஆசிரியர்கள். (ஆசிரியர் - மாணவர் விகிதம் 1 : 13). பள்ளியில் படிக்கிற, வேலை பார்க்கிற எல்லாருக்கும் தங்க இடம் உண்டு.

ஆறரை மணிக்கு உடற் பயிற்சிகளுடன் ஆரம்பித்து, இரண்டு பீரியட்கள் முடிய 8:55 ஆகிறது. 9 மணிக்குக் காலை உணவு. பிறகு மூன்று பீரியட்கள். பிறகு 25 நிமிட இடைவேளையில் பழங்கள் சாப்பிடலாம். மறுபடி இரண்டு பீரியட்கள். அப்புறம் மதிய உணவு. அதையடுத்து 45 நிமிடம் முதல் ஒரு மணி நேரம் வரை கட்டாய ஓய்வு. (கோடையில் இது இரண்டு மணி நேரமாக இருக்கும்.) பிறகு STA எனப்படும் ஸ்பேர் டைம் ஆக்டிவிடி - சமூக வேலைகள்; 4:15 க்குத் தேநீர். 4:30 க்கு விளையாட்டுப் பயிற்சிகள். பிறகு குளியல். 7:30 மணிக்கு இரவுச் சாப்பாடு. இது முடிந்ததும் சுமார் ஒன்றரை முதல் 3 மணி நேரம் படிப்பு. பத்து மணிக்குள் விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு விடும்! விடுமுறை நாட்கள் குறைவுதான்.

பள்ளியிலேயே ஆம்புலன்ஸ் வண்டி இருக்கிறது, கேட்கிறவர்களுக்கு உதவுவதற்காக.



ட்ரெக்கிங், சைக்கிளிங், ரிவர்-ஸ்போர்ட்ஸ் எல்லாவற்றிலும் பயிற்சி அளிப்பதால் விடுமுறைகளில் பக்கத்து வனங்களில் போய் நான்கு இரவுகள் தங்குகிறார்கள் மாணவர்கள். ஒவ்வொரு ஜூனியருக்கும், ஒவ்வொரு சீனியர் பொறுப்பு. பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி எல்லாவற்றுக்கும் போய் வந்து விடுவார்கள்.

''உத்தர காசி பூகம்பத்தின் போது, சென்ற வருடம், முதன் முதலில் அங்கே விரைந்த முதல் உதவிக் குழு எங்கள் மாஸ்டர்கள்



* கலைப் பயிற்சி மண்பாண்டத் தயாரிப்பு

* அமைதியான நூலகத்தில்

மூன்று பேரும், மாணவர்கள் எட்டுப் பேரும்தான். மலையேறும் பயிற்சி அவர்களுக்கு இருந்ததால்தான் அந்த இடத்தில் அவர்கள் தைரியமாகப் பணியாற்ற முடிந்தது...... அதுவுமல்லாமல் டேராடூனுக்குச் சற்று வெளியே இருக்கிற கிராமங்களுக்குச் சென்று உதவுவது இவர்களுக்கு வழக்கம் தான்!'' என்றார் வோரா.

அழகான நூலகம். மாணவர்கள் ஆர்வத்துடன் அவற்றைப் பயன்படுத்தவும் செய்கிறார்கள்.

நாடகவகுப்புக்கள்; பேச்சு வகுப்புக்கள், கட்டுரைப் பயிற்சி வகுப்புக்கள் என்று அறிவுக்குச் சவால் விடும் வகுப்புக்களும் உண்டு.

நோட்டீஸ் போர்டில் மாணவர்களின் புகைப்படத் திறமையைப் பறைசாற்றும் புகைப்படங்கள் பதிக்கப்பட்டிருந்தன. சிலர் வெளிநாடு சென்றிருந்த போது எடுத்தவை. முக்கியமான அரசியல் செய்திகளின் நியூஸ் பேப்பர் தொகுப்பு, படத்துடன் மாட்டியிருக்கிறார்கள் - மாணவர்களே. அன்றைய வானிலை அறிக்கையுடன், அதிகபட்ச, குறைந்தபட்ச தட்பவெப்ப நிலை. போதை மருந்துகள் அபாயத்தை எச்சரிக்கும் பயங்கரமான போஸ்டர்கள் - விதவிதமாக.

''எதற்கு இத்தனை ஏராளமான போஸ்டர்கள்?''

''இங்கே மாணவர் யாரும் போதை மருந்துக்கு அடிமை அல்ல. ஆனாலும் எச்சரிக்கைக்காகத்தான் இவை!''

உச்சியில் மாதா கோயில் மணி மாதிரி இருக்கிறது. ஒவ்வொரு பீரியட் முடியும் போதும் அதை அடிக்கும் போது, முதல் தளமே அதிர்கிறது. ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்குச் சள சளவென்று பேசிக் கொண்டே மிக மகிழ்ச்சியாகக் கலகலவென்று போகும் மாணவர்களில் -

நீபக் தேஷ்பாண்டே என்ற மாணவரிடம் பேசினோம்.

''உங்கள் பள்ளிக்கூட வாழ்க்கை இங்கே எப்படி இருக்கிறது?''

''சந்தோஷமாக இருக்கிறது. உற்சாகமாக இருக்கிறது.''

''உண்மையாகவா?''

''மற்ற எல்லோரையும் வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்களேன்?'' என்றான் நீபக் புன்னகையுடன்.

''என்ன ஃபீஸ்?''

''வருடத்துக்கு 22,000 ரூபாய். மற்ற சில பள்ளிகளில் 30,000 ரூபாய் வாங்கும் போது இது குறைச்சல்தான்!''

பேட்டி, கட்டுரை : **சித்தார்த்**

புகைப்படங்கள் : **மேலா ராம் அண்ட் சன்ஸ், டேராடூன்**


ஆரோக்யமான, செழுமையான நீண்ட கூந்தல் அளிப்பது

**குணு**

**கூந்தல் தைலம்**

- இயற்கை தரும் அதி அற்புத மூலிகைகள்.
- கேசத்திற்கு செழுமையூட்ட தூய தேங்காய் எண்ணெய்.
- நாளெல்லாம் நறுமணம் வீச அதி உன்னத மூலப் பொருட்கள் ஆகியவற்றின் சங்கமம் குணு கூந்தல் தைலம்.
- பாரம்பரிய முறையில் சரியான வழியில் தயாரிக்கப்படும் குணு கூந்தல் தைலம்-அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு நம்பகமான ஒரே கூந்தல் தைலம்.
- உபயோகியுங்கள்! உணர்வீர்கள் !!
- மாசுமறுவற்ற முகஎழில் பெற எங்களது

''குணு'' ஃபேஸ் க்ரீம் உபயோகியுங்கள்.



ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் ஏற்றது

விவரங்களுக்கு :

நவசக்தி வைத்தியசாலை

த. பெ. எண் : 7, சேலம்-636 001

எல்லா மருந்து, மளிகை மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.



# என்றும் அன்புடன்...

'கல்கத்தாவில் வசிக்கும் கணவன்' என்கிற மெல்லிய திரையைத் தன்முன்னே தொங்கவிட்டுக் கொண்டு, சிரிப்பே இல்லாமல், தொட்டதற்கெல்லாம் சிடுசிடுத்து, எரிதணலாகச் சொற்களைச் சிந்தி, தாமே வலுக்கட்டாயமாக அமைத்துக் கொண்ட ஒரு வட்ட வேலியின் நடுவே தம்(?) சின்னஞ்சிறு மகளுடன் தனிமை வாழ்க்கை நடத்தும் சித்தாரா...

ஏகப்பட்ட குழந்தைகளுடனும் மனைவியுடனும் இல்லாமையை எதிர்த்துப் போராடி, லாட்டரி டிக்கெட்டின் மூலம் லட்சாதிபதியாகி விடும் கனவு களுடன் வாழும் வீட்டுத் தரகர் ஜனகராஜ்...

பட்டதாரிகளாக இருந்தும் வேலை கிடைக்காமல் பட்டினி வாழ்க்கை நடத்தும் இளைஞர்கள் சின்னி, சார்லி...

கடைசியாக, யாருக்கும் புலப்படாத ஓர் உள்நோக்கத்துடன் அங்கே ஒண்டுக் குடித்தனம் வரும் பாடகர் முரளி.

இந்த ஐவரின் பிரச்னைகளில் அவ்வப்போது உள் புகுந்து ஆதரவாகப் பேசி, அனுதாபத்தோடு நடந்து கொண்டு, ஆலோசனைகள் வழங்கி, அந்த ஐவருமே சாய்ந்து இளைப்பாறும் மையச் சுவராக விளங்குகிறவர் வீட்டுக்கார மனோரமா மாமி.

இவர்களுக்குத் துணைக்கோள்களாக -

பாலைவனத்தின் நடுவே தென்படும் சோலை போலக் கவர்ச்சியூட்டி மறையும் ஹீரா.

சண்டைமூட்டி விடுவதே வாழ்க்கை லட்சியமாக, வாசல் திண்ணைக்கருகில் இருந்து கொண்டு, தெருவை நோக்கிய பார்வையும் இந்த ஒண்டுக்குடித்தன வீட்டை நோக்கிய காதுமாக இஸ்திரி செந்தில்.

சித்தாரா யார், அவருடைய கணவர் யார், பாடகர் முரளி என்ன உள்நோக்கத்துடன் சித்தாராவுடனும் அவர் மகள் பேபி மோனிஷாவுடனும் நெருங்கிப் பழகுகிறார் என்பவை இடைவேளை வரை வெற்றிகரமாகக் காப்பாற்றப்படும் சஸ்பென்ஸ்.

துல்லியமான நிகழ்ச்சிகள். துடிப்பான வசனங்கள். நிறைவான யதார்த்தம்.

செயற்கைக்கு இடமே தராமல் செல்லும் கதையில் இடைச்செருகலாக இரண்டொரு டுஷ்ஷூம் டுஷ்ஷூம். (விநியோகஸ்தர்களின் வற்புறுத்தலா?)

முரளி ஒரு பாடகர் என மனோரமா சித்தாராவிடம் வெளிப்படுத்தும் முறை; ஒதுங்கி ஒதுங்கிப் போகும் பேபி மோனிஷா படிப்படியாக முரளியை நெருங்கித் தன் மன மாற்றத்தைப் புலப்படுத்தும் சூழ்நிலைகள்; சிரிப்பே வராத பனிமங்கை சித்தாரா கொஞ்சம் கொஞ்சமாக இறுக்கம் கரைந்து கலகலவென வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கும் கட்டம்...

நயமான நகாசுகள்.

முரளியின் சோகத்துக்கும் சித்தாராவின் விரக்திக்கும் அடிப்படையாக விளங்கும் காரணங்கள் சற்றுப் பலவீனமானவையென்றாலும், அவை வெளிப்படுத்தப்படும் சூழ்நிலை கொண்டு வரும் திருப்பத்தில் அந்தப் பலவீனம் அடிபட்டுப் போகிறது.

பேபி மோனிஷா சோபி மோனிஷா.

இசை இளையராஜா!

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் பாக்யநாதன், இதில் திருப்திநாதன்!

- சி. ஆர். கே.

# தீர்த்தம்

''போம்மா நீ. இனிமேல் ஒரு நாளும் நான் ரேஷன் வாங்கப் போகவே மாட்டேன்'' என்று எரிச்சலுடன் கூறிக் கொண்டே உள்ளே நுழைந்த பாபுவின் வலது கரத்தில் இரண்டு சிறிய பைகள். இடது கரத்தில் சின்ன பிளாஸ்டிக் கேன் ஒன்று.

மைதா ஒரு பையில், சர்க்கரை அடுத்த பையில். பிளாஸ்டிக் கேனில் சோயா ஆயில்.

இவற்றையெல்லாம் தரையில் வைத்த பாபு, சட்டைப்பையிலிருந்த மீதிச் சில்லறையை அள்ளி மேஜை மீது வைத்தான்.

ரேஷன் கடைக்குப் போய்விட்டு வெற்றிகரமாகத் திரும்பியிருக்கிற மகனைப் புன்னகையோடு எதிர் கொண்ட மீனாட்சி, ''ஏண்டா சலிச்சுக்கிறே? அதான் சமர்த்தாய் எல்லாத்தியும் வாங்கிட்டு வந்துட்டியே....'' என்றாள் பாராட்டுகிற குரலில்.

''ஆமாம்...., அனுமார் வால் மாதிரி நீளமான கியூ! ஆமையாட்டம் ஊர்ந்து ஊர்ந்து கவுண்டர் கிட்டேப் போனா நோட்டைத் திருப்பித்தந்து சில்லறையைக் கொண்டாங்கிறான். அப்புறம் என்ன நினைச்சானோ பில்லைப் போட்டுட்டு மீதியைச் சில்லறையாவே அள்ளித் தந்துட்டான். பில்லையும் மீதிச் சில்லறையையும் சரியாய் இருக்கான்னு பாத்துரும்மா....'' என்றான் வெறுப்பான குரலில்.

''ஏண்டா, நீ சரி பார்த்து வாங்கிட்டு வரலியா?'' என்று கேட்டாள்.

''அந்தக் கூட்டத்துல எங்கேம்மா முடியுது? அவன் மீதின்னு வச்சதை அப்படியே அள்ளிப் பாக்கெட்ல போட்டுட்டு வந்துட்டேன். அப்புறம் சாமான்களை வாங்க வேற கியூ. சரிபார்க்கலேம்மா. இப்ப நீ பார்த்துரு'' என்றான் பாபு.

மீனாட்சி சில்லறையை எண்ணலானாள்.

எண்ணி முடித்தவள் குழப்ப முகத்துடன் மறுபடியும் எண்ணலானாள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த பாபு, ''என்னம்மா திரும்பத் திரும்ப எண்ணுறே? சரியாய் இல்லியா? குறையுதா?'' என்று கேட்டான்.

''உம், வித்யாசம் வருது. பில்லுல நாற்பத்தி மூணு ரூபாய் அறுபது காக போட்ருக்கு. அப்படின்னா மீதி ஆறு ரூபாய் நாற்பது காகதானே இருக்கணும்?''

''ஆமாம். ஐம்பது ரூபாய்க்கு அவ்வளவுதான் மீதி வரணும். ஏன்... அவ்வளவு வரலியா? குறையுதா? எவ்வளவும்மா குறையுது?'' என்று பதற்றமாய்க் கேட்டான் பாபு.

''குறையலேடா.''

''பின்னே?''

''அதிகமாய் இருக்கு.''

''அதிகமாய் இருக்கா?''

''ஆமாம்டா. பத்து ரூபாய் அதிகமாய் இருக்கு. பதினாறு ரூபாய் அறுபது காக இருக்குடா. கூட்டம்னு சொன்னியில்ல, பதற்றத்துல தப்பாய் எண்ணி அதிகம் தந்துட்டான் போலிருக்கு....''

''அப்படித்தாம்மா இருக்கும். கொண்டாம்மா அந்த அதிகமாயிருக்கிற பத்து ரூபாயை. நான் திருப்பிக் குடுத்திட்டு வந்திர்றேன்...''

''ஆமா, அவன் பெரிசாய்க் கொள்ளையடிக்கிறான். எந்த அளவுமே சரியாய் இருக்கிறதில்லே. கேட்கப் போனா சால்ஜாப்புச் சொல்வான். இப்ப.. நீ....''

மேலே மீனாட்சி பேசுமுன் சிவசிதம்பரம் குறுக்கிட்டார். இதுவரை நிகழ்ந்தவற்றையெல்லாம் மிகவும் உன்னிப்போடு பார்த்துக் கொண்டிருந்தவர், அதற்கு மேல் மீனாட்சி சொல்லப் போவது இதைத்தான் என்பதை யூகம் பண்ணியவராய், அவள் சொல்ல எண்ணியதைச் சொல்லி விடக் கூடாதே என்கிற பதற்றமுடன் குறுக்கிட்டார்.

''போடா பாபு, போய் அந்த அதிகப்படியான ரூபாயைக் குடுத்திட்டு வந்திரு. போடா.... வாங்கிட்டுப் போ'' என்றார்.

''என்னங்க....'' என்று ஆரம்பித்த மீனாட்சியைப் பார்வையினாலேயே அடக்கினார்.

'பணத்தை எடுத்து அவன் கிட்டே குடு' என்று பார்வையாலேயே ஆணை பிறப்பித்தார்.

இயந்திர கதியில் எடுத்துக் கொடுத்தாள் மீனாட்சி.

பாபு உற்சாகமாய் ஓடினான்.

''என்னங்க....'' என்று மீண்டும் ஆரம்பித்தாள் மீனாட்சி.

''இதோ பார் மீனாட்சி, இப்ப நீ சொல்ல வர்றது எனக்குப் புரியாமல் இல்லை. ரேஷன் கடைக்காரன் அளவைக் குறைக்க, 'அப்படி இப்படி' விற்று அநியாயம் பண்ணத்தான் செய்றான். அத னாலே அவனோட இந்தப் பணத்தை அவன் கிட்டேக் கொடுக்காம வச்சுக்கிட்டாச் சரியா யிடுமா அதுக்கு? அதனாலே நமக்குப் பெரிய நஷ்டம்தானே தவிர லாபமில்லே! எப்படின்னு கேட்கிறியா? இப்ப நம்ப பாபு, அதிகப் படியாய்ப் பணம் இருக்குன்னு நீ சொன்னதும் உடனே என்ன சொன் னான்.....?''



''கொண்டு போய் ரேஷன் கடைல குடுத்திட்டு வர்றேன்னு சொன்னான்....''

''பார்த்தியா, நம்ப பிள்ளை நேர்மை யின் சின்னமாய் நின்னுக்கிட்டு, நமக்கு உரிமைப் படாத ஒன்னை உரியவர் கை யிலே சேர்த்துடணும்னு துடிச்சானே, அந்தத் துடிப்பு வீணாய்ப் போயிடும் நீ எண்ணின மாதிரி கொடுத்தனுப்பாம இருந் திருந்தா! ஒரு பிள்ளையோட மேலான பண்புகள் அழியப் பெற்றவங்களே தூண் டுதலாய் இருக்கலாமா?''

''என்னங்க...''

''மீனாட்சி, நீ பேராசைப்படாதவள் தான். அடுத்தவன் பொருளுக்கு ஆசைப் படாதவள்தான். இப்ப உனக்கு ரேஷன் கடைக்காரன் பேர்ல கோபம். அதான் உன் சிந்தனை அப்படி ஓடிட்டுது. அதை நீ வெளியே சொல்லியிருந்தேன்னா நம்ப பாபு மனசிலேயும் இது மாதிரியே ரேஷன் கடைக்காரன் பேர்ல கோபம் உண்டாகி, குடுக்கவேண்டாம்ன்னு எண்ண ஆரம் பிச்சிருவான். ஆயிரம் தப்பை ரேஷன் கடைக்காரன் பண்ணியிருந்தாலும், நாம அதுக்காக ஒரு தப்பைப் பண்றது கூட நியா யத்துக்கு அப்பாற்பட்டதுதான். சிந்தனை பண்ணிப் பார்க்க முடிகிற நீயே தடுமார் றப்ப, சின்னவன் பாபு...., ஒரு தவறை நியா யம்னு எண்ணுறாப்ல சூழலை அமைக்க லாமா? ஒரு தப்பை இன்னொரு தப்பு திருத்திடாது. ஆனால்.... ஒரு நியாயம் அதைச் செய்ய முடியும்...! ஒரு நிதானம் அதைச் செய்ய முடியும்.''

'நிஜம்தான்!' என்பது போல் நின்றாள் மீனாட்சி.

உமாகல்யாணி

# முற்றுகை 6

**தை** முடிந்து மாசி பிறந்து தேதி ஐந்து கழிந்தால்... நாராயணசாமிக்கு வயது 42 முடிந்து 43 ஆகிறது. காதோரம் நரை.

அட... அதற்குள் இத்தனை வயதாகி விட்டதா! இந்த நினைப்பு திடுதிப்பென்று நெஞ்சுக்குள் தோன்றி, ஒரு வியப்பாகப் படர்ந்து, மலைக்க வைக்கிறது. சிறிது, கலக்கம் கூட வருகிறது.

பார்த்திருக்க, காலமும் வயதும் பரபர வென்று ஓடிப் போய் விட்டதே! நேற்றுப் போல இருக்கிறது, கல்யாணம் முடிந்து. பதின்மூன்று வருஷம் மாயமாகி விட்டதே... அடேயப்பா!

கல்யாணம் என்றால்... இலேசுப்பட்ட கல்யாணமா? இவனது விரலுக்கேற்ற வீக்கமா, அது? ராஜவீக்கமல்லவா!

சாமான்யமான வீட்டுச் சம்பந்தமா? சுற்றுப்பட்டி பத்து ஊரும் ஓகோவென்று கொண்டாடுகிற பெரிய பண்ணை ராமானுஜம் வீட்டுச் சம்பந்தமல்லவா? லேசாக நடக்க விடுவாரா?

அடேங்கப்பா... ஏழு நாள் கல்யாணம். ஏழு ஊரு ஜனமும் ஒன்றாக வந்து கூடிக் கும்மாளமிட்டு, ஆக்கி, அவித்து, தின்று தீர்த்ததே.

கிருஷ்ணம்மாவின் அய்யா ராமானுஜம், ஏற்கெனவே பண்ணை. அதிலும் ஜமீன்தார் என்கிற நினைப்பில் மிதப்பவர். கேட்க வேண்டுமா?

அவர் வீட்டு மருமகனாக முடியும் என்று நாராயணசாமி நினைத்துக் கூடப் பார்த்திருப்பானா? அதற்கான தகுதி தனக்கு உண்டு என்று கனவில் கூட ஒப்புக் கொள்ள முடியாதே...

நாராயணசாமி குடும்பம் வெறும் டப்பாக் குடும்பம். பெருங்காய டப்பா. இவனது தாத்தா காலத்தில் 'ஜே ஜே' என்று இருந்ததாகக் கேள்வி. அதெல்லாம் ரெண்டு தலைமுறைக்கு முந்தின கதை. ரெண்டு தலைமுறைக்குள் விவசாயம் நொடித்து, பெருங்காயமெல்லாம் மாயமாகி, வெறும் டப்பாவாகி விட்டது.

எச்சமிச்சமாய் நின்ற குலக் கொழுந்துவுக்கு மிஞ்சியதெல்லாம் ஒரு கூரை வீடும், கிணற்றுப் பாசனத்தில் ஒன்றே கால் குறுக்கம் புஞ்சையும்தான்.

கிணற்றிலும் நல்ல தண்ணீர் கிடையாது. மண்ணை உவர் நிலமாக மாற்றக்கூடிய உப்புத் தண்ணீர். வாயில் வைக்க முடியாது. நாக்கில் பட்டு விட்டால், குடல் வரைக்கும் உப்புக் கரிக்கும்.

அப்பேர்ப்பட்டவனுக்கா... ராமானுஜம் வீட்டில் சம்பந்தம்?

ஊரே மூச்சு அடைத்துப் போய் நின்றது. வட்டாரத்தில் எங்கு நின்றாலும், இதுதான் பேசுகிற பேச்சாகிக் கிடந்தது.

நாராயணசாமிக்கே நம்ப முடியாத ஆச்சரியம்தான்! 'நம்மைப் பிடித்த பீடை இத்தோடு தொலைந்தது, நல்ல காலம் பிறந்து விட்டது' என்று நிஜமாகவே நம்பினான். கிடைத்தாலும் கிடைத்தது, புளியங் கொம்பாய்க் கிடைத்து விட்டது என்று பூரித்துக் கிடந்தான்.

சுற்றியிருந்த சக இள வட்டங்களும் அதையே சொல்லிக் கோட்டா பண்ணிச் சிரித்தனர்.

''இனிமே என்ன, நாராயணன் பெரிய பண்ணையாருதானப்பா. சமுத்திரத்துலே தலா (ஏற்றம்) போட்டுட்டான். ஏழு தலை முறைக்கும் வத்தாது.''

எல்லாம் ஒரு வருஷம்தான்.

கிருஷ்ணம்மா 'ஆறு மாசம்' என்று வயிற்றில் சுமந்து கொண்டிருந்த போது... ராமானுஜம் பொசுக்கென்று போய்ச் சேர்ந்து விட்டார். பத்து ஆள் கூடி அடித்தாலும் சாய்க்க முடியாது. அப்பேர்ப்பட்ட ஓங்குதாங்கான ராமானுஜம் 'நெஞ்சு வலிக்குது' என்றார். சோடா வருவதற்குள் உயிர் போய் விட்டது.

அவர் போன பிறகுதான், சமுத்திரம் வற்றிக் கிடக்கிற நிஜலட்சணம் தெரிந்தது. விளைந்த விளைச்சல் எல்லாவற்றையும் ஏதேதோ வியாபாரிகள் கொள்ளையடித்துக் கொண்டு போயிருக்க - ராமானுஜம் அதையெல்லாம் கவனிக்காமல் கோர்ட் கேஸ்களுக்கும் வைப்பாட்டி வீடுகளுக்குமாய் வாரி வழங்கியிருக்கிறார்.

பெரிய பெரிய தொகைக்கு பத்திரக் கடன்கள். காடுகரைகள் யாவும் 'ஒத்தி'க் கடன்களில் மூழ்கிப் போயிருந்தன. கடைசியில் -

மிஞ்சியதெல்லாம் வீடும், மூன்றரைக் குறுக்கம் கிணற்று இறவைப் புஞ்சையும், ஏழு குறுக்கம் மானாவாரிக் கரிசல் காடும் தான்.

அதுவும் சொர்ணத்திற்கு.

நாராயணசாமியின் பண்ணைக் கனவுகளும் மகிழ்ச்சியும், கரிசல்காட்டுக் கானல் நீராகி விட்டது. வெட்கக்கேடான நிராசை.

மேலாண்மை பொன்னுச்சாமி

வெளியே சொல்ல முடியாத கேவலம். ஊமையன் கண்ட கெட்ட கனா.

விலருகிற மாதிரி பாவலா காட்டிய பீடை, கழுத்துப் பிடியாக பிடித்துக் கொண்டது. ஊர் சிரித்து விட்டது. நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது.

அந்தக் குருட்டுக் கோபம் முழுவதும் கிருஷ்ணம்மா மேல் திரும்பியது. பாய்ந்தது. 'உங்க அப்பன் பிழைப்பு தெரியாதா, உங்க ஆத்தா பொழைப்பு தெரியாதா' என்று கத்திச் செருகலான வசவுகளாக வெடித்தன.

பதின்மூன்று வருஷம் கிருஷ்ணம்மாவை அடித்து உதைத்தும், வாட்டி வதைத்தும் வாழ்க்கையையே நரகமாக்கிக் கூத்து நடத்தியது, அந்த ஊமைக் கோபம்தான்...

எல்லாம் ஆயிற்று. பதின்மூன்று வருஷம் ஒரு கனா போல போய் விட்டது. இத்தனை கால வாழ்க்கையில் என்னத்தைச் சாதிக்க முடிந்திருக்கிறது? மூன்று ஆண்



பிள்ளைகள். அதுதான் மிச்சம்.

இரவும் பகலுமாய் உஸ்ஸென்று உட்கார நேரமில்லாமல் ஓடி ஓடிப் பாடு பட்டாகி விட்டது. கிருஷ்ணம்மாளும் உழைத்துப் போட்டதில் குறைவைத்திருக்கிறாளா? காட்டிலும் உயிரைக் கொடுத்து, வீட்டிலும் வந்து 'வேலை, வேலை' என்று மாய்ந்திருக்கிறாள்.

என்ன பிரயோசனம்? ஒரு பாத்தி அகலம் பூமி கூட வாங்க முடிந்ததில்லை. வயிற்றுப்பாடே 'ஆத்தாடி, அம்மாடி' என்றுதான் கழிகிறது.

கிருஷ்ணம்மாளுக்கு ஒரு நல்லது பொல்லாதது என்றால் கூட, நல்ல சேலை துணிமணி எடுத்துத் தர முடிந்திருக்கிறதா? பிள்ளைகளுக்கு உருப்படியான டவுசர் சட்டைகளாவது எடுத்துக் கொடுக்க மனம் வந்திருக்கிறதா? முடிந்திருக்கிறதா?

ஹூ'ம்! முழுக்குக்கு ஆசைப் பட்டால், சாண் சறுக்குகிற பிழைப்புத்தான்.

என்ன பயல் பிழைப்பு இது?

**நா**ராயணசாமி பொழுதுக் காலைப் பார்த்தான். காலைச் சூரியன் தைமாதக் கதகதப்பில் சுகமாக இருந்தது. பாத்தியில் நீர் சரியாகப் பாய்ந்தும் பாய்வதற்குள் வாய் மடையை விலக்கினான். தண்ணீர் ஓடிப் பாய்ந்தது. மிளகாய்ச் செடியில் குருட்டை நோய். பாத்தி அடைத்து அடர்த்தியாக இருக்க வேண்டிய செடிகள். ஒடுக்கிப் பிடித்துக் கட்டிய விளக்குமாறு போல நின்றன.

மருந்து அடித்து விட்டுத் தண்ணீர் பாய்ச்சியிருந்தால்... நோய் மாறி தளிர் எடுக்கும். மருந்து வாங்க வக்கில்லை. கைமாற்றுக்கு அலைந்து பார்த்தான். யாரும் தரவில்லை. வேறு வழி?

வெறும் தண்ணீர் பாய்கிறது.

ஒரு பாத்தியைக் கொத்தி விட்டு விட்டு, டிராயர் பைக்குள் கை விட்டான். பீடியை எடுத்துப் பற்ற வைத்தான்.

பீடியில் பழைய மணம் இல்லை. ஏதோ ஒரு கெட்ட கமறல் வாடை வீசுகிறது. ரொம்ப மட்டமான புகையிலை இலைக்கை வைத்திருப்பார்கள் போலும்.

ச்சே என்று மனது அலுத்துக் கொண்டது.

...இவன் அப்போது ரொம்பச் சின்ன வயசு. ஆறு வயசு ஏழு வயசுக்குள்தான் இருக்கும். 'அரிச்சலாக' ஞாபகம் இருக்கிறது.

**ஒ**ருநாள் -

ஊரே அலறுகிற மாதிரி பாட்டுச் சத்தம் கேட்டது. 'என்னடா இது, மைக்செட் பாடிக் கொண்டு நகர்ந்தும் வருமா?' என்று ஜனங்கள் திகிலடித்துப் போனார்கள்.

ஒரே திகைப்பு. புரிபடாத ஆச்சர்யம். சத்தம் வந்த திசை நோக்கி சகல ஜீவன்களும் ஓட்டமும் நடையுமாக புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்து பார்த்தால்... அங்கே ஒரே அதிசயம்.

மஞ்சள் பூசுமாய் ஒரு வேன். வேனுக்குள் சுற்றிலும் பச்சையிலும் சிவப்பிலும் கலர் கலராய் டியூப் லைட்கள். வேனின் உட்புறத்தில் பார்த்தால்... தேவலோகம் போல விநோதமாக - பலபல வர்ண ஒளிக் கலவையாக... அட, இந்திரலோகம் இப்படித்தான் இருக்குமோ...

வேனே அதிசயம். நகரும் கரண்டு அதிசயம். ஒளியலங்காரம் அதைவிட அதிசயம்.

கொஞ்ச நேரம் பாட்டுப் போட்டார்கள். எதைப் பார்ப்பது, எதைப் புரிவது என்று ஜனங்கள் திகைத்துப் போய்க் கிடந்தனர். பேச வார்த்தை வராமல், வாய் எழும்பாமல் ஜனங்கள் அசந்து போய்க் கிடந்தார்கள்.

கூடிய கூட்டத்தின் தலைக்கு மேலாக, பீடிகளை கொத்துக் கொத்தாக அள்ளி இறைத்தார்கள். இளவட்டங்களிடம் முழு முழுப் பீடிக் கட்டுகளைக் கொடுத்தனர். ஓசிதான்.

வேனுக்குள் இருந்தவர்கள் பீடி குடிக்கிற - நாசி வழியாகப் புகை விடுகிற - அதிசயத்தைப் பார்த்து பிரமித்துப் போய் நின்றனர். கையில் இருந்த பீடிக்கட்டுகளை இளவட்டங்கள் மகிழ்ச்சியோடும் வியப்போடும் பார்த்தனர், மந்திரக்கோல் கிடைத்து விட்ட மாதிரி.

அந்த இடத்திலேயே சில இளவட்டங்கள் துணிச்சலாக பீடியைப் பற்ற வைத்துப் புகைத்துப் பார்த்தனர்.

அந்த நாற்றமும், வாடையும் புதிதாக இருந்ததால் - ஒவ்வாமல் - நெஞ்சு வெடிக்க இருமினர். சிரித்தனர். கண்ணில் நீர் வரச் சிரித்தனர்...

...குத்துக் குத்தாக அள்ளி ஜனங்கள் தலைக்கு மேல் ஓசியாக இறைக்கப்பட்ட அந்தப் பீடிகள், இப்போது ஒரு பீடி பத்துப் பைசா. அதிலும் நாலில் ஒன்று பழுது.

இந்தப் பீடி இல்லாமல் இப்போது மனிதன் இருக்க முடியவில்லை. ரத்தத்தோடு ஒட்டிப் போய் விட்டது.

எங்கேயோ... கண்காணாத இடத்தில் இருந்து கொண்டு முதலாளிகள் இந்தப் பட்டிக்காட்டு ஜனங்கள் மேல்... வலையை வீசி விட முடிகிற அதிசயத்தையும் மீன்களைப் பிடிக்காமலேயே ரத்தத்தை மட்டும் உறிஞ்சி விட முடிகிற சாமர்த்தியத்தையும் நினைத்துப் பார்த்தால் ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. நாராயணசாமிக்குள் ஒரே பிரமிப்பு.

தோலிருக்க சுளையைத் தின்கிற சாமர்த்தியம் என்பது இதுதானா?

நினைவு மனசுக்குள் தன்போக்கில் நடை போட, கை தன்பாட்டில் வேலை செய்து கொண்டிருந்தது. மிளகாய்ச் செடிகளைப் பார்க்கப் பார்க்க வயிறு கொதிக்கிறது. உள்ளுக்குள் பயமும் குருட்டுக் கோபமுமாய் அலைமோதுகிறது.

''எதிர் வீட்டுக்காரி கட்டியிருக்கிற புடவை எப்படிங்க இருக்கு...?''

''சகிக்கவே இல்லை... கன்றாவியா இருக்கு.''

''அதனாலதாங்க நான் வேற கலர்ல புடவை வாங்கியிருக்கேன்.''

– சீர்காழி வி. ரேவதி



'தை மாசம், தடவு பழம்' என்று சொலவடை.

பூவுக்கும் பிஞ்சுக்கும் பஞ்சம் வந்து, நோய் முற்றிக் கிடக்கிற செடியில், தடவு பழத்துக்கு எங்கே போவது?

வாங்கியிருக்கிற கடன்களை நினைத்தால்... மனசுக்குள் புளியைக் கரைக்கிறது. 'எப்படி கடன் கட்டி, மீண்டு வரப் போகிறோமோ?'

மருந்து வாங்க - உப்பு வாங்கப் பணமில்லாமல், கடன் கேட்டு அலைந்த போது, நாட்சண்யமில்லாமல் முகம் திருப்பிக் கொண்ட 'கைத் துட்டுக்காரர்'களை நினைத்தால்... அவமானமாக இருக்கிறது. வேதனையோடு மட்டியைக் கடித்துக் கொண்டான்.

'அந்தப் பயல்கள் நம்மை 'எம்பாட்டு' இலேசாக நெனைச்சுட்டாங்க. 'வக்கு இல்லாத பய' என்கிற நெனைப்புலேதானே... தாவு நாட்சண்யம் பார்க்காம தலையைக் குலுக்கிட்டாங்க?

அந்தச் சின்னப் பயக நெனைப்பை நெசமாக்குகிற மாதிரிதானே வெள்ளாமை நடப்பும் வந்து வாய்ச்சிருக்கு. வெறும்பய வெள்ளாமை.

வேதனை நினைவுகள். வியாகூலப் பெருமூச்சு. புண்ணைச் சுற்றி மொய்க்கிற ஈக்களாய், சன்னைப் பிடித்த நினைவுகள்.

கிணற்றின் பக்கம் பார்த்தான். மோட்டார் ஓடிக் கொண்டிருக்கிறது. தொட்டியில் விழும் நீர்க்கற்றை, சூரியஒளியில் வெள்ளியாக மினுமினுக்கிறது.

இந்தக் கிணற்றில் இவனுக்கு ஒரு துண்டுப் பங்கு. ஆறில் ஒரு பங்கும், ஒரு பங்கில் மூன்றில் ஒன்றும்.

இந்தப் பங்குத் தண்ணீரைப் பகிர்ந்து பாய்ச்சுவதற்குள் ஆயிரத் தெட்டு வாய்பூசறாக்குகள். சண்டை சச்சரவுகள். சட்ட வியாக்யான சண்டப் பிரசண்டங்கள். ஒரு சுற்றுத் தண்ணீர் பாய்ந்து முடிப்பதற்குள்... ஆத்தாடி அம்மாடி என்றாகி விடும். அன்றாட மல்லுக்கட்டுப் பிழைப்புதான். ச்சே! ஈனப் பயல் பிழைப்பு!

நம்ம புஞ்சை. சதுரமாய் நாலு குறுக்கம். சொந்தப் பம்ப் செட் கிணறு. பங்கு பகிர்வு என்று எந்த நாயும் அண்ட முடியாமல் முழுச் சொந்தமாய் - ஏக பாத்யதையாய் கிணறும் புஞ்சையும். தனியாக மானாவாரிக் கரிசல் காட்டில் ஒரு ஐந்து குறுக்கம் காடு...

இப்படி இருந்தாலல்லவா, முழுச் சம்சாரி என்றாக முடியும்! கம்பீரமாய் நெஞ்சு நிமிர்த்தி, நானும் சம்சாரிதான்டா என்று சொல்லும் தகுதி வரும்.

அப்படி இருந்தாலல்லவா, கடன் கொடுக்கிறவனும் நம்பிக் கொடுப்பான். ''நாராயணசாமிக்கு என்னப்பா, விளைஞ்சாலும் விளையாவிட்டாலும் குடுத்த கடன் வீடு வந்து சேருமப்பா. காடுகரைக நிறைய கிடக்கு'' என்று நம்பிக்கையோடு பேசுவார்கள்.

நாராயணசாமிக்கு மனசு நமநமத்தது. சொந்த பம்ப் செட் சாவியை அரைஞாண் கயிற்றில் தொங்க விட்டு 'என் கிணறு' என்று உரிமையோடு சொல்கிற காலம் வருமா? எப்போது வரும்? வராமலேயே போய் விடுமா?

கிருஷ்ணம்மாவின் அப்பா வீடு நொறுங்கிப் போனாலும், சொர்ணத்திற்கென்று மூணரைக் குறுக்கம் இறவைப் புஞ்சை ஒரே சதுரமாய்க் கிடக்கிறது. தனிக் கிணறு. மானாவாரிக் காடும் கிடக்கிறது.

வெள்ளாமை செய்ய ஆளில்லாமல் தரிசாகக் கிடக்கின்றன, இளம் விதவையாக.

சொர்ணம் இல்லையென்றால்.... எல்லாம் கிருஷ்ணம்மாவுக்குத்தான். நமக்குத்தான்.

இருக்கிறாளே... தடையாக இருக்கிறாளே.

வருஷக்கணக்கான அவனது நிலக் கனவை, பகல் கனவாக்கிக் கொண்டு, சொர்ணம் இடையில் மதிலாக...

தடையையே பாலமாக்கி விட்டால்... சொர்ணத்தின் மூலமே நிலக்கனவையும், தனிக் கிணற்றுச் செல்வத்தையும் கைவரப் பெற்று விட்டால்...

சொர்ணம் இரண்டாந்தாரமாகத் தனக்கு வாழ்க்கைப்படச் சம்மதிப்பாளா? கிருஷ்ணம்மாவைப் பயன்படுத்திச் சம்மதிக்க வைத்து விட முடியுமா?

நடக்குமா?

நியாயமா?

ஊர் உலகத்தில் நடக்காததா? இந்த ஊரிலேயே அக்காள் தங்கச்சியை கட்டிக் கொண்ட ஆம்பளை ரெண்டு பேர் இருக்கிறாங்களே -

அவனுக்குள் உப்பாக் காற்றின் குளிர்மை. ஜில்லென்று பூத்துச் சொரிகிற பூக்கள்.

ஏதோ நினைவில் முன்வழுக்கையை இடதுகையால் தடவிக் கொண்டான்.

(தொடரும்)

"ஸ்ரீதர், உங்களோடு பேசணும்" என்று குறுக்கிட்டவளை வியப்போடு பார்த்தேன்.

இன்று மாலை மாப்பிள்ளை கோலத்தில் காரில் ஊர்வலம் வரப் போகும் என்னிடம் இவளுக்கு என்ன அப்படி முக்கியமான பேச்சு இருக்கும்....?

புரியாமல் சுதாவைப் பார்த்தேன்.

"ப்ளீஸ், எனக்காக ஒரு அஞ்சு நிமிஷம் ஒதுக்குங்க. நான் தனிமையிலே உங்களோட பேசணும்" என்று கண்களை விரித்துக் கெஞ்சியவளைத் தட்ட முடியாமல் நின்றேன்.

அருகில் கோயில் இருந்ததால் அதற்குள் நுழைந்து ஒதுக்குப்புறமாய் அமர்ந்தோம்.

இப்போது யாராவது என்னை இவளுடன் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற பயம் தோன்றியது.

நாளை நான் பூமாவின் கணவன். இன்று இவளுடன் இப்படித் தனியாக வந்தது தவறில்லையா...?


"ப்ச்!" என்ற அலுப்பு மனசுக்குள் ஓடியது.

இவளைத் தனிமையில் சந்தித்துப் பேச எத்தனை முறை முயன்றிருப்பேன்.

இவளைக் காதலித்து என்னமாய் உருகியிருக்கிறேன்...

அப்போதெல்லாம் நிராகரித்துவிட்டு,

# காதல்



இப்போது வேளை கெட்ட நேரத்தில் என்ன பேச்சு என்னிடம் இவளுக்கு....?

"ஸ்ரீதர்" என்று அழைத்தவளை நேராகப் பார்த்தேன்.

முகம் குழைந்து கண்ணில் நீர் திரண்டிருந்தது.

என்ன அழகான முகம், ஓவியம் போல...!

"சட், இது தப்பு" என்று மனம் எச்சரித்தது.

"நான் ஒரு முட்டாள், ஸ்ரீதர்" என்றவளை வியப்போடு பார்த்தேன்.

"நீங்க என்னைச் சுற்றிச் சுற்றி வந்தப்ப அலட்சியப்படுத்தினேன். அது என் கர்வத்தினால்தான். என் பின்னாடியும் ஓர் இளைஞன் அலையறான் பாருன்னு தோழிகளிடம் அலட்டிக்கத்தான் அப்படி செஞ்சேன். நீங்க என்னைத் தொடர்ந்து வந்ததைத் தொந்தரவுன்னு சொன்னேன். வேற வேலை இல்லாத வெட்டிப்பயல்னு கிண்டல் கூட செஞ்சேன்....."

அவள் சொன்ன அவமானங்களை எல்லாம் தாங்கியும் அவளைக் காதலித்தேன். ஆனால் எதற்கும் ஒரு கால அளவு உண்டல்லவா? வீட்டில் பெற்றோர் அவசரப்படுத்தவே, மனதைக் கஷ்டப்பட்டுத் திசை திருப்பி இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தேன்.

"ஆனால் ஸ்ரீதர், நீங்க என்னை விட்டுட்டு வேற பெண்ணைத் திருமணம் செஞ்சுக்கப் போறது தெரிஞ்சதும் மனசுக்குள்ளே கனம். என்னோட அலட்சியமும், கர்வமும் என்னைக் குடைய ஆரம்பிச்சது. என்னை அறியாமலேயே உங்களை நான் காதலிக்கற உண்மையை உணர்ந்தேன். ஆனாலும் மனசைக் கட்டுப்படுத்திக்க முயன்றேன். நான் எவ்வளவு பிடிவாதமா உங்களை மறக்க முயல்கிறேனோ, அதைவிட அதிகப் பிடிவாதமா என் உள்ளம் உங்க மேலே அன்பு செலுத்தறது புரிஞ்சது. என்னோட இத்தனை நாள் அலட்சியம், போலியாப் போட்டுக்கிட்ட வேலின்னு புரிஞ்சது."

"சுதா, உணர்ச்சிவசப்படாதே. யதார்த்தமாய் யோசி. நாளைக்கு நான் பூமாவை கைப்பிடிக்கப் போறேன். பத்திரிகை அடிச்சு, எல்லா ஏற்பாடும் முடிஞ்சிடுச்சு. பெண் வீட்டுக்காரங்க இத்தனை நேரம் கல்யாண மண்டபத்துக்குக் கூட போயிருப்பாங்க. இந்த நிலைமையிலே நான் எப்படி பின் வாங்கறது?"

"மற்றவர்களை விடுங்க. நீங்க என்னை விரும்பறீங்களா, இல்லையா?" என்றவளின் கண்ணோடு கண் நோக்கினேன்.

பெருமூச்சு விட்டேன்.

"இதோ பாருங்க, நான் பேசறேன் பெண்ணைப் பார்த்து. இரண்டு பக்கத்துப் பெற்றோர்களிடமும் நானே பேசிச் சம்மதிக்க வைக்கறேன்."

"நல்லாயிருக்காது சுதா இது. அந்த பூமா நிலையில் நீ இருந்தால் எவ்வளவு ஏமாற்றமாய் இருக்கும் இதுன்னு நினைச்சுப் பாரு."

"நான் கொஞ்சம் சுயநலமாய் நடக்க விரும்பறேன்."

மௌனித்தேன்.

"இதோ பாருங்க, எந்த எதிர்ப்பையும் நான் சமாளிக்கறேன். கிளம்புங்க" என்று கையைப் பிடித்து இழுத்தாள்.

அவள் பிடிவாதத்தின் முன் நான் தோற்றேனோ இல்லை மனத்தில் அவள் மேல் உள்ள ஆசையில் பேசாமல் இருந்தேனோ

**கிருஷ்ணா**

தெரியாது! அவள் முன் செல்ல, தொடர்ந்தேன்.

என் பெற்றோரை நினைத்துப் பயமாயிருந்தது.

அதைவிட பூமாவை நினைத்து வருத்தமாய் இருந்தது. என்னை வைத்து எத்தனை கனவுகளை வளர்த்துக் கொண்டாளோ, பாவம்!

மனம் நிறைய தயக்கத்துடன் நடந்தேன்.

பெண்ணின் அப்பாவுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சியாய் இருக்கும் இது....!

கோபத்தில் திட்டுவாரோ, இல்லை அதற்கும் மேலே போய் அரிவாளை எடுத்து விடுவாரோ?

நான் செய்வது பச்சைத் துரோகம் என்று தெரிந்தும் எப்படி சுதாவைப் பின் தொடர்கிறேன்....?

மண்டபத்தின் வாசலிலேயே பூமாவின் பெற்றோரும், கூட சிலரும் நிற்பது தெரிந்தது.

ஏன் அவர்களிடம் ஒரு பதற்றமும், கவலையும், கோபமும் தெரிகிறது?

ஒரு வேளை கோவிலில் எங்களைப் பார்த்துவிட்டு யாராவது வந்து சொல்லியிருப்பார்களோ?

நடுங்கியபடி அவர்களை நெருங்கினேன். மனச்சாட்சி வேறு முள்ளாய் உறுத்தியது. எனக்கு இரண்டடி முன் சுதா.

என்னைப் பார்த்தார் பூமாவின் அப்பா. அவர் முகம் இறுகிப் பாறை போலிருந்தது.

எதுவும் பேசத்தோன்றாமல் நானும் அவரைப் பார்த்தபடி நின்றேன்.

"மன்னிச்சுக்குங்க மாப்பிளே! என் மகள் இப்படி ஓடுகாலியா இருப்பான்னு நினைச்சுக் கூடப் பார்க்கலே...." என்று கதறியபடி என் கைகளைப் பற்றிக் கொண்டார்.


# கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள்

**சி**ற்பி ஒருவர் ஒரு பெரிய கல்லை உளியால் செதுக்கிக் கொண்டிருந்தார். அங்கே வந்த ஒரு சிறுவன், ''ஐயா, எதற்காக இந்தக் கல்லை உடைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான். சிற்பி சொன்னார், ''இந்தக் கல்லுக்குள் ஒரு தெய்வம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அந்தத் தெய்வத்தை வெளியே கொண்டு வர முயற்சி செய்கிறேன்.''

படைப்பாற்றல் மிக்க சிந்தனையைக் கவிஞர்கள், கதாசிரியர்கள், சிற்பிகள் ஓவியர்கள் போன்றோர் மட்டுமே பெற்றுள்ளனர் என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மை என்னவெனில் ஒவ்வொரு மனிதனிடமும் இந்தத் திறன் ஒளிந்து கொண்டிருக்கிறது; கல்லுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிற தெய்வத்தைப் போல. பயிற்சி என்னும் உளியைக் கொண்டு ஒவ்வொரு மனிதனும் அவனுள்ளே ஒளிந்து கொண்டிருக்கும் படைக்கும் திறனை வெளிக் கொணர முடியும்.

வாழ்க்கையில் வெற்றி பெற இன்றியமையாத தேவைகளில் படைப்பாற்றல் மிக்க சிந்தனையும் ஒன்று. அது அன்றாட வாழ்வில் எவ்விதம் பயன்படுகிறது?

கணவன் வேலை செய்யும் நிறுவனம் மூடப்பட்டுவிட்டது. சம்பளம் இல்லையே; எப்படி குடும்பம் நடத்துவது என்ற கவலையில் கணவன் மட்டுமல்ல, மனைவியும் மனம் தளர்ந்து விடுகிறாள். படைப்பாற்றல் மிக்க சிந்தனை உள்ள மனைவியோ எப்படி குடும்பத்தை நடத்தலாம் என்று சிந்திக்கிறாள். பக்கத்து வீடுகளில் உள்ள குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளலாம்; குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம். வடாம், மிட்டாய் போன்றவைகளை வீட்டிலே செய்து கடைகளுக்கு விற்கலாம்; துணிகளுக்கு இஸ்திரி போட்டுக் கொடுக்கலாம்; எல்.ஐ.சி, யூ.டி.ஐ போன்ற நிறுவனங்களுக்குப் பிரதிநிதியாகப் பணி புரியலாம்; கவர்கள் செய்து கடைகளுக்கு விற்கலாம்; மொத்தமாகக் காய்கறிகள் வாங்கி வந்து பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு விற்கலாம்; இப்படி எளிய முறையில் வீட்டிலிருந்தபடியே சம்பாதித்துக் குடும்பத்தை நடத்துகிறாள். கணவனும் மனம் தளராமல் வேறு வேலை தேடும் முயற்சியில் ஈடுபடுகிறான்.



**வா**ழ்க்கையில் வெற்றி பெற உறுதுணையாக உள்ள இந்த படைப்பாற்றல் மிக்க சிந்தனையை வளர்த்துக் கொள்ள இதோ சில எளிய வழிகள் :

● 'கற்பனையில் வாழ்கிறாய்', ''ஆகாசக் கோட்டை கட்டுகிறாய்'', ''பகல் கனவு காண்கிறாய்'' என்று யாராவது ஏளனம் செய்தால் அதைப் பொருட்படுத்தாதீர்கள். மனிதன் தான் பறப்பது போல் கற்பனை செய்யாமல் இருந்திருந்தால் விமானத்தைக் கண்டு பிடித்திருக்க முடியுமா? மனிதன் கண்டுபிடித்துள்ள அத்தனை பொருட்களுமே முதலில் அவன் கற்பனையில் தோன்றியவைதாம். தினமும் ஒரு பதினைந்து நிமிடம் உங்கள் கற்பனைக் குதிரையைப் பறக்க விடுங்கள்.

உபயோகமாகச் சிந்திக்கிறோமா என்பதையும் கவனியுங்கள்.

● தரையிலோ, சுவரிலோ படம் வரையாத குழந்தையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? ''தரையை எத்தனை தடவை துடைப்பது?'' ''சுவருக்கு யார் வெள்ளை அடிப்பது?'' என்று குழந்தைகளைக் கண்டிக்காதீர்கள். ''எப்பொழுது பார்த்தாலும் கிறுக்கிக் கொண்டிருக்

கிறாயே; போய்ப் படி; நிறைய மார்க் வாங்கினால்தான் நல்ல வேலை கிடைக்கும்'' என்று அதட்டாமல் ஒரு ஸ்லேட்டு அல்லது நோட்டுப்புத்தகம் வாங்கிக் கொடுங்கள். ''நன்றாக வரைகிறாயே இனி இதில் வரை'' என்று பாராட்டுங்கள்.

● ஏதாவது ஒரு பொருளை எடுத்துக் கொண்டு அதை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று சிந்தித்துப் பாருங்கள். எடுத்துக்காட்டாக ஒரு வார ஏட்டை எடுத்துக் கொள்ளுங்கள். மின்விசிறி ஓடவில்லை என்றால் விசிறிக் கொள்ளப் பயன்படுத்தலாம். பொட்டலம் மடிப்பதற்குப் பயன்படுத்தலாம். வாழைக்காய் பஜ்ஜியில் எண்ணெய் நிறைய இருந்தால், அதை உறிஞ்சுவதற்குப் பயன்படுத்தலாம். இருக்கை அழுக்காக இருந்தால் தூசு தட்டுவதற்குப்



பயன்படுத்தலாம். அவசரமாகக் குறிப்பு எழுதவேண்டி நேர்ந்தால் குறிப்பேடாகப் பயன்படுத்தலாம். பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொழுது கடன்காரன் எதிரே வந்து விட்டால் முகத்தை மறைத்துக் கொள்ளவும் பயன்படுத்தலாம்!

● இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நியதியைத் தள்ளி வைத்துவிட்டு வேறு கோணத்தில் பாருங்கள். எடுத்துக்காட்டாகப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கச் சாலையை அகலப்படுத்துவதற்குப் பதிலாக, 'மாடி சாலை' அமைத்து இலேசான வாகனங்களை அதில் அனுமதித்தால் என்ன என்று சிந்தித்துப் பாருங்கள்.

● தலைகீழாக நினைத்துப் பாருங்கள். எடுத்துக்காட்டாக, நிறையப் பணம் இருந்தால் வியாபாரம் செய்யலாம் என்பதற்குப் பதிலாக வியாபாரம் செய்தால் நிறையப் பணம் இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

● செய்தித்தாளோ, பத்திரிகையோ படிக்கும்போது படிக்கும் செய்தியைத் தொலைக்காட்சியில் காண்பதுபோல மனக் கண்ணில் காட்சியாகக் காண முயற்சி செய்யுங்கள்.

● ஆழ்மூச்சுப் பயிற்சி செய்யுங்கள். மூச்சு, நம் மனத்திற்கும், உடலுக்கும் பாலமாக இருக்கிறது. ஆழ்மூச்சு (Deep Breathing) நம்மை ஆல்ஃபா (Alpha) என்னும் மன நிலைக்கு அழைத்துச் செல்வதாயும், அந்த மனநிலையில் நமது வலது மூளை தீவிரமாக வேலை செய்வதாகவும் மூளை நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். கற்பனை வலது மூளையின் ஒரு செயலாக இருப்பதால், ஆழ்மூச்சு நம் கற்பனைத்திறன் வளர உதவுகிறது.

● நகைச்சுவையாகப் பேசவும் நினைக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். எடுத்துக் காட்டாக, உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களைச் ''சோம்பேறி'' என்று திட்டினால் அதற்காகக் கோபமோ, வருத்தமோ அடையாதீர்கள். ''கணவனுக்கு ஏற்ற மனைவி'' என்று மட்டும் சொல்லுங்கள்.

● 'அந்த இறந்துபோன மாடு இருந்தால், இந்த உடைந்துபோன குவளை நிறையப் பால் கறக்குமே' என்று நடந்து



முடிந்துவிட்டதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். நீங்கள் தொலைபேசியில் ஒருவருடன் பேசிக் கொண்டே இருந்தால் எப்படி மற்றவர்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள முடியாதோ, அதுபோல நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தால், புதிய சிந்தனைகள் உங்கள் மனத்துடன் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

● பிறர் ஏளனம் செய்வார்கள் என்பதற்காகப் புதிய சிந்தனைகளுக்குத் தடை உத்தரவு போடாதீர்கள். அந்த புதிய சிந்தனைகளால் நீங்கள் வெற்றி அடையும் பொழுது உங்களை ஏளனம் செய்தவர்கள்தான் உங்களை முதலில் பாராட்டுபவர்களாக இருப்பார்கள்.

பொன். இளங்கோ

# புதிய உறவுகள்

"ஏங்க..."

மெல்ல தயக்கத்துடன் ஆரம்பித்தாள் மீனா.

"என்ன...?"

குரலிலும் பார்வையிலும் கோபத்தைத் தீயாய்க் கக்கியபடி திரும்பினான் ரமேஷ்.

"இல்லே... வந்து..."

அவசரமாய் போஸ்ட் ஆபீஸ் வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்த கணவனின் கோபத்தில், சொல்ல வந்ததைக் கூற முடியாமல் தவித்தாள் மீனா.

"என்னடி... வந்து.. போயி... சொல்ல வந்ததைச் சீக்கிரம் சொல்லித் தொலையேன்..."

'அம்மா கையால் நெத்திலிக் கருவாடும் மாங்காய் வத்தலும் போட்டுக் காரமாய்க் குழம்பு வைத்துச் சாப்பிட வேண்டும்' என்று மனத்தில் எழுந்த ஆசையை அடக்க முடியாத மீனா, "இல்லே... அம்மா வீட்டுக்குப் போகலாம்னு..." என்று மெல்ல மீண்டும் ஆரம்பித்தாள்.

"மீன் குழம்பு ஆசை வந்து விட்டதாக்கும். மீனா... அம்மா வீடு... ஆத்தா வீடுன்னு போகிற ஆசையை விட்டு விடு. என் மானமே போகுது. கருவாட்டுக் கடைக்காரி பொண்ணுதானே நீயும்... அதுதான் உனக்கும் புத்தி இப்படிப் போகுது!"

ரமேஷின் வெறுப்பில், தன் ஆசைகள் நொறுங்கிப் போவதை உணர்ந்தாள் மீனா.

பொங்கி வந்த அழுகையைக் கட்டுப் படுத்திக் கொண்டு, "சரிங்க..." என்றாள் மீனா. மறுத்தால் அடிப்பான். 'இப்போது இருக்கும் உடல்நிலையில் அடிவாங்கக்கூட உடலில் தெம்பில்லையே...' என்று மனசைத் தேற்றிக் கொண்டாள். இருந்தாலும் ஒரே ஊரில் இருந்தும் 'அப்பா... அம்மாவைப் பார்க்கக் கூடாது' என்று தடை விதிக்கும் கணவன் மீது கோபம் வந்தது.

"மீன் கடைக்காரி பொண்ணு என்று தெரிந்துதானே கட்டிக் கொண்டார். மீன் விற்ற காசில் போட்ட பத்துப் பவுன் நகை குடிக்க.... சீட்டாட வேண்டியிருக்கு... மீன்கார மாமனார் - மாமியார் கசக்குதாக்கும்..."

**கமலா கந்தசாமி**

வெளியிட முடியாத கோபத்தை மனசிற்குள் பேசித் தீர்த்துக் கொண்டாள் மீனா. அவளால் அது மட்டும்தானே முடிகிறது.

மீனாவின் தாய் தாயம்மா... திருத்துறைப்பூண்டி ரயில்வே ஸ்டேஷன் ஓரத்தில் ஒரு மீன் கடை வைத்திருந்தாள். அவள் கணவன் வீரையன் இரவே சைக்கிளில் நாகூர் - வேளாங்கண்ணி வரை போய் மீன் வாங்கி வருவான். ஒரே மகளுக்கு 'மீனா' என்றுதான் தாயம்மாள் பெயரிட்டு வளர்த்தாள். கான்வென்டில் ப்ளஸ்டு வரை படிக்க வைத்தாள்.

உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைத்தது. வியர்வை சிந்த அறுபது கிலோ மீட்டர் சைக்கிள் மிதித்து... நாற்றத்துடன் போராடிச் சம்பாதித்த பணத்தில் மீனாவிற்கு என சங்கிலி, நெக்லஸ் என்று பத்துப் பவுனுக்கு மேல் போட்டு... 'கவர்மெண்டு உத்யோக மாப்பிள்ளை' என்று பார்த்துத்தான் ரமேஷுக்குக் கட்டி வைத்தாள்.

'முழுக்கை சட்டை... முழுக்கால் சட்டை' என்று ஸ்டைலாய் வரும் மாப்பிள்ளையைப் பார்த்து மனதிற்குள் மகிழ்ந்தாள் தாயம்மா. மாறாக மனதில் வெறுப்பையே சுமந்தான் ரமேஷ்.

"திருடினாத்தாங்க கேவலம். பொய் சொல்றதுதாங்க தப்பு. உழைச்சி எந்தத் தொழில் செய்தாத்தான் என்னங்க..." மீனா நல்ல நேரத்தில் நயந்து சொல்லிப் பார்த்து விட்டாள்.

"போடி... ப்ரண்ட்ஸ் எல்லாம் எவ்வளவு கேவலமாப் பேசறானுக தெரியுமா?" என்பான் ரமேஷ்.

"உங்க ப்ரெண்ட்ஸ் எல்லாம் குடிக்கிறவனுக... கிளப்ல காசு வச்சிச் சீட்டு ஆடறவனுக... பொண்டாட்டி வயத்துல அடிச்சி... அவ நகையை அடகு வச்சி வாழறவனுக... அவனுங்க சொல்றாங்கன்னு இப்படிப் பேசலாமா?" ஒருமுறை பொறுக்க முடியாமல் கேட்டு விட்டாள் மீனா.

பலன்...

அடிவாங்கியதுதான். எனவே இப்போதெல்லாம் அப்பா அம்மாவைப் பற்றி அவன் எவ்வளவு கேவலமாய்ப் பேசினாலும் மீனா வாயே திறப்பதில்லை.



ஆனாலும்... இந்த முறை ஏமாற்றம் அதிகமாய் இருந்தது. இது ஐந்தாவது மாதம். சதா வாயில் எச்சில் ஊறிய மசக்கை வேறு. வெறும் சாம்பார் சாதம் சாப்பிட்டு நாக்கே செத்து விட்டது போல் உணர்ந்தாள்.

அம்மா வைக்கும் நெத்திலிக் கருவாட்டுக் குழம்பின் வாசனைக்கு நாக்கு ஏங்கியது...

பக்கத்து வீட்டுப் பார்வதியக்காவிடம் சொல்லி அனுப்பினால், அம்மா செய்து கொடுத்து அனுப்புவாள். ஆனால், கணவனுக்குத் தெரியாமல் அது போல் செய்திட மனமில்லை.

தரையில் பாயை விரித்துப் படுத்தாள். வேலை செய்ய முடியவில்லை. சமைக்க வேண்டும். பாத்திரம் எல்லாம் துலக்காமல் கிடந்தன.

ரமேஷுக்கு பக்கத்து போஸ்ட் ஆபீஸில்தான் வேலை. டாண் என்று ஒரு மணிக்குச் சாப்பிட வந்துடுவான். படுக்க மனமில்லாது எழுந்து ஒயர் கூடையை எடுத்துக் கொண்டு நடந்தாள்.

ஆஸ்பத்திரி தெருவில் கத்தரிக்காய்... முருங்கைக்காய் கிடைக்கும்...

கால் கிலோ கத்தரியும், ஒரு முருங்கைக் காயும் வாங்கி வந்து சமைத்தாள். ஒரு சொட்டுக் குழம்பை வாயில் வைத்துப் பார்த்தாள். ருசி இல்லை. வயிற்றைக் குமட்டியது. கருவாட்டுக் குழம்பிற்கு நாக்கு துடித்தது.

**ம**ணி பகல் ஒன்று முப்பது ஆகி விட்டது. ஆபீஸில் இருந்து ரமேஷ் வரவில்லை. கணவன் வரட்டும் என்று காத்திருந்தாள். காலையில் வேறு சாப்பிடவில்லை. வாசலில் எட்டிப் பார்த்தாள். கணவன் வரவில்லை.

படுத்துக் கொஞ்ச நேரம் கண் மூடி விட்டாள்.

முப்பது நிமிடம் கூட இருக்காது. திடுக்கிட்டு விழித்து வாசலில் எட்டிப் பார்த்தாள்.

ரமேஷ் இன்னும் வரவில்லை. 'ஏன்?' குழப்பத்துடன் யோசித்தாள். 'டாண் என்று ஒரு மணிக்கு எல்லாம் ஓடி வந்து விடுவாரே... பசி பொறுக்க மாட்டாரே...' என்ற உணர்வில் கணவனுக்காக ஏங்கினாள் மீனா.

அவசர அவசரமாய் ஒரு டப்பாவில் குழம்புச் சாதமும்... இன்னொரு டப்பாவில் மோர் சாதமும் பிசைந்து எடுத்துக் கொண்டு நடந்தாள்.

நல்ல வெயில். காலில் செருப்புக் கூட இல்லை. ரோட்டில் தார் எல்லாம் உருகி இருந்தது. நெருப்பில் கால் வைப்பது போன்ற வெப்பம்.

அண்ணா சிலைக்கு அருகில்தான் போஸ்ட் ஆபீஸ். பக்கத்து டீக்கடையில் நிற்கிறானா என்று தேடிப் பார்த்தாள். இல்லை. மனதில் ஒரு இனம்புரியாத பயம் கவ்வியது. அவசரமாய் ஆபீஸ் படியேறினாள்.

உள்ளே சோகமாய் உட்கார்ந்திருந்த ரமேஷ் மீனாவைப் பார்த்ததும் அவசரமாய் வெளியில் ஓடி வந்தான்.

''ஏன்... உன்னை யாரு வரச் சொன்னது...?'' என்றான். அவன் குரலில் கோபத்திற்குப் பதில் ஒரு பதற்றம் இருந்தது.

கணவனின் முகத்தை ஏறிட்டாள் மீனா... அவன் தலை கலைந்திருந்தது. முகத்தில் ஒரு சோகம். கண்கள் கூட கலங்கியிருப்பது தெரிந்தது. கணவனை இந்த ஆறு மாதத்தில் அப்படிப் பார்த்து அறியாத மீனா பதறிப் போனாள்.

''ஏங்க... என்ன ஆச்சுங்க.... ஏன் இப்படிச் சோகமா இருக்கீங்க...?''

மனைவியின் முகத்தை ஏறிட்டான் ரமேஷ். அவள் விழிகள் கலங்கியிருப்பது அறிந்து, மனதில் முதல் முறையாக மீனா மீது பாசம் எழுந்தது.



'காலையில் எத்தனை கோபமாய்த் திட்டினோம். அப்படியிருந்தும் ஒருவேளை சாப்பிட வராததற்குக் கூட தாங்காது சாப்பாடு எடுத்து ஓடி வந்திருக்கிறாள். அதுவும் காலுக்கு ஒரு ஜோடி செருப்புக் கூட நாம வாங்கித் தரலையே...'

''என்னங்க... சொல்லுங்க...'' பதறினாள் மீனா.

'எப்படிச் சொல்வது?' என்று குழம்பினான் ரமேஷ். 'சொன்னால் என்ன நினைப்பாள். நம்மை மதிப்பாளா?' என்ற பயமும் கூடவே எழுந்தது. 'எப்படியும் தெரியத் தானே போகிறது?' என்று சமாதானம் செய்து கொண்டு... ''மீனா... என்னை மன்னிச்சிடும்மா...'' என்றான் ரமேஷ்.

''என்னங்க மன்னிப்பு.... முதலில் விஷயத்தை என்னன்னு சொல்லுங்க...'' மீனா பதறினாள்.

''கொஞ்சம் ஆபீஸ் பணத்தை எடுத்துச் சீட்டு விளையாடிட்டேன். ஜெயிச்சி வச்சிடலாம்னுதான் எடுத்துட்டுப் போனேன்... நிறைய தோத்துட்டேன்... இப்போ திடீர்னு அதிகாரிங்க கண்டுபிடிச்சிட்டாங்க...''

மீனா எதிர்பார்த்த ஒன்றுதான். திருமணம் ஆகி ஆறு ஏழு மாதத்திற்குள் வரிசையாய் மோதிரம் - கடிகாரம்- சைக்கிள் என்று தினம் தினம் ஒன்று காணாமல் போகும். கடைசியில் மீனாவின் செயின்... அப்புறம் நெக்லஸ்... வளையல்... எல்லாம் போன பின்பு இன்று ஆபீஸ் பணம்...

''சரி... விடுங்க.. அதுக்கு என்ன செய்யணும், சொல்லுங்க...'' மீனாவின் குரலில் இருந்த உறுதியும் திடமும் ரமேஷுக்கு ஆறுதல் தந்தது.

''மூவாயிரம்தான் மீனா. நானும் பல இடத்தில கேட்டுப் பார்த்துட்டேன். எல்லோரும் கைவிரிச்சிட்டாங்க. மாலை ஐந்து மணிக்குள் கட்டிட்டா இந்தத் தடவை மன்னிச்சிடறேன்னு சொல்றாங்க...''

''சரி. கவலையை விடுங்க... முதலில் சாப்பிடுங்க...'' என்ற மீனாவின் குரல் கட்டளை போல் ஒலித்தது.

''இன்னும் ஒரு மணி நேரத்துல பணத்தோட வர்றேன்...''

ரமேஷின் பதிலுக்குக் கூட காத்திராமல் குறுக்கு வழியாய் ஓட்டமும் நடையுமாய் அம்மா கடைக்குச் சென்றாள் மீனா.

மகளை அந்த நேரத்தில் எதிர்பார்க்காத தாயம்மா பதறிப் போய். ''என்ன மீனா... ஏன் இப்படி ஓடி வர்றே...?'' என்றாள்.

''அம்மா... எனக்கு அவசரமாய் மூவாயிரம் பணம் வேண்டும். சீக்கிரம்... உன் செயினை செட்டியார்கிட்டே அடகு வச்சிட்டு வாங்கி வா...''

''ஏன் மீனா.. உன் புருஷன் சீட்டாடித் தோற்கவா?''

''இல்லேம்மா... ஆபீஸ்ல அவருக்கு புரமோஷன் கிடைக்கும் போல இருக்கு. இன்னைக்குள் மூவாயிரம் டெபாசிட் கட்டணும்....'' அந்த நிமிடத்தில் தோன்றிய பொய்யை மீனா கூறினாள்.

மாப்பிள்ளைக்கு புரமோஷன் என்றதும் தாயம்மா, ''சரி மீனா... ஒரு நிமிஷம் இரு...'' என்றபடி கழுத்தில் கிடந்த செயினைக் கழற்றித் தாளில் மடித்துக் கொண்டே நடந்தவள், அடுத்த பத்தாவது நிமிடம் பணத்துடன் ஓடி வந்தாள்.

''அம்மா... இது கடன்தான்... சீக்கிரம் தீர்த்திடறேன்.''

மகள் மீனாவின் பதிலில் மனம் நெகிழ்ந்து போன தாயம்மா, ''உன்னை விட்டா எனக்கு வேறு யாரு இருக்கா மீனா. உனக்குச் செய்றதுதானே என் கடமை'' என்று தாயம்மாவும் மனம் நெகிழ்ந்தாள்.

'எங்கே அழுகை வந்து விடுமோ' என்ற பயத்தில் 'வர்றேன்' என்று சொல்லிக் கொள்ளக் கூட முடியாது அவசரமாய்த் திரும்பினாள் மீனா.

''இந்தாங்க... முதலில் போய் ஆபீஸ் பணத்தைக் கட்டிட்டு வாங்க...'' என்றபடி மீனா பணத்தை நீட்ட, நடுங்கும் கைகளுடன் அதை வாங்கினான் ரமேஷ்.

'எங்கே பணம் வாங்கியிருப்பாள்' என்பது கூறாமலே அவனுக்குப் புரிந்தது.

'மீன் விற்ற காசுதான் தன் மானத்தைக் காக்கப் போகிறது...' என்று மனதில் ஒரு நொடியில் உதித்த எண்ணத்தின் பிரதிபலிப்பாய் நன்றியுடன் மீனாவைப் பார்த்தான்.

''போங்க... சீக்கிரம் பணத்தைக் கட்டிட்டு வாங்க'' மீனா மறுபடியும் கெஞ்சுவது போல் கேட்க, பணத்துடன் புறப்பட்டான் ரமேஷ்.

மறுநாள் காலை.

''மீனா... சீக்கிரம் கிளம்பு மீனா...'' ரமேஷின் குரலில் என்றுமில்லாத மகிழ்ச்சி கலந்திருந்தது.

''எங்கே... சினிமாவிற்கா?'' புரியாது மீனா குழப்பத்துடன் கேட்டாள்.

''இல்லே... போய் மாமா.. மாமியை பார்த்துட்டு வந்துடலாம்'' என்றான் ரமேஷ்.

முதன் முதலாய்த் தன் அம்மா... அப்பாவை 'மாமா', 'மாமி' என்று கணவன் வாய் நிறைய அழைத்ததில் மனம் குளிர்ந்தாள் மீனா. அம்மா கையால் சாப்பிடப் போகும் கருவாட்டுக் குழம்பிற்கு இப்போதே நாக்கில் எச்சில் ஊறியது.

● சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குப் பரிசு வழங்கும் விழாவில் மாணவர்களுக்குப் பதிலாக அவரவர் பெற்றோர்கள்தாம் பரிசுகளை ஏற்றுக் கொண்டனர். காரணம் என்ன தெரியுமா? கட்டுரை தயார் செய்த பதின்மூன்று மாணவர்களும் மேல் படிப்புக்கு அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டதுதான்!

- தா. செல்வராசன்

# சிவகாமியின் சபதம்

## இருபத்தைந்தாம் அத்தியாயம்
## மகேந்திரர் சொன்னார்!

சிவகாமி விம்மி ஓய்வதற்குச் சிறிது நேரம் கொடுத்து விட்டுக் குண்டோதரன் "தாயே! தென் தமிழ்நாட்டில் 'ஆக்கப் பொறுத்தவருக்கு ஆறப் பொறுக்கவில்லையா?' என்று ஒரு பழமொழி உண்டு. தாங்களும் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர்கள். இத்தனை நாள் பொறுத்திருந்தவர்கள், காரிய சித்தியடையப் போகும் சமயத்தில் பொறுமை இழக்கலாமா?" என்றான்.

"குண்டோதரா! எனக்கா நீ பொறுமை உபதேசம் செய்கிறாய்? ஒன்பது வருஷ காலம் பகைவர்களின் நகரில் நிர்க்கதியாய், நிராதரவாய் உயிரை வைத்துக் கொண்டிருந்தவளுக்கா பொறுமையை உபதேசிக்கிறாய்?" என்று சிவகாமி தாங்காத மனக் கொதிப்புடன் கேட்டாள்.

"தாயே! தங்களுக்குப் பொறுமையை உபதேசிக்கவில்லை. என்னுடைய சக்தியின்மையைத்தான் அவ்விதம் வெளியிட்டேன். இராமாயணக் கதையில் இன்னொரு கட்டத்தைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமார், பிராட்டியைத் தன்னுடன் புறப்பட்டு வந்து விடும்படி கோரினார். இராமனிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதாகச் சொன்னார். ஆனால், சீதாதேவி அனுமாருடன் வருவதற்கு மறுத்து விட்டார்....!" என்றான் குண்டோதரன்.

"குண்டோதரா! சீதாதேவியின் உபமானத்தை எதற்காகச் சொல்லுகிறாய்? நான் சீதாதேவி அல்ல; மிதிலையை ஆண்ட ஜனக மகாராஜாவின் புத்திரியும் அல்ல. ஏழைச் சிற்பியின் மகள்...!"

"அம்மா! நானும் அனுமார் அல்ல, உருவத்திலே ஏதோ அந்த இராம தூதனை ஒத்திருக்கிறேன்! ஆனால், அவருடைய சக்தியிலே லட்சத்தில் ஒரு பங்கு கூட எனக்குக் கிடையாது. இந்த வாதாபி நகரத்தைத் தனியாகக் கொளுத்தி எரித்து விட்டுத் தங்களை அழைத்துப் போகும் சக்தி எனக்கு இல்லையே! என் செய்வேன்?"

"ஆ! மறுபடியும் என் பாழும் சபதத்தைக் குறிப்பிடுகிறாய். அதைத்தான் நான் கைவிட்டு விட்டேன் என்று சொன்னேனே? என்னை உன்னோடு அழைத்துப் போகும்படிதானே சொல்கிறேன்?..."

"அம்மா! இதே வீட்டில் இதே இடத்தில் நின்று, மாமல்லர் தம்முடன் வந்து விடும்படி தங்களை வருந்தி வருந்தி அழைத்தார். தாங்கள் பிடிவாதமாக மறுத்து விட்டீர்கள். 'என் சபதத்தை நிறைவேற்றி விட்டு என்னை அழைத்துப் போங்கள்' என்றீர்கள். அதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தேன். இப்போது மாமல்லர் சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். அம்மா! நாளை விஜயதசமியன்று கிளம்புவதற்கு நாள் பார்த்திருக்கிறது. எல்லாம் உத்தேசப்படி நடந்தால் சரியாக இன்னும் ஒரு மாதத்துக்குள் வாதாபி கோட்டையைப் பல்லவ சைனியம் சூழ்ந்து முற்றுகையிடும். தங்கள் கண்முன்னால் தங்களுடைய சபதம் நிறைவேறுவதைப் பார்ப்பீர்கள். அதைரியத்துக்கு இடங்கொடாமல் இன்னும் சிறிது காலம் பொறுமையாயிருங்கள்...."

"குண்டோதரா! நான் சொல்வதை நீ புரிந்து கொள்ளவில்லை. என் மனத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளவில்லை.

**அமரர் கல்கி**

அதைரியத்தினாலோ, அல்லது பொறுமை இழந்தோ நான் பேசவில்லை. எனக்காக இன்னொரு பயங்கர யுத்தம் நடப்பதைத் தடுக்க விரும்புகிறேன். என் வாழ்க்கையில் நான் அனுபவித்ததெல்லாம் போதாதா? அந்தச் சமயம் ஏதோ ஆத்திரமாயிருந்தது; அதனால் அப்படிச் சபதம் செய்து விட்டேன். இப்போது நினைத்துப் பார்த்தால் அது மூடத்தனம் என்று தோன்றுகிறது. யுத்தம் என்றால் என்னென்ன பயங்கரங்கள் நடக்கும்? எத்தனை பேர் சாவார்கள்? எத்தனை குற்றமற்ற ஜனங்கள் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள்? வெற்றி தோல்வியைப் பற்றித்தான் நிச்சயம் என்ன சொல்ல முடியும்? இந்தத் துரதிர்ஷ்டக்காரியின் மூடப் பிடிவாதத்துக்காக அம்மாதிரிக் கஷ்டங்கள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனாலேதான் என்னை உன்னோடு அழைத்துப் போகச் சொல்லுகிறேன்!'' என்றாள் சிவகாமி.

இதற்கு என்ன மறுமொழி சொல்லுவது என்று தெரியாமல் குண்டோதரன் திகைத்து நின்றான். சிறிது நேரம் யோசித்து,



''அம்மா! இனிமேல் தங்களுடைய சபதத்தைத் தாங்கள் மாற்றிக் கொண்டபோதிலும், மாமல்லர் வாதாபிப் படையெடுப்பைக் கைவிட முடியாது. மகேந்திர பல்லவர் மரணத் தறுவாயில் மாமல்லருக்கு இட்ட கட்டளையை அவர் நிறைவேற்றியே தீருவார்!'' என்றதும், சிவகாமி, ''ஆ! மகேந்திரர் என்ன கட்டளையிட்டார்?'' என்றாள்.

'ஆயனச் சிற்பியின் மகள் செய்த சபதத்தை எப்படியாவது நிறைவேற்றியே தீர வேண்டும் என்று கட்டளையிட்டார்! வாதாபியைக் கட்டு எரித்துச் சிவகாமி அம்மையைக் கொண்டு வந்தால்தான் பல்லவ குலத்துக்கு நேர்ந்த அவமானம் தீரும் என்று வற்புறுத்திக் கூறினார். அதற்காக இடைவிடாத பிரயத்தனம் செய்யும்படி மாமல்லரையும் மந்திரிமார்களையும் கேட்டுக் கொண்டார்!'' என்று குண்டோதரன் கூறியதும், ''ஆகா! சக்கரவர்த்திக்கு என் பேரில் அவ்வளவு கருணை இருந்ததா! அவரைப் பற்றி என்னவெல்லாம் நான் தவறாக எண்ணினேன்?'' என்று கூறிச் சிவகாமி மறுபடியும் கலகலவென்று கண்ணீர் விட்டாள்.

பிறகு மகேந்திர பல்லவரின் மரணத்தைப் பற்றியும் இன்னும் காஞ்சியில் சென்ற ஒன்பது வருஷமாக நடந்த சம்பவங்களைப் பற்றியும் விவரமாகச் சொல்லும்படி கேட்டாள்.

குண்டோதரன் எல்லாச் சம்பவங்களையும் பற்றிக் கூறினான். ஆனால், ஒரு சம்பவத்தைப் பற்றி மட்டும் அவன் பிரஸ்தாபிக்கவே இல்லை. அதைச் சொல்ல அவனுக்குத் துணிச்சல் ஏற்படவில்லை.

குண்டோதரன் விடைபெற்றுக் கிளம்ப வேண்டிய சமயம் வந்த போது, சிவகாமி ஏக்கம் நிறைந்த குரலில், ''அப்பனே! மாமல்லர் நிச்சயம் வருவாரா? அல்லது எனக்கு வீண் ஆசை காட்டுகிறாயா?'' என்று கேட்டாள்.

''நிச்சயமாக வருவார், அம்மா! பல்லவ குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக அவசியம் வந்தே தீருவார்!'' என்றான் குண்டோதரன்.

''உண்மைதான்! பல்லவ குலத்தின் கௌரவந்தான் அவருக்குப் பெரிது. அதற்காகத்தான் இவ்வளவு காலம் கழித்து வருகிறார். என்பேரில் உள்ள அன்புக்காக வருவதாயிருந்தால், முன்னமே வந்து என்னை அழைத்துப் போயிருக்க மாட்டாரா?'' என்றாள்.

குண்டோதரன் தன் மனத்திற்குள், ''ஆ! ஸ்திரீகளைத் திருப்தி செய்வது மிகவும் கடினமான காரியம். இப்படித் திருப்தி செய்ய முடியாத ஸ்திரீகளுக்காகச் சிலர் இத்தனை

சிரமம் எடுத்துக் கொண்டு இப்படி உயிரை விடுகிறார்களே? என்ன பைத்தியக்காரத் தனம்?'' என்று எண்ணினான்.

பிறகு, ''அம்மா! பல்லவ குலத்தின் கௌரவத்தைக் காட்டிலும் தங்களுடைய அன்பே பெரிதென்று கருதி மாமல்லர் இங்கு ஒருநாள் மாறுவேடத்தில் வரவில்லையா? அவருடன் புறப்பட்டு வந்து விடும்படி தங்களை எவ்வளவோ மன்றாடி வேண்டிக் கொள்ளவில்லையா?'' என்று வெளிப்படையாகக் கேட்டான்.

''ஆம், குண்டோதரா! அப்போது நான் செய்தது பெரிய தவறுதான். அந்தத் தவறுக்காக ஒன்பது வருஷம் என்னைத் தண்டித்தது போதும் என்று மாமல்லரிடம் சொல்லு! அவரை மீண்டும் ஒருமுறை பார்த்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்காகத்தான் இத்தனை நாள் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் சொல்லு!'' என்றாள் சிவகாமி.

நல்லவேளையாக, அந்தப் பேதை தனக்கு இன்னும் எவ்வளவு கடுரமான தண்டனைகள் காத்திருக்கின்றன என்பதை அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால், எந்தக் காரணத்துக்காகவேனும் உயிரை வைத்துக் கொண்டிருக்க உடன்பட்டிருக்கக் கூடுமா?

குண்டோதரன் கடைசியாகப் புறப்பட வேண்டிய சமயத்தில் தயங்கித் தயங்கி நின்றான். அவனைப் பார்த்தால் ஏதோ சொல்ல விரும்பியவன் போலவும், அதற்குத் துணிச்சல் வராமல் சங்கடப்படுவதாகவும் தோன்றியது.

சிவகாமி அவனைத் தைரியப்படுத்தி, ''இன்னும் ஏதாவது சொல்வதற்கு இருக்கிறதா? தயங்காமல் சொல்லு!'' என்றாள்.

''தேவி வேறு ஒன்றுமில்லை. 'ஸ்திரீகளிடம் இரகசியம் தங்காது' என்பதாக ஒரு வழக்கு உண்டு. மகாபாரதத்திலே கூட அந்த மாதிரி ஒரு கதை இருக்கிறது. அம்மா! கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் வந்து போன விஷயமோ, மாமல்லர் படையெடுத்து வரும் விஷயமோ இங்கே பிரஸ்தாபம் ஆகக் கூடாது!''



சிவகாமியின் முகத்தில் சோகம் கலந்த புன்னகை அரும்பியது.

"குண்டோதரா! மாமல்லருக்கு இத்தனை நாளும் என்னால் ஏற்பட்ட சங்கடமெல்லாம் போதாதா? இந்த வஞ்சகப் பாதகர்களிடம் இன்னமும் அவரை நான் காட்டிக் கொடுப்பேனா? இங்கே எனக்குத் தெரிந்தவர்கள் நாகநந்தி பிக்ஷுவைத் தவிர யாரும் இல்லை. அவரும் அஜந்தாவுக்குப் போகிறார். ஆகையால் நீ கவலையில்லாமல் திரும்பிச் செல்!" என்றாள் சிவகாமி.

பிறகு, "குண்டோதரா! நீ உன்னை அனுமார் என்று சொல்லிக் கொண்டாய். அந்தப் பெயருக்குத் தகுதியாக நடந்து கொள். மாமல்லரை விட்டு ஒரு க்ஷணமும் பிரியாமல் இருந்து அவரைக் காப்பாற்று! இந்தப் பாவிகள் நெஞ்சிலே விஷம் உள்ளவர்கள். விஷம் தோய்ந்த கத்தி எறிந்து கொல்கிறவர்கள். ஐயோ! என்னுடைய மூடப் பிடிவாதத்தினால் அவருக்கு மறுபடியும் ஆபத்து வர வேண்டுமா?" என்றாள் சிவகாமி.

சிவகாமி ஏன் யுத்தத்தை விரும்பவில்லை என்பது அப்போதுதான் குண்டோதரனுக்குத் தெளிவாயிற்று. மாமல்லருக்குப் போர்க்களத்தில் ஏதாவது அபாயம் வரப் போகிறதோ என்று அவள் கவலைப்பட்டதுதான் காரணம் என்று தெரிந்து கொண்டான். சிவகாமி தேவியிடம் அவனுடைய பக்தியும் அபிமானமும் முன்னை விடப் பன்மடங்கு அதிகமாக வளர்ந்தன.

## இருபத்தாறாம் அத்தியாயம்
# நீலகேசி உதயம்

குண்டோதரன் வந்து விட்டுப் போனதிலிருந்து சிவகாமியின் சித்தக் கடலில் கொந்தளிப்பு அதிகமாயிற்று. மலை போன்று எண்ண அலைகள் எழுந்து விழுந்து நாற்புறமும் மோதிப் பாய்ந்து அல்லோலகல்லோலம் செய்தன.

பொழுது போவது மிகவும் சிரமமாகி, ஒவ்வொரு கணமும் ஒரு முடிவில்லாத யுகமாகத் தோன்றியது.

குண்டோதரன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்தாள். அவனிடம் நாம் உசிதமான முறையில் பேசினோமோ இல்லையோ என்ற சந்தேகம் அடிக்கடி தோன்றியது. மாமல்லரிடம் போய் அவன் என்ன சொல்கிறானோ என்னவோ என்ற கவலையும் அடிக்கடி ஏற்பட்டது.

மாமல்லர் வரப் போவது பற்றிய இரகசியத்தை வெளியிட்டு விட வேண்டாம் என்று குண்டோதரன் தனக்கு எச்சரிக்கை செய்ததைப் பற்றி நினைத்துக் கொண்ட போது மட்டும் சிவகாமியின் சோகம் குடிகொண்ட வதனத்தில் புன்னகை தோன்றிற்று.

ஆயினும், அந்த எச்சரிக்கை எவ்வளவு அவசியமானது என்பது வெகு சீக்கிரத்திலே அவளுக்குத் தெரிய வந்தது.

குண்டோதரன் வந்து சென்ற மூன்றாம் நாள் வாதாபி நகரம் அளவில்லாத அல்லோல கல்லோலத்துக்கு உள்ளாகியிருந்தது. அன்றைய தினம் புலிகேசிச் சக்கரவர்த்தி அஜந்தா கலை விழாவுக்காகப் பயணமாகிறார் என்பதும், பக்கத்திலுள்ள இராஜவீதி வழியாக அவருடைய ஊர்வலம் போகும் என்பதும் சிவகாமிக்குத் தெரிந்திருந்தது. தன் வீட்டின் பலகணியின் வழியாகவே மேற்படி ஊர்வலக் காட்சியைக் காணலாம் என்று அவள் அறிந்திருந்தாள்.

கடைசியாக, பிற்பகலில் மூன்றாவது ஜாமத்தில் சக்கரவர்த்தியின் பிரயாண ஊர்வலம் வந்தது.

பட்டத்து யானை மீது புலிகேசிச் சக்கரவர்த்தி கம்பீரமாக வீற்றிருந்தார். அவருக்குப் பின்னால் சிவிகைகளில் நாகநந்தி பிக்ஷுவும் சில யாத்திரிகரும் சென்றார்கள்.

அழகிய தங்க ரதத்தில் சக்கரவர்த்தியின் இளம் புதல்வர்கள் மூவரும் அமர்ந்திருந்தார்கள்.

இன்னும், சக்கரவர்த்தியின் முன்னாலும் பின்னாலும் சாம்ராஜ்யத்தின் பிரதான அமாத்தியர்கள், மந்திரிமார்கள், சாமந்தர்கள், சேனா நாயகர்கள் முதலியோர் பலவித வாகனங்களில் பெருமிதத்துடன் அமர்ந்து சென்றார்கள்.

பொது ஜனங்களின் கோலாகல கோஷங்களோடு வாத்திய முழக்கங்களும் சேர்ந்து காது செவிடுபடும்படிச் செய்தன.

இதையெல்லாம் பார்த்த சிவகாமிக்குக் காஞ்சியில் மகேந்திர பல்லவர் மாமல்ல

புரத்துக் கலை விழாவிற்கு கிளம்பும் காட்சி நினைவுக்கு வந்தது. ஆகா! முன்னொரு காலத்தில் இந்தப் புலிகேசி எத்தகைய கலை உணர்வே இல்லாத மூர்க்கனாயிருந்தான்! இப்போது எப்பேர்ப்பட்ட மாறுதல் ஏற்பட்டு விட்டது? இதற்கெல்லாம் என்ன காரணம்? - காஞ்சியைப் பார்த்து விட்டு வந்ததுதானோ?

அந்த ஊர்வலக் காட்சியைப் பற்றி பிறகு நினைத்தபோதெல்லாம் சிவகாமிக்கு எரிச்சல் உண்டாயிற்று. 'இந்தப் புலிகேசியின் ஆடம்பரமும் இறுமாப்பும் கூடிய சீக்கிரத்தில் அடங்கப் போகிறதல்லவா?' என்பதை எண்ணிய போது ஓரளவு ஆறுதல் உண்டாயிற்று.

இவர்கள் அஜந்தாவிலிருந்து திரும்பி வருவதற்குள்ளே மாமல்லர் இங்கு வந்து விடக்கூடுமல்லவா? அதை அறிந்தவுடனே இவர்களுக்கெல்லாம் எத்தகைய திகில் உண்டாகும்!

''யுத்தம் வேண்டாம்'' என்று தான் குண்டோதரனிடம் சொன்னது தவறு என்று சிவகாமிக்கு அப்போது தோன்றியது. அவளுடைய ஆத்திரத்தை அதிகப்படுத்த இன்னொரு காரணமும் சேர்ந்தது.

பட்டத்து யானைக்குப் பின்னால் சிவிகையில் சென்ற பிக்ஷு சிவகாமி இருந்த வீட்டின் பக்கம் ஒருகணம் முகத்தைத் திருப்பிப் பார்த்ததாகத் தோன்றியது. ஆனாலும், நாகநந்தி பிரயாணம் கிளம்புவதற்கு முன்னால் தன்னிடம் மறுபடியும் வந்து விடைபெறுவார் என்று அவள் எதிர்பார்த்த படி நடக்கவில்லை. ''ஆ! இந்தக் கள்ளப் பிக்ஷுவுக்கு இவ்வளவு அகங்காரமா?'' என்று எண்ணி ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டிருந்தாள்.

எனவே, அன்று மாலை இருட்டுகிற சமயத்தில் நாகநந்தி அவள் வீட்டு வாசலில் குதிரை மீது வந்து இறங்கி, உள்ளேயும் பிரவேசித்து வந்த போது சிவகாமி எல்லையற்ற வியப்பு அடைந்தவளாய், ''சுவாமி! இதென்ன? தாங்கள் அஜந்தா மார்க்கத்தில் போய்க் கொண்டிருப்பதாக அல்லவா நினைத்தேன்? போகவில்லையா என்ன?'' என்றாள்.

''கட்டாயம் போகிறேன், சிவகாமி! அஜந்தாவில் எனக்கு மிகவும் முக்கியமான காரியம் இருக்கிறது. அதில் உனக்குச் சம்பந்தம் உண்டு. அதைப் பற்றி உன்னிடம் சொல்லி விட்டுப் போக வேண்டும் என்று தான் திரும்பி அவசரமாக வந்தேன். இன்றிரவே சக்கரவர்த்தி தங்கியிருக்கும் இடம் போய்ச் சேர்ந்து விடுவேன்!'' என்று சொல்லி விட்டு, சிவகாமிக்குப் பேச இடங் கொடாமல், ''இன்று பிற்பகலில் அந்தப் பக்கம் போன ஊர்வலத்தைப் பார்த்தாயா?'' என்று கேட்டார் நாகநந்தி பிக்ஷு.

''ஓ! பார்த்தேன். மகேந்திர பல்லவர் கலைத் திருநாளுக்காகக் காஞ்சியிலிருந்து மாமல்லபுரத்துக்குப் புறப்படும் காட்சி ஞாபகம் வந்தது. ஏதேது? புலிகேசிச் சக்கரவர்த்தி மகேந்திர பல்லவரைக் கூடத் தோற்கடித்து விடுவார் போலிருக்கிறதே?'' என்றாள் சிவகாமி.

''நிச்சயமாகத் தோற்கடிப்பார்; சந்தேகமில்லை! வாதாபிச் சக்கரவர்த்தி இப்போது பழைய இரத்தவெறி கொண்ட புலிகேசி அல்ல. கலை மோகமும் ரஸிகத் தன்மையும் கொண்ட புதிய புலிகேசி'' என்றார் நாக நந்தி.

''அப்படியானால் அஜந்தாவிலும் கலைவிழா கோலாகலமாய்த்தானிருக்கும்'' என்றாள் சிவகாமி.

''அதிலும் சந்தேகமில்லை. அஜந்தாவின் புத்த பிக்ஷுக்கள் சக்கரவர்த்தியை ஒப்பற்ற முறையில் வரவேற்று உபசரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வைபவத்தை முன்னிட்டு புகழ்பெற்ற நாலந்தாவிலிருந்தும் ஸ்ரீபர்வதத்திலிருந்தும் இன்னும் பல புத்த பீடங்களிலிருந்தும் ஆசாரிய புருஷர்கள் பலர் வந்திருக்கிறார்களாம். உனக்குத் தெரியுமோ, இல்லையோ! வாதாபிச் சக்கரவர்த்திக்கு இளம்பிராயத்தில் அடைக்கலம் தந்து காப்பாற்றியது அஜந்தா சங்கிராமம்தான். ஆயினும் வெகு காலம் வரையில் அஜந்தா சங்கிராமத்துக்குச் சக்கரவர்த்தி எந்தவித உதவியும் செய்யவில்லை. அதற்கு ஜைன முனிவர்கள் இடம் கொடுக்கவில்லை. இராஜாங்கத்திலிருந்து செய்யும் உதவியெல்லாம் சமண மடங்களுக்கும் சமணக் கோயில்களுக்கும்தான் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். ஆனால், இப்போது சக்கரவர்த்தியின் மனம் மாறி விட்டது. சமணர், பௌத்தர், சைவர், வைஷ்ணவர், சாக்தர் ஆகிய எந்த மதத்தினரானாலும், சிற்ப - சித்திரக் கலைகளை வளர்ப்பவர்களுக்கெல்லாம் இராஜாங்கத்திலிருந்து மானியங்களைக் கொடுத்து வருகிறார். இது காரணமாக இப்போது இந்தச் சளுக்க சாம்ராஜ்யம் இந்தியாவிலேயே கலை வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது. கன்யாகுப்ஜத்தையும் காஞ்சியையும் வாதாபி தோற்கடித்து விட்டது!'' என்று நாகநந்தி பெருமிதத்தோடு கூறியதைச் சிவகாமி உண்மையான ஆவலோடு கேட்டுக் கொண்டு வந்தாள்.

''சிவகாமி! வாதாபிச் சக்கரவர்த்தியின் இந்த மன மாறுதலுக்கு யார் காரணம் என்று உனக்குத் தெரியுமா?'' என்று நாகநந்தி கேட்ட போது, ''சந்தேகம் என்ன சுவாமி! சகல கலைகளிலும் வல்ல மகா ரஸிகரான

## அருள்வாக்கு

ஒரு ஸமயம் தேவர்கள் எல்லோரும் பிரம்மாவிடம் போய், "எங்களுக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் பண்ணுங்கள்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்கள்.

ப்ரம்மா, "த" என்ற ஒரே ஒரு அக்ஷரத்தை மட்டும் சொல்லி விட்டு, "இதுதான் உபதேசம். இதற்கு அர்த்தம் புரிந்து கொண்டீர்களா?" என்றார்.

நம்மிடத்திலே இருக்கிற தப்பு நமக்கே நன்றாகத் தெரியும். ஆனதால் யாராவது ரொம்ப ஸூக்ஷ்மமாக, ஸூசனையாக எடுத்துக் காட்டினால் கூட உடனே நாம் புரிந்து கொண்டு விடுவோம்.

இந்த ரீதியில் தேவர்களுக்கு, ப்ரம்மா "த" என்று சொன்னவுடனேயே அதற்கு இன்னதுதான் அர்த்தமாக இருக்கும் என்று புரிந்து விட்டது. தேவர்களிடம் இருக்கிற பெரிய கோளாறு இந்த்ரிய நிக்ரஹம் (புலனடக்கம்) இல்லாததுதான். தேவலோகம் ஆனந்த லோகமல்லவா? அங்கே ஸுகவாஸிகளாக மனம்போனபடி இருப்பது தேவர்களின் வழக்கம். ஆனபடியால், "இந்த்ரியங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றுதான் ப்ரம்மா hint பண்ணுகிறார் (குறிப்பால் உணர்த்துகிறார்) என்று புரிந்து கொண்டார்கள்.

"புரிந்து விட்டது. 'தாம்யத' என்று தாங்கள் உபதேசித்து விட்டீர்கள்" என்று பிரம்மாவிடம் சொன்னார்கள்.

தமம், சமம் என்று இரண்டு உண்டு. சமம் என்பது புலனடக்கம். அதற்கும் மேற்பட்டது தமம். தமம் என்பது மனோ நிக்ரஹம் - மனதையே அடக்கி விடுவது. சமம் தமம் முதலான ஆறு குணங்களை "சமாதி ஷட்க ஸம்பத்" என்று பெயரிட்டு ஸாதகர்களுக்கெல்லாம் நம் பகவத் பாதாள் விதித்திருக்கிறார். சமத்தோடு கூடிய அதாவது இந்த்ரியங்கள் அடங்கியிருக்கிற நிலைதான் சாந்தி. மனமும் இந்த்ரியங்களோடு கட்டுப்பட்டிருப்பது தாந்தி.

"தாம்யத" என்றால் "தமத்தைச் செய்யுங்கள்; அதாவது இந்த்ரியங்களையும் மனதையும் கட்டுப்பாடு (control) பண்ணிக் கொள்ளுங்கள்" என்று அர்த்தம்.

ப்ரம்மா "த" என்று சொன்னது 'தாம்யத'வுக்கு abbreviation என்று தேவர்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

ஒரு முழு வார்த்தையைச் சொல்வதை விட அதில் முதல் எழுத்தை மட்டும் சொன்னால் அதற்கு ஜாஸ்தி சக்தி இருக்கிறது. சர்ச்சில் கூட "வி ஃபார் விக்டரி" என்று சொல்லி, எங்கே பார்த்தாலும் இந்த "வி"யை மந்த்ரம் மாதிரி பரப்பினார்.

"நீங்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டது ஸரிதான்" என்று சொல்லி ப்ரம்மா தேவர்களை அனுப்பினார்.

மநுஷ்யர்களுக்கும் இதே மாதிரி உபதேசம் வாங்கிக் கொள்கிற ஆசை வந்தது.

அவர்களும் பூர்வகாலத்தில் ப்ரம்மாவை நெருங்கக்கூடியவர்களாக இருந்தார்கள். அதனால் அவரிடம் போய் "உபதேசம் பண்ணுங்கள்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

மறுபடியும் ப்ரம்மா "த" என்ற அதே சப்தத்தை மட்டும் சொன்னார்.

மநுஷ்யர்களுக்கும் தங்கள் குற்றம் உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருந்ததால்,

---

நாகநந்தியடிகள்தான்!" என்று சிவகாமி பளிச்சென்று விடையளித்தாள்.

நாகநந்தியின் முகம் ஒன்பது வருஷத்துக்கு முன்பு நாம் பார்த்தபோதிருந்ததைக் காட்டிலும் இப்போது களை பொருந்தி விளங்கிற்று. முன்னே அந்த முகத்தில் நாம் கண்ட கொடூரம் இப்போது கிடையாது. சிவகாமியின் மறுமொழி அவருடைய முகத்தில் மலர்ச்சியை உண்டாக்கி, மேலும் களை பொருந்தியதாகச் செய்தது.

அத்தகைய முகமலர்ச்சியோடு கனிவு ததும்பிக் காந்த சக்தி வீசிய கண்களினால் சிவகாமியை அவர் நோக்கி, "கலைவாணி! நீ கூறியது உண்மை. இரத்த தாகமும் யுத்த வெறியும் கொண்டிருந்த புலிகேசியைக் கலைமோகம் கொண்ட ரஸிகனாகச் செய்தது நான்தான். ஆனால், அதற்கு முன்னால், என்னை அத்தகைய கலைப் பித்தனாகப் பண்ணியது யார்? உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் நாகநந்தியடிகள்.

பிக்ஷு குறிப்பிடுவது தன்னைத்தான் என்று சிவகாமி மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள். ஆயினும், வெளிப்படையாக "எனக்கு எப்படித் தெரியும் சுவாமி?" என்று கூறினாள்.

"ஆம், உனக்குத் தெரியாதுதான். இது வரையில் உனக்கு நான் சொல்லவும் இல்லை. அஜந்தா சங்கிராமத்துச் சுவர்களிலே எத்தனையோ அற்புதச் சித்திரங்கள் - அழியா வர்ணங்களில் தீட்டிய தெய்வீகச்



தங்களுக்கு அத்யாவச்யமான உபதேசம் இன்னது என்று பளிச்செனப் புரிந்து கொண்டார்கள்.

''அர்த்தம் தெரிந்ததா?'' என்று ப்ரம்மா கேட்டவுடன்,

''தெரிந்து கொண்டோம் - 'தத்த' என்று உபதேசம் பண்ணியிருக்கிறீர்கள்'' என்றனர்.

''தத்த'' என்றால் ''கொடு'', ''தானம் பண்ணு'' என்று அர்த்தம். 'தத்தம் பண்ணுவது', 'தத்துக் கொடுப்பது' முதலான வார்த்தைகள் வழக்கத்தில் கூட இருக்கின்றனவே!

''ஆமாம், நீங்கள் ஸரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று ப்ரம்மா மநுஷ்ய ஜாதியிடம் சொல்லி அனுப்பி வைத்தார்.

''தேவர்களும், மநுஷ்யர்களும் உபதேசம் வாங்கிக் கொண்டால் அஸுரர்கள் மட்டும் சும்மாயிருப்பார்களா? அவர்களும் ப்ரம்மாவிடம் வந்து உபதேசம் கேட்டார்கள். அவரும் பழையபடி அந்த 'க்ரிப்டிக்' (சுருக்கமான) ''த'' உபதேசத்தையே பண்ணினார். ''புரிந்ததா?'' என்று கேட்டார்.

அஸுரர்களும் உடனே, ''புரிந்து விட்டது - 'தயத்வம்' என்று உபதேசம் பண்ணி விட்டீர்கள்'' என்றனர்.

ப்ரம்மாவும் ஆமாம் என்றார்.

'தயத்வம்' என்றாலே 'தயையோடு இருங்கள்' என்று அர்த்தம்.

இரக்கமில்லாதவர்களைத் தானே அரக்கர் என்று சொல்லியிருக்கிறது? கொஞ்சம் கூட தயாதாக்ஷிண்யம் இல்லாத க்ரூர ஸ்வபாவம்தான் அஸுரர்களின் இயற்கை. அதனால் ''த''வுக்கு இப்படி அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

இடி இடிக்கிற போது ''ததத'' என்கிற மாதிரி சப்தம் கேட்கும். ''தாம்யத - தத்த - தயத்வம்'' என்பதுதான் அந்த மூன்று ''த''.

இது ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் வருகிற கதை.

நம் சங்கர பகவத் பாதாள் இதற்கு பாஷ்யம் எழுதுகிற போது, ''இங்கே தேவர், அஸுரர் என்று சொன்னதெல்லாமும் மநுஷ்யர்களுக்கு வேறல்லர். மனிதர்களிலேயே எல்லா நல்ல குணமும் இருந்தும் புலனடக்கம் இல்லாதவர்கள் தேவர்கள்; கொடுக்கிற ஸ்வபாவமேயில்லாமல் லோப குணத்தோடு இருப்பவர்கள் அசல் மநுஷ்யர்கள்; ஹிம்ஸை பண்ணிக் கொண்டு க்ரூரமாக இருக்கிற மனிதர்களே அஸுரர்கள். ஆனதால் மூன்று உபதேசங்களும் நமக்கே ஏற்பட்டவை என்றுதான் நாம் அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சித்திரங்கள் - இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமல்லவா? அந்தச் சித்திரங்களிலே பரதநாட்டியம் ஆடும் பெண்ணின் சித்திரம் ஒன்றும் இருக்கிறது. அந்தச் சித்திரந்தான் முதன் முதலில் எனக்குக் கலை மோகத்தை உண்டாக்கிற்று. சிவகாமி! அந்த அற்புதச் சித்திரத்தை என்றைக்காவது ஒருநாள் நீ அவசியம் பார்க்க வேண்டும்....''

''வீண் ஆசை எதற்காக? அஜந்தா அதிசயங்களைப் பார்க்கும் பாக்கியம் இந்த ஜன்மத்தில் எனக்குக் கிட்டப் போவதில்லை!'' என்றாள் சிவகாமி.

''அப்படிச் சொல்லாதே! இந்தத் தடவை நீ எங்களுடன் வராததில் எனக்கும் ஒருவிதத்தில் திருப்திதான். ஏனெனில் இந்தத் தடவை நீ எங்களுடன் வந்தாயானால், எனக்கும் மன நிம்மதியிராது; உனக்கும் மன நிம்மதியிராது. ஆனால் காலம் எப்போதும் இப்படியே இருந்து விடாது; சீக்கிரத்தில் மாறியே தீரும்.''

நாகநந்தி இவ்விதம் சொன்ன போது, சிவகாமியின் நெஞ்சில் 'சுரீர்' என்றது. நாகநந்தியை அவள் கூர்ந்து நோக்கி, ''காலம் எப்படி மாறும்? என்ன விதத்தில் மாறும்?'' என்று கேட்டாள்.

''நீ இந்தக் கூண்டிலேயிருந்து விடுதலையடைந்து வானவெளியில் உல்லாசமாகப் பாடிக் கொண்டு சஞ்சரிக்கும் காலம் சீக்கிரத்தில் வரலாம்!''

''ஒருநாளும் வரப் போவதில்லை'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் சிவகாமி.



''ஆயுசு பூராவும் வறுமையிலே உழன்றது அவரை ரொம்பத்தான் பாதிச்சுட்டுது போலிருக்கு!''

''எதனாலே அப்படிச் சொல்றீங்க?''

''அவரோட சுய-சரிதைக்கு 'வாழ்க்கைத் தரித்திரம்' என்றே தலைப்புச் சூட்டியிருக்காரே!''

- பெ. கலாசாமி

''அப்படியானால், உன்னுடைய சபதம் நிறைவேறும் என்ற நம்பிக்கையே உனக்கு இல்லையா?'' என்று நாகநந்தி கேட்டார்.

சிவகாமி பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டு, ''இல்லை; அந்த நம்பிக்கையை நான் இழந்து எத்தனையோ நாளாயிற்று!'' என்றாள். ஆனால், அவளுடைய மனத்தில் பெரும் பீதியும் கலக்கமும் குடி கொண்டன. இந்த வஞ்சகப் பிக்ஷு ஏதாவது சந்தேகிக்கிறாரா? நம்மிடம் உண்மை அறியப் பார்க்கிறாரா? ஒருவேளை குண்டோதரன் இவரிடம் சிக்கிக் கொண்டிருப்பானோ?

''சிவகாமி! உன்னுடைய சபதம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை நீ இழந்து விட்டாய்; ஆனால், சபதம் நிறைவேறாமல் நீ இந்த ஊரை விட்டுக் கிளம்பவும் மாட்டாய். அப்படித்தானே?''

''ஆம், சுவாமி! அப்படித்தான்!'' என்று சிவகாமி தயக்கமின்றி மறுமொழி கூறினாள். அப்போதுதான் குண்டோதரனுடைய எச்சரிக்கையை அவள் நன்றியுடன் நினைத்துக் கொண்டாள்.

''ஆகா! உன்னை இந்தக் கதிக்கு உள்ளாக்க ஒருநாளும் நான் உடன்பட்டேன், சிவகாமி! நேற்றுச் சிவப் பெரியாரிடம் சொன்னது போலச் செய்ய வேண்டியது தான். மாமல்லர் வந்து உன் சபதத்தை நிறைவேற்றிவைக்காவிடில், நானே நிறைவேற்றி வைக்கிறேன். இந்த நகருக்கு என் கையாலேயே நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுகிறேன்!''

''ஆ! இது என்ன பேச்சு? இந்தப் பைத்தியக்காரியின் பிடிவாதத்துக்காகத் தாங்கள் ஏன் அத்தகைய கொடிய காரியத்தைச் செய்ய வேண்டும்? வேண்டவே வேண்டாம்.''

''அப்படியானால் நீயாவது உன்னுடைய அர்த்தமற்ற சபதத்தை விட்டு விட வேண்டும்.''

பேச்சை மாற்றத் தீர்மானித்த சிவகாமி, ''சுவாமி! என்னைப் பற்றி இவ்வளவு பேசியது போதும். தங்களைப் பற்றிச் சொல்லுங்கள்; அஜந்தாவைப் பற்றிப் பேசுங்கள்!'' என்றாள்.

''ஆம்! முக்கியமாக என்னைப் பற்றிப் பேசுவதற்குத்தான் வந்தேன். அஜந்தாவில் நான் புனர்ஜன்மம் எடுக்கப் போகிறேன். திரும்பி வரும் போது காவி உடை தரித்த புத்த பிக்ஷுவாக வர மாட்டேன். பட்டுப் பீதாம்பரம் அணிந்த நீலகேசி மகாராஜாவாக வருவேன்!'' என்று நாகநந்தி கூறியதும், சிவகாமி வியப்புடனே அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

(தொடரும்)


GOKULAM

The monthly magazine for children

*IN THE SEPTEMBER ISSUE*

- CRICKET — The Season Ahead
- STORIES FROM OUR READERS — Peanut Clues

PLUS features and stories that will keep your child engrossed and entertained!

***BUY YOUR CHILD A COPY TODAY!***

GOKULAM,
EKKADUTHANGAL, MADRAS - 600 097

96 pages for just Rs. 3!

## சினி சிப்ஸ் :

* ஜலா, நிஜமா?



●● 'வைதேகி வந்தாச்சு' ஹீரோ சரவணனின் இரண்டாவது படம் 'பொண்டாட்டி ராஜ்யம்'. இதற்குள் அவர் கைவசம் இருபது படங்கள்! ''காரணம், அடிப்படையில் நான் ஒரு கவிஞன். அதனால் காட்சிகளை உணர்ச்சிபூர்வமாக நடிக்க முடிகிறது என்பதுதான்!'' என்று கூறும் சரவணனுக்கும் ஒரு குறை. ''எத்தனை படங்களில் நடித்தாலும் என்ன, பாரதிராஜாவின் பட வாய்ப்பு இன்னும் வரவில்லையே!'' என்கிறார் வருத்தத்துடன்.

●● ''உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் முதிர்ச்சியடையாத இரண்டு உள்ளங்களில் ஏற்படும் முதல் காதல் அனுபவம்தான், 'என் இனிய பொன் நிலாவே' படத்தின் கதை!'' என்கிறார் பாலுமகேந்திரா.

# தவிர்க்க முடியாத ஒரு நெஞ்சத்துடிப்பு!

''ஒருவேளை உங்கள் முதல் காதல் அனுபவம்தானோ!'' என்று கேட்ட போது, ''இதற்கு ஆம் என்று ஒப்புக் கொள்ளவும் முடியாது; இல்லை என்று மறுக்கவும் முடியாது. ஆயினும் அது ஒரு பாதிப்புதான்!'' என்கிறார்.

●● ரொம்பக் காலத்திற்குப் பிறகு ராஜ்கிரணின் 'அரண்மனைக் கிளி' படத்தில் நடிக்கிறார் விஜயகுமாரி. ''இந்தப் படத்தில் வசனம் பேசி நடிக்கும் போது, அந்தக் காலத்தில் அண்ணா, கலைஞர் போன்றோரின் வசனங்களைப் பேசிய உணர்வுதான் ஏற்படுகிறது. அந்த அளவுக்கு ராஜ்கிரணின் வசனமும் கூர்மையாக - அறிவுபூர்வமாக இருக்கிறது!'' என்கிறார் விஜயகுமாரி. ஜலா, உண்மையா?



●● 'செம்பருத்தி' ரோஜாவுக்கு அறிவுஜீவிப் போர்வைகளையெல்லாம் போர்த்திக்கொள்ளத் தெரியவில்லை. ''காதல் காட்சிகளில் நெருக்கமாக நடிக்கும் போது - அது வெறும் நடிப்புத்தான் என்றாலும் கூட, என்னையறியாமல் ஏற்படும் படபடப்பையும் நெஞ்சத் துடிப்பையும் தவிர்க்க முடியவில்லை. எனவே, நான் மிகவும் கவனமாக இருக்கிறேன்!'' என்று வெளிப்படையாகச் சொல்கிறார்.

* கைவசம் இருபது படங்கள்



* பாக்யராஜ் ஆசியுடன்

●● 'என்றும் அன்புடன்' டைரக்டர் பாக்யநாதனின் உயரம் என்ன தெரியுமா? வெறும் மூன்றரை அடி! சினிமா ஆர்வத்தால் கடையத்திலிருந்து சென்னையில் தஞ்சம் புகுந்தவர். ''பாக்யராஜிடம் உதவி டைரக்டராகப் பணியாற்ற எத்தனை முறை படையெடுத்திருப்பேன் தெரியுமா? அத்தனையும் கஜினி முகமது கதையான போதும் மனம் தளரவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சி செய்து அவரிடமே சேர்ந்தேன். பிறகு அவர் ஆசியுடனேயே டைரக்டராகியிருக்கிறேன்!'' என்கிறார்.

●● பாக்யநாதனுக்கு நேரெதிர் டக்ளா ராமு. பாலசந்தரால் நகைச்சுவை நடிகராக (சொல்லத்தான் நினைக்கிறேன்) அறிமுகப்படுத்தப்பட்டாலும் சோபிக்க முடியவில்லை. பம்பாயில் பார்த்து வந்த பி.ஆர்.ஓ. வேலையும் 7,500 ரூபாய்ச் சம்பளமும் சினிமா மோகத்தில் அடித்துச் செல்லப்பட்டதுதான் மிச்சம். ''நடிக்க ஆசைப்படுபவர்களுக்கு என் வாழ்க்கையே ஒரு பாடம்!'' என்கிறார் டக்ளா ராமு. ஆமாம், அதென்ன டக்ளா? ஹிந்தியில் டாக்ளா என்றால் 'சொட்டை' என்று அர்த்தமாம்!

– கலைத்தூதன்

# பெரிய தம்பி

## காட்சி - 10

*(பெரிய பண்ணை வீடு)*

**சி. பண்ணை :** சம்மந்தி! சம்மந்தி!

**பண்ணை :** இன்னும் பரிசமே போடல, அதுக்குள்ள என்னவே சம்மந்தி!

**சி. பண்ணை :** நீரு ஒரு மந்தி! திருகாணி கழுத்த உத்துப் பாரும். ராவோட ராவா எந்தக் களவாணிப் பயலோ என் மக கழுத்துல மஞ்சக் கயித்தக் கட்டி அதுல 27 முடிச்சப் போட்டுட்டுப் போயிருக்கான்.

**பெரிய :** தாலி கட்டல; தாலியால இவளைக் கட்டிட்டான்னு சொல்லுங்க!

**கருப்பாயி :** யாரவன்? முதுகெலும்பில்லாத கோழை?

**சி. பண்ணை :** வேற யாரு கருப்பாயி? எல்லாம் ஒன் மவன்தான்!

**பெரிய :** நானா? திருகாணி ஒன் நெஞ்சுல கையை வக்கச் சொல்லு... நானா ஒன் கழுத்துல சாவகாசமா 27 முடிச்சுப் போட்டவன்? ஒரு முடிச்சுப் போடவே முடியாதுன்றேன்... 27 முடிச்சுப் போட நான் பைத்தியமா?...

**திருகாணி :** ஒன்னைத் தவிர என்னியத் தொடறதுக்கு எவனுக்கு உரிமை இருக்கு? வேற எவன் தொட்டுருந்தாலும் என் உசுரு அந்தக் கணமே போயிருக்குமே?...

**பெரிய :** பெரிய கவரிமான்!... மான் கொம்பு மாதிரி ஜடை இருந்தா மானாயிடுவியா?

**திருகாணி :** என்னைத் தொட்டுத் தாலியைக் கட்டிட்டுக் கன்னத்துல கோழி எறகால கிச்சிக் கிச்சி காட்டல?

*(தெருப்புழுதி தூங்கியபடி வருகிறான்)*

**பெரிய :** ஏன்டா தூக்கத்துல தாலி கட்றப்பவே இவ்ளோ கில்மிஷமா? மரியாதையா தாலி கட்னதை ஒத்துக்க!

*(தெருப்புழுதியின் காதைப் பிடித்துத் திருக...)*

**தெருப்புழுதி :** ஆ! என் தூக்கத்தைக் கலச்சிட்டாரு!.... ஆ!

**பெரிய :** ராஸ்கல் மரியாதையாச் சொல்லு அத நீதானே கட்ன? ஒத்துக்க. இல்ல சாமி கண்ணைக் குத்திரும்!

**தெருப்புழுதி :** நான்தான் கட்னேன்!

**பெரிய :** மரியாதையா அவளை ஒன் வீட்டுக்குக் கூட்டிட்டுப்போ!

## காட்சி - 11

*(கோயில் பஞ்சாயத்து)*

**பண்ணை :** பேசாம ஒக்காந்திருந்தா எப்டி? ஏதாச்சும் பேசுங்க!

**மாடசாமி :** டென்டு கொட்டாய்ல என்ன படம்க ஆடுது?

**சி. பண்ணை :** யோவ்...! சினிமா விமர்சனக் குழுவா கூட்டி இருக்கம்? இது பஞ்சாயத்து.

**பண்ணை :** எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்!... தெருப்புழுதி கைல தாலியக் குடுத்து இவ கழுத்துல கட்டச் சொன்னது எவன்? எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்!....

**சி. பண்ணை :** பெரியதம்பியே ஒத்துக்கிட்டான். சும்மா உண்மை தெரிஞ்சாகணும்னு புலம்பிக்கிட்டு... மேற்கொண்டு விசாரிப்பீகளா?

**பண்ணை :** பெரியதம்பி... என்னை மிருகமாக்காத!..... ஏன் இப்படி செஞ்ச?

**பெரிய :** திருகாணிய ஒங்களுக்குக் கட்டி வைக்க முயற்சி பண்ணா நீங்களும் இதத்தான் செய்வீங்க!...

**பண்ணை :** இது ஏமாத்து வேலை இல்லியா? பித்தலாட்டம் இல்லியா? தாலியோட மகிமை தெரியுமா? ஏன் அதுல மூணு முடிச்சிப் போடறாங்க?



● "ஆயிரம்தான் ஆனாலும் இனிமே இவர்தான் என் புருஷன்....."



• ''இவனைச் செம்புள்ளி, கரும்புள்ளி குத்தி....

பெரிய : மூணாவது குழந்தை வேண்டாம்னு ஞாபகப்படுத்த!...

பண்ணை : ஏன் மஞ்சத் தடவுறோம்....?

பெரிய : கயிறு மஞ்சளா இருக்க. ஏன் அம்மி மிதிக்கறோம்.... காலால துவயல் அரைக்க... தாலி கட்டியாச்சு; கல்யாணம் தான் முடிஞ்சு போச்சு. இன்னும் என்ன வழக்கு?

சி. பண்ணை : மனசுக்குப் புடிக்க லைன்னா நம்ம ஊர்ல ஒரு வழக்கம் உண்டு... பொஞ்சாதியே தாலிய களட்டி ஊர்க் கோயில் நிலத்துல இருக்கிற வாழை மரத்துல கட்டிட்டா அந்த ஒறவு முறிஞ்சி.. போச்சு.... திருகாணி அந்தக் கயித்தை அறுத்துடு....

திருகாணி : எனக்குத் தலை சுத்துது! மயக்கமா இருக்கு!....

பெரிய : மசக்கையா....?

திருகாணி : அதில்லீங்க... தாலியைக் களட்டணும்னு நெனச்சாலே கை கால் உதறுது.

பெரிய : கால் ஏன் உதறணும். காலா லயா கழட்டப் போற?

திருகாணி : முடியாது! என்னால இதைக் கழட்ட முடியாது!

பெரிய : ஏன்னா நீ தமிழ்ப் பொண்ணு அதான்!

திருகாணி : அதல்லாம் ஒண்ணும் இல்ல.... ஒரு முடிச்சா ரெண்டு முடிச்சா....? 27 முடிச்சு. எவனால கழட்ட முடியும்!.... எவண்டா ஒன்னை ஊர்ல இருக் கற எல்லா முடிச்சையும் போடச் சொன் னது?....

# எஸ்.வி.சேகர்

**வசனம்: வெங்கட்**

தெருப்புழுதி : திருகாணி என்னைத் திட்டாத. நான் அழுதுடுவேன். வேணா நானே கஷ்டப் பட்டு அவுத்துடறேன்.

திருகாணி : ஆயிரந்தான் ஆனாலும் இனிமே இவருதான் என் புருஷன். தப்பு பண்ணினது என் மாமு. இவரை எதுக்குத் தண்டிக்கணும்.

சி. பண்ணை : அநியாயமா என் மக வாழ்க்கையைப் பாழ் பண்ணிட்டியே!

பண்ணை : பெரியதம்பி செஞ்ச தப் புக்குத் தண்டனை குடுத்தே ஆவணும்! ஒடனே கல்யாணிக்குச் சொல்லி அனுப் புங்க.....

பெரிய : யாரவங்க, கல்யாணி?

தாத்தா : கல்யாணின்றது சின்னாத்த னுடைய கழுதைக்குப் பேரு!

பண்ணை : இவனைச் செம்புள்ளி கரும்புள்ளி குத்தி... கல்யாணி மேல உக்கார வைச்சு ஊர்வலம் கொண்டு வாங்க!.....

பெரிய : ஒரு நிமிஷம். எல்லாரும் அப்படியே இருங்க இப்ப வந்துடறேன்.

(போகிறான்)

பண்ணை : என்ன இருந்தாலும் அவன் என் பையன்யா. தன்மேல குத்தமில்லைன்னு நிரூபிக்க ஆதாரம் எதையோ கொண்டு வருவான். நீங்களே பாருங்க.

கிராமத்து ஆள் : ஐயா, கல்யாணி தயார்! ஒரு மணிக்கூறுக்கு நூறு ரூபாயாம். சின்னாத்தனுக்குப் பேப்பர் மசாலா, கழுதைக்கு வெறும் பேப்பரு போட் ரோணுமாம்!... தண்டனை நிறைவேறி னதும் கழுதைக்குக் கற்பூரம் காட்டி, தட்சணை போடணுமாம்...

பண்ணை : ஒரு கழுதைக்கு இவ்ளோ செய்யணுமாமா?...




**சி. பண்ணை :** ஊர்ல இருக்கறது அந்தக் கழுதை ஒண்ணுதான். அதுவும் ஏதோ படத்ல வேற ஹீரோயினா நடிச்சிடிச்சு... படம்பேரு பஞ்சகல்யாணி....

**எல்லைச்சாமி :** ஐயா! ஐயா!

**பண்ணை :** ஏன் ஓடி வர்ற?

**எல்லைச்சாமி :** ஐயோ!... உங்க பையன் பட்டணம் போற பஸ்ஸுல ஏறிட்டா ருங்க!

**பண்ணை :** வண்டியைப் பூட்டுங்கடா!

**சி. பண்ணை :** நம்ம வில்லு வண்டி களைத்தானே? அதுவே பூட்டி உள்ள வைக்கற மாதிரிதான் இருக்கு. எப்போ வில்லுவண்டில துரத்தி, எப்ப பஸ்ஸ பிடிக்கறது?....

**எல்லைச்சாமி :** பெரியதம்பி இந்தக் கடிதாசிய வீசி எறிஞ்சுட்டுப் போறா ருங்க!

**பண்ணை :** என்னதான் எழுதி இருக் கான் படி!

**எல்லைச்சாமி :** எனக்குப் படிக்கத் தெரியாதுங்களே!

**பண்ணை :** அதனால என்ன? நீ அதைக் கைல வச்சிட்டு சும்மா கண்ணை ஓட்டிட்டுப் பாரு, போதும்! பின்னணில பெரியதம்பி குரலு எங்களுக்குக் கேக் கும்!

*(எல்லை அவ்வாறே செய்ய பின்னணியில் பெரிய தம்பியின் குரல் ஒலிக்கிறது...)*

**பெரிய (அசரீரியாக) :** என் எருமைச் சனங்களே.... சாரி அருமை சனங்களே!.... நீங்க அவ்வளவு சுலபமா என்னைக் கல்யாணி மேல ஒக்கார வைக்க முடியாது! இந்தக் கடிதாசியைப் படிக்கற நேரம் நான் பஸ்ல போயிட்டு இருப்பேன். என்னைத் தேட முயற்சி செய்ய வேண்டாம். மேஜரான பையனும் பொண்ணும் கல்யாணம் கட்டிக் கிட்டாங்க. இதுக்காக என்னைத் தண்டிக்க உங்களுக்கு அதிகாரம் கிடையாது. சமயம் வரும்போது திரும்பி வருவேன். அதுக்குள்ள மனசுமாறலேன்னா நடக்கி றதே வேற. திருகாணி தெருப்புழுதி தம்ப திக்கு என் இனிய வாழ்த்துகள்!.... கல்யா ணிக்கு என் அன்பு முத்தங்கள்!

*(பின்னணியில் கழுதைக் குரல்!)*

**கிராமத்து ஆள் :** கல்யாணி உணர்ச்சி வசப்பட்டுடிச்சுங்க!

**பண்ணை :** பெரியதம்பி நீ எங்க போனா லும் உன்னைப் பிடிக்காம விட மாட்டேன்! என்னை ஏமாத்தின உன்னை, உன்னை....

**மாடசாமி :** ஐயையோ! ஐயா மிருக மாயிட்டாரு....!

(தொடரும்)

படங்கள் : யோகா



# ரோஜா

தயாரிப்பு - பாலசந்தர், திரைக்கதை டைரக்ஷன் - மணிரத்னம், வசனம் - சுஜாதா, பாடல்கள் - வைரமுத்து... எல்லாம் பெரிய பெயர்கள். நமது 'பெரிய பெரிய' எதிர்பார்ப்பும் 'சின்னச் சின்ன ஆசை' என்ற ஆரம்ப கட்டப் பாடல் காட்சியிலேயே பெருமளவுக்குப் பூர்த்தியாகிறது. மனத்தை அப்படியே சந்தோஷத்தில் மூழ்கியெடுத்து விடுகிறது அக் காட்சி.

தீவிரவாதத்தின் கொடூரத்தையும் ஆயுதப் புழக்கம் பகுத்தறிவுக்குத் திரை போடுவதையும் உணர்த்தும் முயற்சி இத் திரைப்படம்.

'கிரிப்டாலஜிஸ்ட்' ஆகப் பணிபுரியும் இளைஞன் ரிஷி புது மணமகனாகக் காஷ்மீருக்குப் போகிறான். அங்கே ராணுவ தொலைத் தொடர்பு சம்பந்தமான கம்ப்யூட்டர் பணிகள். போன இடத்தில் தீவிரவாதிகளால் கடத்தப்படுகிறான்.

ரிஷியுடன் சென்ற மனைவி ரோஜா, கிராமத்துப் பெண் என்றாலும் துணிச்சல் மிக்கவள். ரிஷியை ராணுவம் மீட்கும் வரை தான் அவ்விடத்தை விட்டுப் போகப் போவதில்லை என அடம்பிடிக்கிறாள்.

இந்திய ராணுவத்தால் சிறைவைக்கப் பட்டிருக்கும் தங்கள் தலைவன் வாஸிம் கான் விடுதலை செய்யப்பட்டால் ரிஷியையும் விடுவிப்பதாகத் தீவிரவாதிகள் கூற, ராணுவம் அதற்கு இணங்க மறுக்க, ரிஷி தீவிரவாதிகளிடம் வாதாட... படம் சூடு பிடிக்கிறது.

ஆனால்... இவ்வளவும் படத்தின் பிற்பகுதியில்தான்.

முற்பகுதி - ஒரே ஒரு காஷ்மீர் கைகலப்புக் காட்சி; அப்புறம் ரிஷிக்கும் அவன் மனைவிக்கும் இடையே காதல் பிறந்து, வளப்படும் ரம்மியமான கதை.

இக் கதையினூடேயே ரோஜாவின் பிடிவாத குணத்தை ஓரளவு வெளிப்படுத்தியிருப்பது போல ரிஷியின் அச்சமின்மையையும் தேசப்பற்றையும் கோடி காட்டியிருக்கலாம்.

மாறாக - கிழவிகள் கூட்டத்துடன் 'ருக்குமணி' பாட்டுக்கு அவளை ஆட வைத்து... திருஷ்டி பரிகாரம்!

போகட்டும்! இவற்றையும் வேறு சில கவனக்குறைவுகளையும் 'சின்னச் சின்ன' குறைகளாகத் தள்ளி விடலாம்.

அசத்தலான காமெரா, அற்புதமான டைரக்ஷன், நெஞ்சைத் தொடும் பாடல்கள், ரம்மியமான இசை (புதியவர் ரஹ்மான்) நகைச்சுவையும் நெத்தியடியும் கலந்த வசனம், இயல்பான நடிப்பு + நல்ல கதை என்று மனம் திறந்து பாராட்ட ஒரு சந்தர்ப்பம்.

'தளபதி'யில் வன்முறைக்குக் களம் அமைத்துத் தந்த மணிரத்னம் 'ரோஜா'வில் அதற்குப் பரிகாரம் தேட முயன்றிருக்கிறாரோ?

ஜெய் ஹிந்த்!

– எஸ். ஆர்.

## அட, அப்படியா!

# கொசுக்களின் பாரபட்சம்!



!! சீசனுக்கு ஏற்றபடி பூக்க வேண்டும் என்று மலர்களுக்கு எப்படித் தெரிகிறது? பகல் பொழுதின் கால அளவையே அவை சமிக்ஞையாகக் கொள்கின்றன. விஞ்ஞானிகள் செய்த ஒரு பரிசோதனை இதை ஊர்ஜிதம் செய்கிறது :

சாதாரணமாக இலையுதிர் காலத்தில் மலரும் சாமந்திச் செடிகளைக் கண்ணாடி அறைக்குள் வளர்த்தார்கள். திரைச்சீலைகளால் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்தினார்கள். ஒவ்வொரு நாளும் 'அந்திப் பொழுதை' முந்தைய தினத்தை விட முன்னதாக விஞ்ஞானிகள் வரவழைக்க, கோடைக் காலமான ஏப்ரல் மாதத்திலேயே அவை மலர்ந்தன!

!! கொசுக்கள், தேனீக்கள், குளவிகள் போன்றவை ஆண்களை விடப் பெண்களையே அதிகமாக விரும்பிக் கடிக்கின்றன என்பது விஞ்ஞானபூர்வமான உண்மை.

!! கறையான் புற்றின் ராணி மற்ற கறையான்களை விட நூறு மடங்கு பெரிதாக இருக்கும். நாளொன்றுக்கு ஆயிரம் முட்டைகள் இடும்.

!! பூமியின் எடை 81 சந்திரன்களின் எடைக்குச் சமமானது. பூமியை ஒரு



பிரும்மாண்டமான கோள வடிவக் காலிப் பாத்திரமாகக் கற்பனை செய்தால், அதனை நிரப்ப 50 சந்திரன்கள் தேவைப்படும்.

!! ஒவ்வொரு வருடமும் குறைந்த பட்சம் ஒரு லட்சம் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. இவை மனிதர்கள் உணரக்கூடிய தீவிரம் கொண்டவை. இவை தவிர, நாம் உணராத அளவில் மிருதுவான நில நடுக்கங்கள் வேறு நிகழ்கின்றன. இந்த நில நடுக்கங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் பத்து லட்சத்தை எட்டும்.

!! நைல் நதி மட்டுமே பூமத்திய ரேகைக்கு அருகே உற்பத்தி ஆகி, அந்த ரேகையிலிருந்து விலகிய எதிர்த் திசையில் பாய்கிறது. உலகின் பெரும்பாலான நதிகள் இதற்கு நேர்மாறாக பூமத்திய ரேகை உள்ள திக்கு நோக்கியே பாய்கின்றன.

!! பூமத்திய ரேகைக்கு அருகே சூரியோதயம் படுவேகமாக - மணிக்கு ஆயிரம் மைல் - நிகழ்கிறது. ஆனால் நிலாவின் மத்திய ரேகையையொட்டி, சூரியோதயம் வெகு நிதானமாக - மணிக்கு பத்து மைல் வேகத்தில்தான் நிகழ்கிறது.

!! அன்டார்டிகாவில் 98 சதவிகிதப் பரப்பு கனமான பனிப் பாறைதான். இந்தப் பாறை கனம் சராசரியில் 9,800 அடி. இவ்வளவும் சுத்தமான தண்ணீர்தான். கடல் நீரல்ல! உலகின் உப்பு ஜலமாகாத நீரில் 90 சதவிகிதம் அன்டார்டிகாவில்தான் உள்ளது என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு!

தொகுப்பு : உதய்லால்

# மங்கையர் மலர்

நவராத்திரி சிறப்பிதழ்

(128+64 பக்கங்கள்)

## இரட்டைச் சிறப்பிதழாக

மலருகிறது!

அரபு நாட்டில் அன்னை வழிபாடு!

பெங்கால் காட்டன் சாரீஸ்

மங்கையர் நினைத்தால் மயன் மாளிகை அமைக்கலாம்

...இன்னும் ஏராளமான

பண்டிகை கால செய்திகள்...

# மண்பாடம்

“ஒரு நாளைக்குப் பத்து லோடு... அஞ்சி நாளைக்கு அம்பது லோடு. லாரியில நாலு கட்டை வரைக்கும் மண்ணு இருக்கணும். லோடுக்கு இருநூத்தம்பது ரூவா... என்ன சொல்ற...?''

நாராயணன் தலையைச் சொறிந்தான்.

''இருநூத்தம்பது கட்டாதுங்க. லோடு முந்நூறு ரூபாய்க்கு அடிச்சிக்கிட்டு இருக்கோம். அய்யாவுக்காகப் பத்து ரூவா குறைச்சிக்கலாம். அவ்வளவுதாங்க...''

''முந்நூறு ரூவா வாங்கிக்கிட்டு எங்க இருந்து மண்ணு கொண்டு வந்த? ஊர்குடியிலேந்து. அங்க போக வேணாம். கங்களாஞ்சேரி போ. அருமையான மண்ணு.''

''தூரம் பிரச்னையில்லைங்க. ஆள்கூலி ஜாஸ்திங்க. லாரி வாடகை ஏறிப் போச்சு. வாடகை தவிர டிரைவருக்குத் தனியா வேற பணம் கொடுக்கணுங்க.''

''சரி. முடிவா என்னதான் சொல்ற?''

''இருபத்தைஞ்சி ரூவா போட்டுக் கொடுங்க.''

நான் யோசித்தேன். இன்னும் பத்து நாட்களுக்குள் மண் அடித்தாக வேண்டும். வீடு கட்ட லோன் சேங்ஷனாகி இருபது நாட்கள் ஆகிறது. உடனடியாக வேலை ஆரம்பித்தாக வேண்டும்.

''சரி நாராயணா. உன் ரேட்டுக்கே வர்றேன். ஆனா வேலை சுத்தமா இருக்கணும். நான் வந்து பார்த்துக்கிட்டு இருக்க மாட்டேன். நம்பிக்கையாப் பொறுப்பை உன்கிட்ட விடறேன். மண்ணு குறையாம வரணும். அது உம் பொறுப்பு. சரியில்லேன்னா எனக்குக் கெட்ட கோபம் வரும்..''

''அதெல்லாம் சரியா இருக்கும்ங்க. நீங்க கவலையே படவேணாம்.''

''நாளைக்கு அஷ்டமி. இன்னைக்கே ஒரு லாரி அடிச்சி, வேலைய ஆரம்பிச்சிடு என்ன... லாரி கிடைக்குமுல்ல...?''

''கிடைக்கும்ங்க...'' என்றவனிடம் ஐம்பது ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தேன்.

இரண்டாவது நாள் காலேஜிலிருந்து கொஞ்சம் முன்னரே திரும்பி பிளாட்டுக்கு சென்றேன். மண் அம்பாரமாய்க் குவிந்திருந்தது. இவ்வளவு மண் தேவையா என்ற கேள்வி எழுந்தது.

மேஸ்திரி என்னைப் பார்த்து, ''ஐயா வாங்க... லாரி இப்பத்தான் போயிருக்கு... அரைமணியில வந்துரும்.''

ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு விட்டு வந்தேன். நான் பிளாட் வாங்கிய போது இந்த இடம் சொதசொதவென்று சேறும் சகதியுமாக இருந்தது. சதுர அடி பன்னிரண்டு ரூபாய்க்கு வாங்கிய இடம் இன்று இருபது ரூபாய். இரண்டு வீடுகள் எழும்பிய நிலையில் இன்னும் மதிப்பு கூடும். நகரத்திலிருந்து ஒதுக்குப்புறம் என்ற போதிலும், அங்கொன்றும், இங்கொன்றுமாக முளைத்திருந்த வீடுகள்... விரைவில் நகரத்தோடு இணைந்து விடக்கூடிய சாத்தியம் இருந்தது.

''ஐயா.. ஜல்லி... செங்கல் சொல்லிட்டீங்களா...?'' மேஸ்திரி கேட்டான்.

''இன்னும் இல்லய்யா...''

''நானே சப்ளை பண்றேங்க...''

''பார்ப்போம். மண்ணு எப்படி அடிக்கிறேன்னு பார்க்கிறேன்.''

சிறிது நேரத்தில் லாரி வந்தது. லாரியை எட்டிப் பார்த்த எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. மூணு கட்டை அளவுக்கே மண் இருந்தது. இந்த லட்சணத்தில்தான் மண் அடித்திருக்கிறானா... ஒரு லோடுக்கு இவ்வளவு மண் குறைந்தால் இருபது லோடுக்கு எவ்வளவு மண் குறையும்? இது என்ன ஏமாற்று வேலை... எனக்குக் கோபம் விர்ரென்று ஏறியது.

''யோவ் மேஸ்திரி இங்க வாய்யா...'' என்றேன் பல்லைக் கடித்துக் கொண்டு.

''ஐயா...'' என்று பக்கத்தில் வந்தவனை விட்டேன் ஒரு அறை பளாரென்று.

''என்னய்யா லோடு அடிச்சிருக்க? இப்படித்தான் இருபது லோடு அடிச்சியா? நீங்க எவனுமே யோக்யன் கிடையாதுய்யா...''

அவன் திகைத்துப் போய் என்னைப் பார்க்க, சித்தாட்கள் மண்வெட்டியைக் கீழே போட்டு விட்டு, என்னையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

''ஐயா பத்து கிலோ மீட்டருங்க.. ரோடு அதிர்ச்சியில மண் படிஞ்சிடும். நாலு கட்டைக்குக் கொஞ்சம் அதிகமாத்தான் ஏத்த

பாபு காமராஜ்

றோம்.. வர்ற வழியில வாய்க்கால் கரை கட்டறாங்க. பத்து வேகத் தடை. லாரி ஏறி இறங்கிறதுல மண்ணு உட்காருதுங்க...''

''சமாதானம் சொல்லாதே. எனக்குத் திருப்தியில்ல. அடிச்ச வரைக்கும் காக வாங்கிக்கோ. நான் வேற ஆள் பார்த்துக்கிறேன்.''

''அப்புறம் உங்க இஷ்டங்க.. ஆனா தயவுசெஞ்சி ஒரு தடவை மண் ஏத்தற இடத்துக்கு நீங்க வரணுங்க.. கும்புட்டுக் கேட்கிறேன். பதினஞ்சு வருஷமா மண்ணு அடிக்கிறேங்க. ஏய்.. என்னடா வேடிக்கை. வேகமா மண்ணை எறக்குங்கடா...''

வேகவேகமாக மண் இறக்கப்பட்டு லாரி புறப்பட, பின்னாலேயே ஸ்கூட்டரைச் செலுத்தினேன்.

இருபது ஆட்கள். அநேகம் பேர் பெண்கள். மண்ணை அள்ளி ஒருவன் கூடையில் சரிக்க... வேகவேகமாக தூக்கி வந்து லாரியில் கொட்டினார்கள். பேய் வேகம். சரியாக இருபது நிமிடம்.

''ஐயா...'' மேஸ்திரி அழைத்தார்.

''லாரியில ஏறிப் பாருங்க...''

ஏறிப் பார்த்தேன். லாரி நிறைய அஞ்சு கட்டை அளவுக்கு மண் இருந்தது.

''ரைட்.... போ... போப்பா...'' லாரி கிளம்பியது.

பின்னாடியே ஸ்கூட்டரில் வந்தேன். மேஸ்திரி சொன்ன மாதிரி வழியில் ஏகப்பட்ட வேகத்தடைகள்.

பிளாட்டுக்கு வந்ததும் லாரியில் ஏறிப் பார்த்தேன். முதலில் இருந்த அளவே மண் இருந்தது. மேஸ்திரி என்னையே பார்க்க, தலையைத் திருப்பிக் கொண்டேன்.

''திடீர்னு மேஸ்திரி ஆகலைங்க நானு.. பத்து வருஷம் கொத்தனார் கையில நின்னுருக்கேன்.. நாராயணன் மண் அடிக்கிறான்னா யாருமே கண்காணிக்க மாட்டாங்க. அத்தினி பேருக்கு முன்னால.. என்னைக்



கைநீட்டி அடிச்சிட்டிங்க. பரவாயில்லே. போயிட்டுப் போகுது. உங்களுக்கு திருப்தியாயிருந்தா சரிங்க. ஏய் அடுத்த தடவை பத்துச் சட்டி கூட போட்டுத் திமிர திமிரக் கொண்டு வாங்கடா...''

நான் நகர்ந்து ஸ்கூட்டரைக் கிளப்பினேன்.

''என்னங்க...'' ஜானகி சப்தமாகக் கூப்பிட்டாள்.

''என்ன...?''

''வாசல்ல கிடக்கிற மண்ணு கொஞ்சம் கொஞ்சமாக் காத்துல போயிக்கிட்டு இருக்கு.. நீங்கதானே சொன்னீங்க... லாரி மண்ணு முந்நூறு ரூபாய்ன்னு.. அத அள்ளிக்கிட்டு வந்து கொல்லைப் பக்கத்துல கொட்டுங்க. நானும் உங்ககிட்ட நாலு நாளாச் சொல்றேன். போங்க. நாலு வாளி தான் இருக்கும்.''

''பேசாம இரு. நாளைக்கு பார்ப்போம்.''

''சரி. நான் போய் அள்ளிக்கிட்டு வர்றேன்'' என்று வாளியை தூக்கிக் கொண்டு கிளம்பியவளைத் தடுத்து வாளியை வாங்கிக் கொண்டேன்.

தெரு ஆள் நடமாட்டமில்லாமல் இருட்டாக இருந்தது. குவளையில் மண்ணை அள்ளி வாளியில் கொட்டினேன்.

கொல்லையில் தளம் போட்டதற்காக அடித்த மண்ணின் மீதி.

வாளியைத் தூக்கினேன். கனத்தது. கஷ்டப்பட்டு கொல்லைப்புறத்தில் கொண்டு வந்து கொட்டினேன். இரண்டாவது வாளி தூக்க முடியவில்லை. தோள் பட்டை கழன்று விடும் போல இருந்தது. நெஞ்சு பாரம் கூட வியர்வை வெள்ளமாய் வழிந்தது.

சிறிது கூட வியர்க்காமல் ஆற்றிலிருந்து மண் அள்ளி லாரியில் கொட்டிய பெண்களின் நினைவு வந்தது.

இரண்டு வாளி அள்ளியதற்கே இந்த வலி வலிக்கிறதே. நாள் முழுதும் மண் அடிக்கும் அவர்களுக்கு எப்படி வலிக்கும்?

நாராயணன் முகம் நினைவுக்கு வந்தது. வெட்கமாக இருந்தது எனக்கு. ஏன் அப்படி நடந்து கொண்டேன். என்ன ஒரு மிருகத்தனம்? அவன் அப்பா என் அப்பாவுக்கு நன்றாகப் பழக்கம். இந்த வீடு கட்டியது அவன் அப்பாதான். அந்த உரிமையில் எப்போது சின்னச் சின்ன வேலை செய்ய அழைத்தாலும் மறுக்காமல் வருவான்.

''ஐயா...'' என்ற குரல் கேட்டு வாசலுக்கு வந்தேன்.

நாராயணன் நின்றிருந்தான்.

''என்ன நாராயணா...?''

''ஜல்லி.. செங்கல் எப்பங்க அடிக்கிறது?''

உள்ளுக்குள் சுருக்கென்றது. வரமாட்டான் என்று நினைத்திருந்தேன்.

''சொல்றேன் நாராயணா... நீதான் செய்யணும். பிளான்ல கொஞ்சம் மாத்தணும்.. மாத்திட்டுக் கூப்பிடறேன். தியேட்டர் வாசல்லதானே நிப்பே.. நானே வந்து பார்க்கிறேன்...''

''ஐயா நீங்க வர வேணாங்க. நானே வரேங்க. ஐயா என்னங்க இது?'' என்றான் மண் மீது கிடந்த வாளியையும் குவளையையும் பார்த்து.

''தள வேலை செஞ்சதுக்கு அடிச்ச மண்ணுல மீதி... கொல்லையில கொண்டு போய்க் கொட்டிக்கிட்டு இருக்கேன்.''

''ஐயா... நீங்களா... நான் கொண்டு போய்க் கொட்றேங்க...'' என்றவன் பட்டென்று சட்டையைக் கழற்றிக் கதவில் மாட்டிவிட்டுச் சரசரவென்று மண்ணை அள்ளி வாளியில் சேர்த்தான். இரண்டே தடவை.

''ஜானகி.. மேஸ்திரிக்குக் காப்பி கொடு.''

''வேணாங்க...'' என்றவன் நான் கட்டாயப்படுத்தியதும் காப்பியை வாங்கிக் கொண்டு மறைவாக நின்று குடித்தான்.

''ஐயா...''

''என்ன நாராயணா...?''

''உங்க புள்ளை எத்தினியாம்பு படிக்குது?''

''ஏன் நாராயணா...?''

''எம் பையன் நாலாம்பு படிக்கிறாங்க. புத்தகமெல்லாம் கிடைக்கலைங்க...''

''எம் பையன் இங்கிலீஷ் மீடியம் படிக்கிறான் நாராயணா...'' என்றேன் கொஞ்சம் அகங்காரமாய்.

''எம் மவனும் அதாங்க படிக்கிறான். நான் சொல்லியும் கேட்காம எம் சம்சாரம் சேர்த்து விட்டாங்க. எல்லாமே இங்கிலீஷ்ங்க. ஒண்ணுமே புரியலைங்க. பொஸ்தகமும் கிடைக்கலைங்க...''

பட்டென்று என் ஈகோ மீது அடி விழுந்தது. சுதாரித்துக் கொண்டு சொன்னேன்.

''நாளைக்கு நான் தஞ்சாவூர் போறேன். வாங்கிட்டு வர்றேன்.''

''நல்லதுங்க. காசைக் கூலியில கழிச்சிக்கிறேன். அப்ப வரேங்க...'' பெரிதாகக் கும்பிட்டு விட்டு நகர்ந்தான்.

நான் உள்ளே வந்தேன். உடல் முழுதும் மணல் குறுகுறுவென்றது.

''பாருங்க... நீங்களும்தான் மண்ணு கொட்டினீங்க.. அவன் எவ்வளவு அழகாக் குவிச்சிருக்கான் பாருங்க...'' என்றாள் ஜானகி.

மண்ணோடு வளர்ந்தவன் அவன். மண்ணைப் பற்றித் தெரியாதவன் நான். பத்து கிலோ மீட்டர் கடந்து லாரியில் வரும் மண் கொஞ்சம் உட்காரும் என்ற சின்ன உண்மை கூடப் புரியாமல், கைநீட்டியதை நினைக்க, வெட்கமாக இருந்தது.

## திரும்பிப் பார்க்கிறேன் - 49



❖ பாபி : ..... மாபெரும் வெற்றி!

# தன்னம்பிக்கைக்கு ஒரு ராஜ்கபூர்!

ஜெய்கிஷன் எப்போது சென்னை வந்தாலும் ஒரு முறையாவது என் வீட்டுக்கு வராமல் திரும்ப மாட்டார். என் வீட்டில் ஒரு வேளையாவது சாப்பிடாமல் அவரைத் திரும்பி அனுப்பியதில்லை நான். அவர் இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், அப்படி ஒரு சமயம் என் வீட்டுக்கு அவர் வந்திருந்தபோது, எங்கள் வீட்டு வராந்தாவில் போடப்பட்டிருந்த கலையழகுடன் கூடிய நாற்காலிகளைப் பார்த்தார். இரும்புக் கம்பிகளைக் கொண்டு டிசைன் செய்யப்பட்டிருந்த அந்த நாற்காலிகளைத் தோட்டத்தில் புல்வெளியில் மாலை நேரத்தில் போட்டால் வெகு அழகாக இருக்கும். இந்த கார்டன் ஃபர்னிசரில் தமது மனைப் பறி கொடுத்த ஜெய்கிஷன், பம்பாயில் தமது புதிய வீட்டுக்கு இப்படிப்பட்ட நாற்காலிகள் வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

"இவை கடைகளில் கிடைக்காது; ஸ்பெஷலாய் ஆர்டர் தந்து தயாரிக்கப் பட்டவை" என்று கூறி, அவரையும் அழைத்துக் கொண்டு எனக்குத் தெரிந்த ஒரு நிறுவனத்துக்குச் சென்றேன். தமக்குப் பிடித்த டிசைன்களைத் தேர்ந்தெடுத்து ஆர்டர் தந்தார் ஜெய்கிஷன். ஓரிரு மாதங்களில் நாற்காலிகள் தயாரானதும் என் வீட்டிலேயே டெலிவரி செய்யும்படி கூறி விட்டுப் புறப்பட்டோம்.

இதன் பிறகுதான் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனை சென்றது. பம்பாயில் அவர் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு திரும்பியிருந்த என் கண் எதிரே, அவர் ஆர்டர் கொடுத்திருந்த நாற்காலிகள் சென்னையில் என் வீட்டு வாசலில் இப்போது வந்து இறங்கின. அவற்றைப் பார்த்தபோது எனக்கு அடக்க முடியாத சோகம் பீறிட்டது. என்னையும் மீறி விம்மி அழுதுவிட்டேன்.... பில் தொகையைக் கொடுத்துவிட்டு அவற்றை ஒரு தனி அறையில் வைத்துப் பூட்டினேன். உடனடியாக திருமதி ஜெய்கிஷனிடம் விவரம் கூறி அவர் சோகத்தை அதிகரிக்க நான் விரும்பவில்லை. சுமார் ஒரு மாதம் சென்றே டெலிஃபோனில் கூறி விட்டு, அந்த நாற்காலிகளைப் பம்பாய்க்கு அனுப்பி வைத்தேன்.

துயரம் நாளடைவில் சற்றே குறைந்த போது யதார்த்த நிலை என்னைச் சந்தித்தது. சித்ராலயாவுக்கு ஏற்பட்ட பண நெருக்கடியைச் சமாளிக்கத்தான் மூன்று படங்களை ஒரே சமயத்தில் எடுத்தேன்.

**டைரக்டர் ஸ்ரீதர்**

அவற்றுள் ''சத்தரவின்றி உள்ளே வா'' மட்டும் வெற்றி பெற, ''அவளுக்கென்று ஓர் மனம்'' சுமாராக ஓட, அதன் இந்தி வாடிவம் படுத்த அடிவாங்கியிருந்தது. கூட்டிக் கழித்துப் பார்த்தபோது நிறுவனத்தின் நிலைமை இன்னும் மோசமாகி இருந்ததே தவிர, அபிவிருத்தி அடைய வில்லை. இந்த நிலையில் என்ன செய்வது? அடுத்த திட்டம் என்ன?

நான் தன்னம்பிக்கையை இழக்க வில்லை. சினிமா தயாரிப்பு என்பது லட்சக் கணக்கில் முதலீடு தேவைப்படும் ஒரு விஷயம் என்றாலும், சினிமாவுக்கு முதலும் அடிப்படையுமானது கதை. அது ஒரு சிருஷ்டிப் பணி. எனவே எத்தகைய சிக்கல் வந்தாலும் நம் மூளையைப் பயன்படுத்திச் சிறப்பாக எதையாவது உருவாக்கி, வெற்றி பெற்று விட முடியும் என்று நான் உறுதியாக நம்பினேன்.

இந்த விஷயத்தில் எனக்கு முன்னு தாரணம் ராஜ்கபூர்! அவர் படங்களில் பல சூப்பர் ஹிட் ஆயின. பிறகு ''மேரா நாம் ஜோக்கர்'' என்று ஒரு படம் எடுத்தார். அது மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் பத்மினிக்குப் பிரதான பாத்திரம். இரண்டாம் பகுதியில் சிமி. மூன்றாவது பகுதியில் ஹீரோயின், ரஷ்ய சர்க்கஸ் பெண்மணி ஒருவர். ஒவ்வொரு பகுதியையும் 13,000 அடி எடுத்தார்!

ஒவ்வொரு பகுதி தயாரானதும் எனக்குப் போட்டுக் காட்டி என் கருத்தைக் கேட்பார் ராஜ்கபூர். ஒவ்வொன்றுமே அற்புதமாகத்தான் இருந்தது. நான் ராஜ்கபூரிடம், ''நீங்கள் ஏன் மூன்று பகுதிகளையும் தனித்தனியே ரிலீஸ் பண்ணக் கூடாது?'' என்று கேட்டேன். தப்பித்தவறி ஒன்று தோல்வி அடைந்தாலும் மற்றொன்று வெற்றி அடைய, மொத்தத்தில் லாபம் காணலாமே என்பது என் நோக்கம். தவிர, தனித்தனிப் படங்களாக அவற்றைக் கருதவும் வாய்ப்பு இருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

ஆனால் ராஜ்கபூர் என் கருத்தை ஏற்க வில்லை. 39,000 அடி படத்தை எடிட் செய்து 27,000 அடியாகக் குறைத்தார்! இதற்கு முன்பு அவர் எடுத்திருந்த வெற்றிப் படமான சங்கம் 18,000 அடிதான்.

''மேரா நாம் ஜோக்கர்'' ரிலீஸ் ஆகியது. பயங்கரத் தோல்வியைச் சந்தித்தது! இந்தப் படத்துக்கு ராஜ்கபூர் செலவழித்திருந்த தொகை என்பது லட்சம்

---



## நண்பர்கள் எல்லாம் நம்மைப் போல்தான். வரவுக்கும் செலவுக்கும் இழுபறி. எல்லாருமே தாராளமாகக் கையை விரித்து விட்டார்கள். எனக்கு ஜுரமே வந்து விட்டது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு, குருவி சேர்ப்பது போலக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து, மிகவும் பிரயாசைப்பட்டு ஒரு பிளாட் வாங்கினேன். அதற்கப்புறம் -

உன்னைப் பிடி, என்னைப் பிடி என்று அதற்கே கஷ்டப்பட்டு விட்டதால் வீடு கட்ட வேண்டும் என்கிற எண்ணமே எழவில்லை.

நாட்கள் ஓடின. எனக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. சொத்து என்கிற பெயரில் அந்தப் பிளாட் ஒன்றுதான். மற்றபடி சம்பளம் தவிர வேறு எதுவும் கிடையாது எனப் பெண் வீட்டாரிடம் கூறிவிட்டோம்.

மனைவி வந்து சேர்ந்தாள்.

சிறுவயது முதலே சொந்த வீட்டில் வளர்ந்தவள். வாடகை வீட்டில் உள்ள சில அசௌகரியங்களை அறியாதவள். எனவே என்னுடன் குடும்பம் நடத்தத் தொடங்கிய பிறகு அனுபவிக்க நேர்ந்த அத்தகைய அசௌகரியங்களை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

''சொந்த வீடு கட்ட வேண்டும்'' என்று அரிக்கத் தொடங்கினாள்.

''பணத்துக்கு எங்கே போவது? வெறும் கையை வைத்துக் கொண்டு முழம் போட முடியுமா?'' என்று அவள் வாயை அடைத்து விடுவேன்.

இந்த உரையாடல் எங்களுக்குள் தினமும் நடக்கும்.

திருமணமான புதிதில் பண்டிகைகளுக்கு அழைப்பு, பரிசுகள் என்பவை அடிக்கடி நிகழ்பவை. அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 'பணமாகக் கொடுத்து விடுங்கள்' என்று தன் வீட்டாரிடம் கூறிவிட்டாள் மனைவி.

ரூபாய்! என்னிடம் இதைச் சொன்ன போது ராஜ்கபூர் கண் கலங்கி விட்டார். ஆனாலும் அவர் தன்னம்பிக்கை இழக்கவில்லை. ''நான் சிருஷ்டி கர்த்தா; எந்த நஷ்டத்தையும் சமாளித்து என்னால் மீள முடியும்'' என்று உறுதியாகச் சொன்னார்!

சொன்னதைச் செய்தும் காட்டினார் ராஜ்கபூர். அவருடைய அடுத்த படம் பாபி. அது எத்தனை பெரிய ஹிட் என்பது எல்லோரும் அறிந்ததுதானே.


ராஜ்கபூரின் நட்பு எனக்கும் தன்னம்பிக்கையூட்டியது என்றாலும் நான் சந்தித்த தோல்விகள், என்னை வர்த்தக ரீதியில் மசாலா படங்கள் எடுக்கத் தூண்டவில்லை.

அடுத்ததாக நான் எடுக்கத் தீர்மானித்த படம் ''துளசி''. ஒரு விபசார விடுதியிலிருந்து மீட்கப்படும் ஒரு பெண்ணுக்கும் அவளை மீட்டு வரும் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் இடையே மலரும் காதல்தான் கதை. இந்தக் கதையின் கரு வெகு காலம் முன்பே என் மனத்தில் விழுந்து விட்ட வித்து. அது இப்போது ஆலமரமாகத் தழைத்திருந்தது.

சொல்லப் போனால், சாந்தாராம் எடுத்த ''ஆத்மி'' படத்தின் கருவும் ''துளசி'' படத்தின் கருவும் கிட்டத்தட்ட ஒன்றுதான். நான் மாடர்ன் தியேட்டர்ஸில் ''மகேசுவரி'' என்ற படத்துக்கு வசனம் எழுதிக் கொண்டிருந்த போது, எனக்கு அந்த நிறுவன அதிபர் ஓர் ஆங்கிலப் படத்தைப் போட்டுக் காட்டினார். ''வாட்டர் லூ பிரிட்ஜ்'' என்ற அந்தப் படத்தின் கதையும் சாந்தாராமின் ''ஆத்மி'' திரைப்படத்தின் கதையும் ஏறத்தாழ ஒன்றே. இவற்றை மனத்தில் கொண்டு, சிற்சில மாறுதல்களுடன் என் உள்ளத்தில் உருவானதுதான் ''துளசி''. ஆனால் ஏனோ அப்போது அந்தக் கருவின் அடிப்படையில் கதை - வசனம் எழுத எனக்குச் சந்தர்ப்பம் இல்லாமலே போய்விட்டது. இப்போது அதைச் செய்தேன். தமிழிலும் தெலுங்கிலுமாகத் ''துளசி''யை எடுக்கத் தீர்மானித்தேன். இரு மொழிகளிலும் ஹீரோயின் சந்திரகலா. தமிழிலே ஹீரோ ஏ.வி.எம். ராஜன், தெலுங்கில் சோபன் பாபு.

என்றாலும் உள்ளூர ஒரு சந்தேகம் குடைந்தது. 'நான் எடுக்கப் போகும் இந்தப்படம் மக்களின் ஆதரவைப் பெறுமா? அல்லது, ஏற்கெனவே உள்ள நிதி நெருக்கடியை மேலும் அதிகரித்து விடுமா?'

---



அந்த வகையில் எவ்வளவு தொகை வந்தது. அதை அவள் என்ன செய்தாள் என்பது பற்றியெல்லாம் நான் கண்டுகொள்ளவே இல்லை. கண்டு கொள்ளவும் முடியாது என்பது வேறு விஷயம்.

நான் வாங்கியிருந்த பிளாட்டுக்குப் பக்கத்தில் வீடுகள் எழ ஆரம்பித்தன. அதைத் தொடர்ந்து என் மனைவியின் நச்சரிப்பும் அதிகரிக்கத் தொடங்கியது. அதன் முடிவில் - மனை முகூர்த்தம். தொடர்ந்து படிப்படியாக எந்தெந்த முறையில் எல்லாம் முடியுமோ அந்தந்த முறையில் எல்லாம் பணம் புரட்டிக் கூரை வரை வீடு வளர்ந்து விட்டது. சிக்கலும் உச்ச கட்டத்தை அடைந்தது.

மறுநாள் காலையில் கூரை போட ஆட்கள் வந்து விடுவார்கள். முதல் நாள் மாலையே கலவை மெஷின் வந்து விட்டது. கையில் காசில்லை. யார் யாரையெல்லாமோ அணுகினேன். நண்பர்கள் எல்லாம் நம்மைப் போலத்தான். வரவுக்கும் செலவுக்கும் இழுபறி. எல்லாருமே தாராளமாகக் கையை விரித்து விட்டார்கள். எனக்கு ஜுரமே வந்து விட்டது.

அந்த நேரம் பார்த்து மனைவி, ''அக்கா வீட்டுக்குப் போகிறேன்'' என்றாள். எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ''எங்கேயாவது போய்த் தொலை'' என்று எரிந்து விழுந்தேன்.

இரவு ஒன்பது மணி இருக்கும்.

அக்கா குடும்பத்தாரோடு வந்தாள்.

அவள் கையில் 15,000 ரூபாய்க்கான காசோலை!

எனக்குக் கையும் காலும் செயலற்று விட்டன.

''என்ன யோசிக்கிறீங்க? உங்க பணம்தான்'' என்றார் அவள் அக்காவின் கணவர். ''உங்க மனைவி மாசாமாசம் எங்க மூலமா சீட்டு கட்டி வந்தா. அதை இந்த மாசம்தான் எடுத்தோம். இன்னிக்குத் தான் இந்த செக் வந்தது''.

அந்த நேரத்தில் மனைவி எனக்கு ஒரு சூப்பர் ஸ்டார் ஆகத் தெரிந்தாள். அவள் பெயரும் ஒரு ஸ்டார்தான் - ரேவதி.

- என். வெங்கடராமன், சிதம்பரம்-1



# பாலம்

●● கபோத சமஸ்கிருதம் அல்லது Easy Steps to Sanskrit என்று B.B. காமத் என்பவரால் எழுதப்பட்ட பழைமையான நூல் (1925) தேவை. உதவக் கூடியவர்கள் தொடர்பு கொள்க.

– டி. வேணுகோபால்,
594, 9வது தெற்குத் தெரு,
தியாகராஜ நகர்,
திருநெல்வேலி – 627 011

●● பி.எஸ்ஸி., கணிதம் கடைசி ஆண்டு முடித்து விட்டேன். எல்லா செமஸ்டர்களிலும் முதல் வகுப்பு. சாயி பக்தன். ஏதேனும் ஓர் சாயி பக்தரின் கீழ் வி. ஏ. பயில விருப்பம். அன்புள்ளம் கொண்ட வி. ஏ. யாரேனும் எழுதினால் நேரில் சந்திக்க வருகிறேன். சென்னையைச் சேர்ந்தவராயின் மிக்க மகிழ்ச்சி.

– கே. பிரகாஷ்,
த/பெ. டி. வி. காசிவிசுவநாதன்,
கொரட்டி அஞ்சல்,
திருப்பத்தூர் வட்டம் – 635 602.

●● முத்துராமலிங்கத் தேவர் பற்றிய நூல் ஏதேனும் வெளிவந்திருந்தால் படிக்க ஆவல். தகவல் தெரிவிக்க முகவரி :

– சிதை. வைரவன்,
10, ஜகதாம்பாள் காலனி,
சென்னை – 600 014.

●● துபாயில் பணிபுரிந்து வரும் எனக்கு அவ்வப்போது விடுமுறையில் தமிழகம் வரும் போது பசுமையும் இயற்கை அழகும் கொஞ்சி விளையாடும் கிராமங்களில் ஓய்வு எடுக்க விருப்பம். நம்பிக்கையுடன் இருந்து வர இடம் தெரியாததால் இதுவரை பிரபலமான இடங்களுக்கு மட்டுமே சென்று வர முடிந்தது. இவ் விஷயத்தில் எனக்கு உதவ விரும்புவோர் எழுதவும்.

– M.M. YAHAYA,
P. Box No. 4198
DUBAI, UAE

●● எனக்கு HAM ஆவதில் விருப்பம் உள்ளது. ஆனால் எப்படி என்று தெரியவில்லை. இதுபற்றி அறிய - குறிப்பாக பெங்களூர்வாசிகளை அணுக விரும்புகிறேன்.

– R. V. Subramaniam,
3008, Vth Cross,
XII B Main HAL II Stage,
Indira Nagar,
Bangalore - 560 038.

●● ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்; கும்பகோணம் டி. கிருஷ்ணா சர்மா தொகுத்தது: இரு பாகங்கள்; தேவநாகரி லிபி; மூலம் தேவை.

தவிர பாலக்காடு எம். என். ராமசாமி அய்யர் இருபது பாகங்களில் வால்மீகி ராமாயணத்துக்குப் பதவுரை எழுதியுள்ளார். இந்தப் புத்தகங்களும் கிடைக்குமா? நண்பர்கள் விவரம் தெரிவித்தால் பணம் தந்து பெற்றுக் கொள்கிறேன்.

– வி. ஆர். ராகவன்,
6-3-184,
ஜெய்நகர் காலனி,
ஹைதராபாத் – 38

●● தோல் ஆடை உற்பத்தி, வர்த்தகம் ஆகியவற்றில் பயிற்சி பெற விருப்பம். தேவையான முதலீடும் செய்ய முடியும். எனக்கு வழிகாட்ட விரும்புவோர் தொடர்பு கொள்ள முகவரி :

– ஆர். சண்முகசுந்தரம்,
எழுகாம் வலசு,
பொன்னிவாடி (அஞ்)
பெரியார் (மாவ)
638 679

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பேற்க இயலாது.)

# பங்கு மார்க்கெட்டுக்கு வரும் பாங்கான நிறுவனங்கள்!

புதிய தொழில் தொடங்க, அல்லது விஸ்தரிப்புத் திட்டத்துக்காகப் பல பிரபலமான நிறுவனங்கள் பங்கு மார்க்கெட்டுக்கு மூலதனம் கோரி வருகின்றன. இவற்றில் இன்று முதலீடு செய்வது, எதிர்காலத்தில் பங்குகளின் விலை ஏற்றம் காரணமாக, லாபகரமாக அமையலாம்.

## RAS Extrusion Ltd :

பொருள்களை உற்பத்தி செய்து விடலாம்; ஆனால் அவற்றை வசீகரமாகப் 'பாக்' செய்ய வேண்டுமே! 'ஆள் பாதி ஆடை பாதி' என்பது போல்தான் இதுவும். இந்த நிறுவனம் 'லாமினேஷன்' எனப்படும் பளபளப்பு ஊட்டும் முறையில் 'பாக்கிங்' பொருள்களை உற்பத்தி செய்கிறது. இதற்கான நவீன தொழில் நுணுக்கங்களைப் பெற்றுள்ளது. ஏற்கெனவே ஸர்ப், வீல், லைஃப்பாய், ரின், லக்ஸ், மாகி போன்ற பல பொருள்களின் பாக்கிங்குக்கு உதவி வரும் இந் நிறுவனம், மேலும் பல புதிய ஆர்டர்களைப் பிடித்துள்ளது. (ஹிந்துஸ்தான் லீவர், காட்ரெஜ், டாம்கோ போன்றவை.) விரிவாக்கம் கருதி 21,50,000 பங்குகளை பொது மக்களுக்கு வழங்குகிறது. ஒவ்வொன்றும் ரூ 10 மதிப்புடைய பங்குகள்.

## SBI Home Finance Ltd :

பாரத ஸ்டேட் வங்கி, ஹவுஸிங் டெவலப்மெண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து, எல். ஐ. ஸி., யூனிட் டிரஸ்ட் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கின்ற புதிய நிறுவனம் இது.

வீடுகள், அல்லது ஃப்ளாட்டுகள் வாங்க, அல்லது கட்டுவதற்கு இந்த நிறுவனம் கடன் வழங்கும். 46,00,000 பங்குகளை 4.60 கோடி ரூபாய்க்கு விநியோகிக்கிறது. அதாவது ஒரு பங்கின் விலை ரூ 10/-. ஐந்தாண்டுத் திட்டத்தில் குடியிருப்புக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதால் இந்த நிறுவனத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று கருதப்படுகிறது.

## MAC Industries Ltd :

இந்த நிறுவனம் பிரபலமான எம். ஏ. சிதம்பரம் குரூப்பைச் சேர்ந்தது. அந்தப் பெயரே முதலீடு பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவல்லது. ஸ்பிக், தமிழ்நாடு பெட்ரோ பிராடக்ட்ஸ் ஆகியவை எம். ஏ. சிதம்பரம் குரூப்பைச் சேர்ந்தவையே. ஏ. ஸி. முத்தையா, அவர் மகன் அச்வின் முத்தையா ஆகியோரை மாக் இண்டஸ்ட்ரீஸ் நிர்வாகப் பொறுப்பில் கொண்டிருக்கிறது. நாலு பிரிவுகள் இந்த நிறுவனத்தில் உள்ளன. 1. உணவுப் பொருள்கள் உற்பத்தி, சேமிப்புக் கிடங்கு; 2. மலைத் தோட்ட விவசாயம், 3. சமையல் எண்ணெய் மற்றும் ரசாயனப் பொருள்கள், 4. இறால் போன்ற கடல் பொருள்கள் ஏற்றுமதி. 37,00,000 பங்குகளைப் பொது மக்களுக்கு வழங்கவிருக்கிறது இந்த நிறுவனம். பத்து ரூபாய் பங்கு ஒவ்வொன்றுக்கும் கூடுதல் விலை ரூ 40 தர வேண்டும். அதாவது ஒரு பங்கு ரூ 50க்குத்தான் பெற இயலும். என்றாலும் நிறுவனத்தின் கடந்த காலச் சாதனைகளைப் பார்க்கும் போதும் நிர்வாகிகளின் ஆற்றலை எண்ணும் போதும் பங்குகளை வாங்குவது நல்ல முடிவாகவே இருக்கலாம்.

## Sujana Steels Ltd :

ஏஃகு பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம். வட்டமான, தட்டையான, மற்றும் கோணங்களை உள்ளடக்கிய பாகங்கள். இவை தொழில் துறையில் மட்டுமின்றி, கட்டுமானத் துறையிலும் பயனாகிறவை. எப்போதும் இவற்றுக்குத் தேவை உண்டு. நிறுவனம், பல ஆண்டுகளாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ள பிரபலமான நிர்வாகிகளைக் கொண்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவனம் நல்ல லாபம் ஈட்டியுள்ளது. தனது தொழில் விரிவாக்கத்துக்காக 29,00,000 பங்குகளை ஒவ்வொன்றும் பத்து ரூபாய் விலைக்கே வழங்குகிறது. நல்ல முதலீடாக அமைய வாய்ப்புக்கள் அதிகம்.

– வி. கோபாலன்

# சென்னையில் சாலை விபத்துக்கள்




சென்னை நகரப் போக்குவரத்து போலீஸ் துணை ஆணையாளர் கே. வி. எஸ். மூர்த்தி, சிறந்த சேவைக்கான ஜனாதிபதி விருதைப் பெற்றவர். அண்ணாசாலையில் புதுமையான நான்கு வழிப் போக்குவரத்தை அமல்படுத்தியதில் இவர் பங்கு அதிகம். சென்னை நகரில் சாலைகளைப் பயன்படுத்துவோர் சார்பில் அவருடன் ஒரு பேட்டி...

“**சா**லை விபத்துக்கள் அதிகம் ஏற்படக் காரணம் என்ன?”

“வாகன ஓட்டிகள் சாலை விதிமுறைகளை நன்கு அறிந்தும் அனுசரிக்கத் தவறுவதுதான் முக்கிய காரணம். அதிலும் சைக்கிளில் செல்வர்கள், தங்களை எந்தச் சாலை விதிகளும் கட்டுப்படுத்தாது என்று நினைத்துக் கொண்டு செல்கிறார்கள். நகரில் பத்து லட்சம் சைக்கிள்கள் இருக்கின்றன. சாலை விபத்துக்களில், இறப்பவரில் அறுபது சதவீதத்தினர் சைக்கிள் பயணிகள்தான். பாதசாரிகள் சாலைகளைக் கண்ட இடங்களில் கடக்கிறார்கள். பெரும்பாலான விபத்துக்கள் பாதசாரிகளாலும் ஏற்படுகின்றன. 1991ல் மட்டும் 442 பேர் விபத்துக்களில் இறந்திருக்கிறார்கள். ஐம்பது லட்சம் பேர் கொண்ட இந்த நகரத்தில் சாலைகளில் செல்பவர் எல்லோரும் போக்குவரத்து விதிகளை மீறினால், அவர்களைக் கண்டிக்க, அதற்கேற்ற அளவில் போலீஸ் கிடையாது. அதனால் மக்கள் சுயமாகவே, விதிகளை அனுசரிக்க வேண்டும். 80 சதவீத மக்கள் விதிகளை அனுசரித்தால், மீதியுள்ள இருபது சதவீதம் மக்களைத் திருத்துவது போலீஸுக்கு எளிதாக இருக்கும்.”

“வாகன ஓட்டிகளை ஏதாவது ஒரு காரணம் காட்டி பே

• ஆட்டோ மீட்டர் பரிசோதனை






• லைசென்ஸ், ஆர். சி. புக் இல்லையா? – கேஸ் பதிவாகி விடும்!

# ஓராண்டில் 442 மரணங்கள்!



● குடித்திருக்கிறாரா ஓட்டுனர்? - பரிசோதனை



● இப்படி வாகனத்துக்கு வெளியே சரக்கு நீண்டிருந்தால் அபராதம் உண்டு.

போக்குவரத்துப் போலீஸ்காரர் நிறுத்தி விடுகிறார் என்று வாகனங்கள் வைத்திருப்போர் சொல்வதுண்டு. வாகன ஓட்டிகள் என்னென்ன சான்றுகள் வைத்திருக்க வேண்டும்?''

''சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் ஆர். சி. புத்தகம், லைசென்ஸ், இன்ஷூரன்ஸ் செய்ததற்குச் சான்று, சாலை வரி, டோக்கன் ஆகியவைகளைக் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும்.''

''இவைகளின் ஒரிஜினல் வைத்திருக்க வேண்டுமா? ஜெராக்ஸ் காப்பி போதுமா?''

''ஆர். சி. புத்தகத்தைப் பொறுத்தமட்டில் ஒரிஜினல் வேண்டும். ஏனென்றால் ஒருவர் மற்றவருக்குத் தம் வாகனத்தை விற்றிருக்க வாய்ப்புண்டு. அது ஆர். சி. யைப் பார்த்தால்தான் தெரியும். வண்டியை ஓட்டுபவர், நியாயமான உரிமையாளர்தானா, அல்லது திருட்டு வண்டியா என்று தெரிந்து கொள்ளவே இந்த சோதனைகள். மற்றபடி ஆட்டோக்களுக்கு இவைகளுடன், பர்மிட், ஏ. வி. டி. பாரம் ஆகியவை தேவை.''

'' 'ஸ்பாட் பைன்' முறை இப்போது அமுலிலிருக்கிறதா?''

''இப்போதிருக்கும் விதிகளின்படி, எந்த போலீஸ் ஆபீஸருக்கும் ஸ்தலத்திலேயே அபராதம் வாங்குவதற்கு உரிமை கிடையாது. நீங்கள் போக்குவரத்து விதிகளை அனுசரிக்கவில்லையென்றால், கேஸ் பதிவு செய்து, கோர்ட்டில் charge sheet தாக்கல் செய்வார். வாகன ஓட்டி போலீஸ் ஆபீஸரிடம் சரியானபடி பதில் சொல்ல வேண்டும். அவர் பதில்களில் திருப்தி அடையாவிடில் போக்குவரத்து விதி 207-ன் படி வாகனத்தைப் பறிமுதல் செய்ய போலீஸுக்கு அதிகாரம் உண்டு. ஸ்பாட் பைன் முறை கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.''

''நடமாடும் நீதிமன்றங்களில் மாட்டிக் கொள்பவர்களிடம் பணம் இல்லாவிட்டால் என்ன செய்வது?''



● நடமாடும் நீதிமன்றம் முன் சாலை விதிகளை மீறியவர்கள் ஆஜர்.



● முதியவரிடம் பரிவு

''நெருக்கடி நேரத்தில் பஸ்களின் எண்ணிக்கை போதாததால் பயணிகள் பஸ்களின் படிக்கட்டில் பயணம் செய்ய நேரிடுகிறது. அதிக பஸ்கள் விடாததற்குக் காரணம் அரசுதான். இந்த நிலையில் பயணியைப் பிடித்து அபராதம் போடுவது எந்த வகையில் நியாயம்?''

''படிக்கட்டுப் பயணம் தற்கொலைக்கு ஒப்பானது. மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் படிக்கட்டில் பயணம் செய்து விபத்துக்குள்ளாபவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள் தான்!''

''நடமாடும் நீதி மன்றங்களைப் பொறுத்தமட்டில் பல்வேறு விதி மீறல்களுக்கு ரூ 50 முதல் 500 ரூபாய் வரை அபராதம் போடுவார்கள். பணம் இல்லாதவர்கள் மாஜிஸ்திரேட்டிடம், விஷயத்தைச் சொல்லி ரெகுலர் நீதிமன்றங்களில் ஆஜராகி அபராதம் கட்டலாம். இதை மாஜிஸ்திரேட்தான் முடிவு செய்ய வேண்டும்.''

''போக்குவரத்து விதிகளைப் பல்லவன் ஓட்டுநர்கள் மதிப்பதேயில்லை என்பது தெரிந்த விஷயம். அவர்களை மட்டும் கண்டுகொள்ளாத காரணம் என்ன?''

''பல்லவன் ஓட்டுநர்கள் விதிகளை மீறினால் அவர்களையும் 'புக்' செய்கிறோம். நடுரோட்டில் பஸ்களை நிறுத்தி கேஸ் எழுத ஆரம்பித்தால் பயணிகள் 'ஆபீஸுக்கு நேரமாச்சு, வண்டியை எடுப்பா' என்று சத்தம் போடுவார்கள். அதனால் டிரைவர் பெயர், நம்பரைக் குறித்துக் கொண்டு, அவர்கள் அலுவலகத்துக்கு எழுதி விடுகிறோம். பல சந்தர்ப்பங்களில் நாங்களே நேரடியாக கேஸ் போடுகிறோம்.''

''வாகனை ஓட்டி குடித்திருக்கிறாரா என்று பார்க்கச் சோதனை செய்யும் போது அந்தப் பழக்கத்திற்கு ஆளாகாதவரும் சோதனைக்குட்படும் போது மனக்கஷ்டம் ஏற்படுகிறது...''

''சனி, ஞாயிறு அன்று இரவுகளில், வாகனங்களை நிறுத்தி டிரைவர்கள் குடித்திருக்கிறார்களா என்று கண்டறியும் சோதனை நடத்தப்படுகிறது. இது அத்யாவசியமானது. Breath analyser என்ற கருவி மூலம் ஒருவர் குடித்திருக்கிறாரா என்று கண்டறிகிறோம். மாட்டிக் கொண்டு, கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டால் 1500 ரூபாய் அபராதம் மட்டுமல்ல, லைசென்ஸும் ரத்து செய்யப்படும். குடிப்பழக்கமே இல்லாதவர்களும் இதுபோல சோதனைக்கு ஆட்படும் போது அவர்களுக்குக் கொஞ்சம் மனக்கஷ்டம் இருக்கத்தான் செய்யும். இதையெல்லாம் தவிர்க்க முடியாது.''

''ஆட்டோக்காரர்கள் செய்யும் அநியாயத்தை போலீஸ் தட்டிக் கேட்கிறதா என்ற சந்தேகம் மக்களுக்கு உண்டு. தில்லுமுல்லு மீட்டர், கூப்பிட்ட இடங்களுக்கு வர மறுப்பது, மீட்டருக்கு மேல் கேட்பது... என்று மக்களுக்குப் பல தொல்லைகள்...''

''நாங்களும், ஆர்.டி.ஓ. அலுவலர்களும் சேர்ந்து எட்டு இடங்களில் திடீர்ச் சோதனைகள் நடத்துகிறோம். நகரில் கிட்டத்தட்ட 20,000 ஆட்டோக்கள் ஓடுகின்றன. பர்மிட் கொடுப்பது, மீட்டரை சீல் பண்ணுவது, லைசென்ஸ் கொடுப்பது ஆகிய அதிகாரங்கள் ஆர்.டி.ஓ. கையில்தான் உள்ளன. குற்றங்கள் புரிந்தால் பர்மிட் ரத்து செய்யும் அதிகாரமும் ஆர். டி. ஓ. வுக்குத் தான் உண்டு. தில்லுமுல்லு மீட்டர், கூப்

“வெள்ளைக் கோழி, வெள்ளை முட்டை இட்டால், கறுப்புக் கோழி, என்ன முட்டை இடும்?”

“இந்த மாதிரி அபத்தமான கேள்வி கேட்டதுக்கு நான் மட்டும் ஹெட்-மாஸ்டரா இருந்தா, உங்களை 'டிஸ்மிஸ்' பண்ணியிருப்பேன், சார்!”

- பொ. கலாசாமி






பிட்ட இடத்துக்கு வர மறுப்பது, வாடகையை விட அதிகமாகக் கேட்பது, போன்ற குற்றங்களுக்காகத் தினசரி 600 ஆட்டோ டிரைவர்கள் நடமாடும் நீதிமன்றங்களில் நிறுத்தப்படுகிறார்கள்.''

''அண்ணா சாலையில் நான்கு வழிப் பாதையை இப்போதுதான் அமுல்படுத்தினீர்கள். பழகுவதற்குள்ளாக, போலீஸார் கேஸ் புக் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்... இது சரியா?''

''அண்ணா சாலைப் பரப்பை முழு அளவு இப்போது பயன்படுத்த முடிகிறது. முன்பெல்லாம் முறையற்ற போக்குவரத்து இருந்ததால், நெரிசல் மிகுந்த நேரங்களில் வாகனங்கள், பன்னிரண்டு கி. மீ. வேகத்தில்தான் செல்ல முடிந்தது. இப்போது 18 கி. மீ. வேகத்தில் செல்ல முடிகிறது. இதனால் 40 சதவீத எரிசக்தி மிச்சப்படுத்தப்படுகிறது. அந்தந்த வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாதைகளில் சென்றால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பே இல்லை. நான்கு பாதைகளில் ஒன்று சேவைப் பாதை (Service Lane). சாலையில் உ ள் ள அலுவலகங்கள், கடைகளுக்குச் செல்வதற்காக ஒதுக்கப்பட்ட பாதை இது. நாம் அறிமுகப்படுத்தியுள்ள சேவைப் பாதை என்பது உலகிலேயே புதுமையானது. முதன்மையானது. இப்போது இரண்டு கி.மீ. தூரத்தில்தான் இந்த நான்கு வழிப் பாதை செயல்படுகிறது. காலப்போக்கில் கிண்டி வரை செயல்பட இருக்கிறது. பதினைந்து நாட்களுக்கு மேல் வாகன ஓட்டிகளை இந்த நான்கு வழிப் பாதையில் பழக்கப்படுத்தினோம். விளம்பரப்படுத்தினோம். அதன் பிறகுதான் விதிகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம்.''

''சாலைகளில் உலவும் கால்நடைகளாலும் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகளை ஒழுங்குபடுத்த முடியாதா?''

''போலீஸ் ஆணையாளர், மாநகராட்சி ஆணையாளர், மற்றும் அரசு அதிகாரிகள் கொண்ட கமிட்டி ஒன்று நகரிலுள்ள மாடுகளையெல்லாம், வெளியே கொண்டு செல்வது பற்றிப் பரிசீலித்து வருகிறது. கூடிய விரைவில் முடிவு தெரியும்.''

பேட்டி : ப்ரியன்

படங்கள் : சாரி

● திருத்தி வாசிக்கவும்!



# பெரிய அண்ணன் மனப்பான்மை என்றால் என்ன?

● க. எத்திராஜ், திருவாரூர்.

*? சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனைப் பிடிக்க ஒரு ஐடியா?*

! தென் அமெரிக்காவில் ஒரு பிரபல போதை மருந்துக் கடத்தல் பேர்வழி. அவனைப் பிடிக்க முடியாமல் அரசு கெஞ்ச, கடைசியில் அவன் அதிகாரிகள் மீது பரிதாபப்பட்டு, ''பாதுகாப்பான அரண் அமைத்து ஐந்து நட்சத்திர ஓட்டல் அளவுக்கு வசதி கொண்ட மனை கட்டினால் வந்து தங்குகிறேன்'' என்று கூற, அவர்களும் ஒரு மலைவாசஸ்தலத்தில் அப்படியே செய்தார்கள். சில காலம் இந்தச் ''சிறையில் அவன் வாழ்ந்தான். அதிகாரிகளும் அவனைப் ''பிடித்து விட்டதாக'' மார்தட்டி மகிழ்ந்தனர். திடீரென்று ஒருநாள் ஆளைக் காண வில்லை. அவனைப் பார்க்க நம் வீரப்பன் எவ்வளவோ தேவலாம்!

● ஆர். கார்த்திகேயன், நாட்டரசன் கோட்டை.

*? ''ஜனதா தளம், தெலுங்குதேசம், சிவசேனா ஆகிய கட்சிகளில் நடந்த கட்சித் தாவல்களுக்கு நான்தான் காரணம்'' என்று மார்தட்டுகிறாரே சு. சுவாமி?*


! 'கேவலங்களின் மொத்த உரு நான்தான்' என்று பெருமைப்படுகிறார். இவரைத் தண்டிக்கக் 'கட்சித் தாவல் தடைச் சட்டம்' வகை செய்யவில்லையே; அது இன்னும் கேவலம் இல்லையா!

● கலைப்புனிதன், குமரி.

*? நடிகர் செந்தாமரை மரணம் குறித்து?*

! குரல் மட்டுமல்ல, உருவமும் கம்பீரம். அதற்கு ஏற்ற வகையில் பாத்திரங்கள் அமைந்த போது, நாடகமாகட்டும் சினிமாவாகட்டும் மனிதர் வெளுத்துக் கட்டிவார்.

● ''பிரதமராக முயற்சி!''



● ''நான்தான் காரணம்!''



● ந. பிலிப் செல்வமுத்து, நெய்வேலி.

*? அடுத்த நாடகம் என்ன?*

! 'நடராஜன் மத்திய அரசைக் கவிழ்க்கப் பார்க்கிறார்; பிரதமராக முயற்சி செய்கிறார்' என்பதாக இருக்கலாம்.

● கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

*? சுதந்திர தினத்தன்று ஒருநாள் மட்டும் சமபந்தி போஜனம் நடத்தினால் நாட்டில் சமத்துவம் வந்து விடுமா?*

! அந்த அரை மணி நேரத்துக்குச் சமத்துவம் இருப்பது போல் தோன்றும். அவ்வளவே. மெய்யான சமத்துவம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான, சுயகௌரவத்தை வளர்க்கிற, சிறந்த கல்வி வழங்கப்படும் போதுதான் கிடைக்கும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்க்க முடியாது. ஆனால் சுயமரியாதையுடன் கூடிய சமத்துவத்தை அனைவருக்கும் வழங்கக் கூடியது நல்ல பாடத் திட்டத்துடன் கூடிய சிறந்த கல்வி.

● பி. முகிலன், கோவை.

*? தனியார் கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பதைத் தடைசெய்யும் வகையில் தமிழக அரசு சட்டம் கொண்டு வருவது மாணவர் சமுதாயத்துக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயம் தானே?*

! புதிய அவசரச் சட்டத்துக்கு அவசியமே இல்லை என்றும் ஏற்கெனவே இத்தகைய சட்டம் இங்கு இருப்பதாகவும் சட்டமறிந்தவர்களே கூறுகின்றனர். அதை அமுல்படுத்தத்தான் அரசுக்கு 'தில்' இல்லை. வெவ்வேறு வடிவங்களில் அட்மிஷன் (நன்கொடை) அபராதம் வசூலாகிறது.

● பி. ஜெயப்பிரகாஷ், நவமணி.

*? கோகுலம் 96 பக்கங்களுக்கும் விலை ரூ 3/-; கல்கி 64 பக்கங்களுக்கும் விலை ரூ 3/-. ஏன் இந்த முரண்பாடு?*

! நஷ்டப்பட்டாலும் பாதகமில்லை; குழந்தைகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான்.

● ஆர். கிருஷ்ணசாமி, சென்னை.

*? வி. கிருஷ்ணமூர்த்தியும் வெளிநாட்டில் இருந்த அவர் புதல்வரும் தவறுகள் செய்து பொருளீட்டியது உங்கள் கண்ணில்படவில்லையா? கல்கி நிர்வாகத்துக்கும் அவருக்கும்*



● வழக்கும் கருத்தும்



● ''நெருங்க முடியாது!''

உன்ன தொடர்பு அவர் செய்த ஊழல்களை நியாயப்படுத்தி விட்டதா? புரியவில்லை?

! ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை கூட உங்களைப் போலவே அவருக்கும் கல்கி காரியாலயத்துக்கும் ஏதோ தொடர்பு இருப்பது போலவும் எங்கள் காரியாலயத்தில் 'சோதனை' நடந்தது போலவும் எழுதியுள்ளது. கிருஷ்ணமூர்த்திக்கும் கல்கி நிறுவனத்துக் கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது. இங்கு 'சோதனை' எதுவும் நடக்கவும் இல்லை. கிருஷ்ணமூர்த்தி பொருளாதாரக் குற்றங்கள் புரிந்ததாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு நடக்கும் போது கருத்துக் கூறுவது சரியல்ல. குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனையைப் பெறப்போகிறார். அவர் ஊழல் புரிந்திருந்தால் அதை நியாயப் படுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏது மில்லை.

● கே. எஸ். அனந்தகிருஷ்ணன், நெய்வேலி.

? 30.8.42 கல்கியில் அன்னை கஸ்தூரிபா படம்; 30.8.92 கல்கியில் குஷ்பு படம். தயவு செய்து திருத்திக் கொள்ளக் கோருகிறேன்.

! இதில் திருத்திக் கொள்ள என்ன இருக்கிறது? கஸ்தூரிபா மட்டுமல்ல; கல்கி ஆரம்பித்து நான்காவது இதழிலேயே சினிமா நட்சத்திரம்தான் அட்டைப் படத்தை அலங்கரித்தார். (சாந்தா ஆப்தே.) அதன் பிறகு எத்தனையோ சினிமா நடிகர், நடிகையர் கல்கி அட்டைப் படத்தை அலங்கரித்திருக்கின்றனர். சினிமாவை ஒதுக்குவது அல்ல கல்கியின் பாரம்பரியம். நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லி அலசுவதுதான். கல்கி அழகுக்கு இடமளிக்கும், ஆபாசத்துக்கு அல்ல. சினிமா விமர்சனங்கள், பேட்டிகள் அர்த்தமுள்ளதாய் இருக்கும்; அபத்தமாயல்ல. இந்த வாரம் மன்மோகன் சிங் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறாரே, பார்த்து சந்தோஷப்படுங்களேன்! கனமான பேட்டி - படித்து ரசியுங்களேன்!

● வெற்றியூர் வெங்கட், நாட்டசரன் கோட்டை.

? 'நாது நாட்டு தொலைக்காட்சியிடம் ஸ்டார், சி. என். என். போன்றவை நெருங்க முடியாது' என அஜித்குமார் பாஞ்சா கூறியுள்ளாரே?

! உண்மைதான். இந்த அளவுக்கு அவர்களால் 'போர்' அடிக்க முடியாது.

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? 'நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு கிடையாது' என்ற மத்திய அரசு அறிவிப்பு பற்றி?

! ஜாதி அடிப்படையில் மட்டுமின்றி, அரசியல் அடிப்படையிலும் இடஒதுக்கீடு கூடாது.

● வித்யா, எரல்.

? கல்கி வைர விழா அழைப்பிதழையாவது தமிழில் அச்சிடுவீர்களா?

! பொன் விழா போலவே ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் அழைப்பிதழ்களை அச்சிடுவோம்.

● த. குணசேகரன், கவுந்தம்பாடி.

? நடுத்தர ரக ஏவுகணை பிருதிவி, ஒரிசா கடல் பகுதியில் வெற்றிகரமாக ஏவப்பட்டிருப்பது குறித்து?

! மகிழ்ச்சி. அதே ஒரிஸ்ஸா காலஹந்தி பகுதியில் மக்கள் மிக மோசமான வாழ்க்கைத் தரம் உடையவர்களாக இருப்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதையும் சற்று கவனித்தால் தேவலாம்.

● வி. பரமசிவம், மதுரை.

? ''பெரிய அண்ணன் மனப்பான்மை கூட்டணிக் கட்சிகளிடையே வரக் கூடாது'' என்கிறாரே மூப்பனார். அப்படியென்றால் என்ன?

! ''நான் சொல்றபடிதான் நீ கேட்கணும்'' என்பதுதான். 'பெரிய அக்கா மனப்பான்மை' என்று வேணுமானால் திருத்தி வாசித்துக் கொள்ளுங்கள்!

● கே. என். ராமகிருஷ்ணன், திருச்சி. ❑


? 'இந்தியா பாகிஸ்தான் பேச்சு வார்த்தை' என்று செய்தி வருகிறது; ஆனால் பிரச்னைகள் தீர்வதில்லை ஏன்?

! இவர்கள் பிரச்னையைப் பற்றி எங்கே பேசினார்கள்? பிரச்னையை எப்படி அணுகி, எவ்வாறு பேசுவது என்பது பற்றித்தான் பேசியிருக்கிறார்கள் - இதுவரை. பிரச்னையைப் பேசினால்தானே தீர்வு காண முடியும்!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. என். ராமகிருஷ்ணன்,
பிளாட் 5, எஸ். எம். ஈ. எஸ். சி. காலனி,
வடக்கு விஸ்தரிப்பு,
திருச்சி - 21.

நீங்கள் கேட்டவை - தராசு


இனி ஒரு சதி
கதை: பத்மா ரவிசங்கர்
6
படம்:
வழக்கமாக அர்ச்சனாவை சந்திக்கும் பார்க்கில் யுவராஜ்...
ஹாய் ஏஞ்சல்! ஆரஞ்சு மிடின்னு சொல்லிட்டு மஞ்சள் சாரில வந்திருக்க...
மிடிய நினைச்சு மாக்ஸி கனவுகுள்ளாட வருவேன்னு தான்...!
இது கூட நல்லாருக்கு டார்லிங்...
அர்ச்சனா யோசனையில் ஆழ்ந்து..
இவர் சந்திரசேகருக்கு விஷம் வைச்சிருப்பாரா?.. எதுக்கு?...
என்ன டார்லிங் டல்லா இருக்கே?
ம்... ஒண்ணுமில்லே...
சற்று நேரத்துக்குப் பின்...
சரிம்மா ஒரு அபாயிண்ட்மெண்ட் இருக்கு கிளம்பறேன்...
எங்கே இவ்வளவு அவசரமா...



ம்... சந்திரசேகரோட மெடிகல் இன்ஷியூரன்ஸ் ஏஜெண்டைப் பார்த்துப் பேச வேண்டியிருக்கு. ஆறு மணிக்கு வரச்சொன்னார்.
சரி... பை!
யுவராஜை அனுப்பிவிட்டு ஆட்டோவில் புறப்பட்ட அர்ச்சனா...
சந்திரசேகர் படுத்த படுக்கையாக, யுவராஜுக்கு பாவம், ரொம்ப வேலை.
சிக்னலில் ஆட்டோ நிற்க...
அட! ஆறுமணி அபாயிண்ட்மெண்ட் ன்னு பறந்தவர் மெடிகல் ஷாப்புல நுழையறாரே!
ஆட்டோவை ஓரம் கட்டச்செய்து இறங்கினார் அர்ச்சனா...
என்னிடம் ஏன் பொய் சொல்லணும்?
கடையில் விசாரிக்க...
ஆமா, ஒரு கெமிகல் வாங்க வந்தாரு. நான் கொடுக்கலையே?
ஏன் ஸார்?
அது கொடிய விஷம்!
தொடரும்

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

## செப்டம்பர் 1, 1942

### வெளிநாட்டவரும் வணங்கும் திறமை

"திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்" என்று நம் பாரதியார் கண்ட கனவை




நனவாக்கி, நமது புலமையைக் கண்டு வெளிநாட்டார் தலைவணங்கச் செய்தவர்கள் வங்காள மகாகவி ரவீந்திரநாத் தாகூரும் நமது ஸர். ஸி. வி. ராமனும்தான். 1930-ம் வருஷம் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற ஸர் ஸி. வி. ராமன், இவ்வருஷம் அமெரிக்காவின் தலைசிறந்த விஞ்ஞானப் பரிசான பிராங்லின் மெடலையும் பெற்று, தமிழ்நாட்டவருக்கு அழியாப் புகழ்ச் செல்வத்தைத் தேடிக் கொடுத்திருக்கிறார். அல்லும் பகலும் அவர் தளரா ஊக்கத்துடன் நடத்தி வரும் ஆராய்ச்சிகளின் மூலம் புதிய புதிய விஞ்ஞான உண்மைகளை உலகுக்கு அளித்த வண்ணமிருக்கிறார். ஸர். ஸி. வி. ராமனின் விஞ்ஞான அறிவுக்கு நிகராக அவரது சொல் வன்மையைத்தான் கூறலாம். "பத்து கோடி ரூபாய் கொடுங்கள். குண்டூசியிலிருந்து ஏரோப்ளேன் வரை இந்தியாவில் செய்து தீர்த்து விடுகிறேன்" என்று சமீபத்தில் சொல்லியவரும் ஸர் ஸி. வி. ராமன்தான். அவரது திட்டங்கள் சுதந்திர இந்தியாவில் உருவாகிக் காரியத்திலும் நிறைவேறும் நன்னாளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

*- அட்டைப்பட விளக்கம்*

### அடக்கு முறையும் ஆத்திரமும்

**க**டுமையான அடக்குமுறைகளைக் கையாண்டு ஜனங்களின் அதிக்கிரமமான காரியங்களை அடக்கி விடலாம். பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுப் போடுவது, பல கிராமங்களுக்குச் சேர்த்துக் கூட்டு அபராதம் போடுவது முதலிய முறைகளைக் கையாண்டு, "அடக்கி விட்டோம்; அமைதியை நிலைநாட்டி விட்டோம்" என்று அவர்கள் பெருமையடித்துக் கொள்ளலாம்.

ஆனால், ஜனங்களின் மனதிலுள்ள ஆத்திரத்தையும், கோபத்தையும் நீக்கி விட்டோம் என்று அவர்கள் சொல்லிக் கொள்ள முடியாது.

இந்த ஆத்திரமும், கோபமும் அடக்கு முறைகளினால் அதிகமாகிக் கொண்டுதான் வரும். வாசலில் காத்திருக்கும் பகைவன் உள்ளே நுழையும் போது மறுபடியும் வெடித்துப் பொங்கும். பகைவர்கள் படை எடுத்து வரும் காலத்தில் தந்தி அறுத்தல், தண்டவாளத்தைப் பெயர்த்தல் முதலிய காரியங்கள் எல்லாம் இப்போது போல் சர்க்காருக்குச் சொற்ப உபத்திரவத்துடன் போக மாட்டா; அவ்வளவும் ஐந்தாம் படைக் காரியங்களாகி விடும். படையெடுத்து வருகிறவர்களுக்கு ரொம்பச் சாதகமாய்த்தானிருக்கும். இப்படிப்பட்ட நிலைமையில், பிரிட்டிஷ் சர்க்கார் திருப்தியடைய இடமுண்டா?

இப்படியாகப் பகைவர்களுக்கு மட்டுமே கொண்டாட்டம் தரக்கூடியதான நிலைமையை இன்னும் எத்தனை காலத்துக்கு பிரிட்டிஷ் சர்க்கார் விட்டு வைக்கப் போகிறார்கள்?

நிலைமையைச் சீர்திருத்துவதோ, இன்னும் சீர்கேடாக்குவதோ இப்போது பிரிட்டிஷாரையே பொறுத்திருக்கிறது.

சீர்திருத்துவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. சிறையில் உள்ள காங்கிரஸ் தலைவர்களுடன் ராஜிப் பேச்சுத் தொடங்குவதுதான்.

*- "யாருக்குக் கொண்டாட்டம்?"*
*- தலையங்கத்தின் ஒரு பகுதி.*

### பெற்றோரின் கடமை

**பி**றப்புரிமையாகிய இயற்கை வேகங்களைச் சரிவர வேலை செய்யுமாறு விட்டால்தான் குழந்தையின் குணம் நன்றாக உருப்படும். பெற்றோர்களின் அடக்கு முறையால் சரியான வளர்ச்சிக்குத் தடை உண்டாகிறது. குழந்தையின் முதல் ஐந்து ஆண்டின் சூழ்நிலையானது அ த வ்



இயற்கை வேகங்களுடன் இசைந்து கூடி வால் குழந்தையின் மனோ வளர்ச்சி பூரண மடையும். இயற்கை வேகங்களுக்குள் சமய சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு ஏதேனும் ஒரு வேகம் வேலை செய்யத் துவங்கும். அதனால் அது பலம் கொள்ளும். இயற்கை வேகத்தை அடக்கு முறையைப் பிரயோகித்து அடக்கி விடலாம். ஆனால் அடக்கப் படும் வேகம் சும்மா இருக்காது. உள்ளே வேலை செய்து கொண்டே போகும். அதன் பயன் வெகு நாள் கழித்து வேறு வடிவத்துடன் வெளியாகும். எல்லாவித மான வேகங்களும் பலாத்காரமாக அடக்கப் படாமல் ஒன்றுக்கொன்று உதவினால், குழந்தைப் பருவத்தில் உள்ளம் சரியான முறையில் வளர்ந்து கொண்டு போகும். அவ்வாறு உள்ளம் உருப்பட்டால் குழந்தை வளர வளர அதற்குத் தன்னம்பிக்கை, தைரியம், பிறருக்கு உதவும் ஆசை, ஊக்கம், அன்பு, மானம், கற்பு முதலிய எல்லா நற்குணங்களும் அமையும்.

ஒரு கடிகாரம் அல்லது வேறு ஒரு யந்திரத்தை ஒருவன் சரியாகப் பார்த்துக் கொள்ளத் தெரியாமல் கெடுத்து விட்டால் அது கெட்டுப் போகிறது. சீர்ப்படுத்து வதற்குக் கடையில் கொடுத்தால், ''இதை எப்போதாவது கீழே போட்டீரா?'' என்று கேட்பார்கள். அல்லது ''அதிகமாக சாவி கொடுத்து விட்டீரா?'' என்று கேட்பார்கள். அதைப் போலவே கெட்டுப் போன குழந் தைகளைப் பற்றியும் குழந்தை உள்ளத்தின் வளர்ச்சி முறையை அறிந்தோர் பெற் றோரைப் பல கேள்விகள் கேட்கலாம். குழந்தையின், மனமானது மிக நுண்ணிய அமைப்புகள் பொருந்திய ஒரு யந்திரம். அதைச் சரியாகப் பார்த்துக் கொள்ளுவது குழந்தையைப் பெற்றவர்களின் கடமை.

*- சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்*

*- சிசு பாலனம் கட்டுரைத் தொடரில் ஒரு பகுதி*

## சாந்தா ஆப்தே

**ஸ்ரீ**மதி சாந்தா ஆப்தே இன்ன கம் பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொண் டிருக்கிறார் என்பதும் இன்ன படத்தில் நடிக் கிறார் என்பதும் இன்னார் பேரில் வழக்குத் தொடுத்திருக்கிறார் என்பதும் ஸினிமா உலகத்தைக் கலக்கும் விசேஷ சம்பவங்க ளாகும். அவர் நடிக்கும் படம் எப்பொழுது வெளிவரும், எப்பொழுது பார்க்கப் போகி றோம் என்றெல்லாம் இயற்கையாகவே உண்டாகும் ஆவல் ஒருபுறமிருக்க, அந்த ஆவலைத் தூண்டி விட அவர் படத்தில் நடிக்கும்போதே சில பரபரப்பான தகவல் களும் வெளிக் கிளம்புவது வழக்கம். லாகூர் பாஞ்சோலி பிக்சர்ஸாரின் ''ஜமீன்தார்''



படத்தில் நடிக்கும் சமயத்திலும் அத்தகைய தகவல்கள் கிளம்பத்தான் செய்தன. அவற்றுடன் சாந்தா ஆப்தே அவர் இதுவரை நடித்திருக்கும் மற்றெல்லாப் படங்களை யும் நடிப்பில் மிஞ்சி விட்டார் என்ற பரபரப்பான செய்தியையும் கேட்கிறோம். கஜான்சி புகழ் நூராங்குடன் இப்படத்தில் சாந்தா ஆப்தே தோன்றும் காதல் கட்டங் களைப் பார்த்து ''ஐயோ! அடடா!'' என்று நாம் பரவசம் அடைவதைத் தவிர வேறு வழியேயிராதாம். அவற்றுடன் பக்திப் பரவசமளிக்கும் கட்டங்களுக்கும் குறை விராதென்று மேலேயுள்ள படத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

*- சினிமா செய்தி*

## மின்னல் பேச்சு

**மி**ன்னல் தாக்குதல் நடைபெறும் இந் நாளில், மின்னல் பேச்சுக்களும் தோன்றி நம்மைத் திகைக்க வைக்கின்றன. இவ்வாறு நமக்குத் திகைப்பைக் கொடுத்தே தீர்வ தென்று கிளம்பியிருப்பவர்களில் ஸர். ஏ. ராமஸ்வாமி முதலியார் ஒருவர்.

அவரைச் சாம்ராஜ்ய யுத்த மந்திரி சபை யில் இந்தியப் பிரதி நிதியாக நியமித்த சில மணி நேரத்துக்கெல் லாம், ''இந்தியா மந்திரி சொல்லுகிற படி லண்டனில் நான் கையைத் தூக்கிக் கொண்டு இருக்க மாட்டேன்; அவர் சொல்வதற்கு முன்னா லேயே தூக்கி விடு வேன்'' என்று மார் தட்டிக் கொண்டு கூறி னார்.



*- என்ன சேதி*

# தன்னம்பிக்கைச் சிறப்பிதழா?

## வட்டமேஜை

◆ குஷ்புவை நீங்கள்தான் விட்டு வைத்திருந்தீர்கள். இப்போது நீங்களும் போட்டு விட்டீர்கள். இந்தப் போக்கு இத்துடன் நிற்கட்டும்.
அறந்தாங்கி,
கோ. வீரராகவன்.

◆ இந்த மாதிரி தத்ரூபமான அட்டைப் படத்தைப் பார்த்து ரொம்ப நாளாச்சுங்க! எங்கள் கண்ணே பட்டு விடப் போகுது! திருஷ்டி சுற்றிப் போடுங்க கல்கியாரே!
ஈரோடு, த. குணசேகரன்.

◆ நடுநிலை மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த இந்த வாரத் தலையங்கம் சூப்பர்.
திருச்சி - 14, பி. ரத்தினசபாபதி.

◆ "நாட்டின் எதிர்காலம்" பற்றிய பட்டிமன்றத்தை "அச்சு" மன்றத்தில் படித்த போது நேரில் கேட்டு ரசித்தது போன்றே இருந்தது.
கோவில்பட்டி,
அ. ராமகிருஷ்ணன்.

◆ "இந்த மண்ணை இருண்டு போகும் என்று சொல்ல மனம் துணியவில்லை" - என்ற சாலமன் பாப்பையாவின் உணர்ச்சி, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது! அந்த உணர்ச்சியைத் தூண்டி நாட்டை ஒளிமயமாக்குவது 'கல்கி' போன்ற தேசபற்றுள்ள பத்திரிகைகளால் மட்டுமே முடியும்!
முத்துப்பேட்டை,
முத்து செழியன்.

◆ 'முடுக்கி விடப்பட்ட மூப்பனார்...' கட்டுரை - தமிழக காங்கிரஸ் எம்.எல். ஏக்களைத் தன்மானத்துடன் வாழ, விழிப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.
சென்னை - 23, கி. ராமநாதன்.

◆ இந்த இதழ், தன்னம்பிக்கை ஊட்டும் சிறப்பிதழா என்ன? சிறுகதைகள் அனைத்தின் முடிவிலும், ஒரு நியாயமான தீர்வும், நம்பிக்கையை ஊட்டும் முடிவும் அமைந்திருப்பது, மனத்துக்கு ஆறுதலாக உள்ளது.
சென்னை - 62,
ப. இராமபிரசாத்.

◆ சமீபத்தில் நடைபெற்று முடிந்த முரசொலி நாளிதழின் பொன் விழா நிகழ்ச்சியினை '50 ஆண்டுகளாக ஒலிக்கும் முரசு' என்ற தலைப்பில், இரத்தினச் சுருக்கமாகவும், அதே சமயம் நிகழ்ச்சி முழுவதையும் சுவைபடத் தொகுத்தளித்தமைக்கும் பாராட்டு.
தோட்டக்குறிச்சி,
இரா. வளையாபதி.

◆ கட்சி என்ற போர்வைக்குள் கூட்டுச் சேர்ந்து பணம் சம்பாதிக்கும் அரசியல் தலைவர்களையும், விவரம் தெரியாமல் கட்சிக்காகச் சண்டை போட்டுக் கொண்டும், கலகத்தை ஏற்படுத்தும் அப்பாவித் தொண்டர்களையும் அப்பட்டமாகச் சித்திரித்துள்ளார் "தூங்காதே தம்பி" கதாசிரியர்.
வையலோகம், எஸ். குருசேகர்.

◆ வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் மாற்றங்கள் உண்டு என்று, வாழ்க்கையில் சோர்வடைந்த என்போன்ற பலருக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது "திருப்புமுனை".
குத்தாலம், பி. முத்துக்குமாரன்.

◆ கல்கி 27.7.92 இதழில் சேலம், மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சிறுநீரகத் துறை பற்றித் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது கண்டு, மனம் வருந்தினேன்.


நான் பொறுப்பு மருத்துவராக இருக்கும் இந்த சிறுநீரகத் துறையில் 4 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களும் (ஹீமோடயாலிஸிஸ்), ஒரு வயிற்று சுத்திகரிப்பு இயந்திரமும் (பெரிடோனியல் டயாலிஸிஸ்) இருக்கின்றன. 1987-ம் ஆண்டு முதல் இந்த இரண்டு வகையான டயாலிஸ்களும் நடந்து கொண்டு இருக்கின்றன. இந்த இயந்திரங்களுக்கான பெரிய தொட்டி, பைப் இணைப்புகள் பூரணமாக இன்னும் செய்யப்படாத நிலையிலும் இதுவரை ஹீமோடயாலிஸிஸ் 278ம் பெரிடோனியல் டயாலிஸிஸ் 110ம் நடந்திருக்கின்றன. கடந்த 3 மாதங்களில் மட்டுமே 72 ஹீமோ டயாலிஸிஸ் நடந்திருக்கின்றன.

கடந்த வருடத்தில் பொதுப் பணித்துறை இலாக்கா தொட்டி கட்டுதல், பைப் இணைப்பு கொடுத்தல், தடுப்பு மற்றும் கழுவும் அறை போன்ற வேலைகளை ஆரம்பித்து பாதியிலேயே நின்று போய் இருப்பதால், ஹீமோடயாலிஸிஸ் பண்ண தண்ணீர் இணைப்பே இல்லாத போதும் பெரிடோனியல் டயாலிஸிஸ் இயந்திரம் மூலம் சிகிச்சை அளித்திருக்கிறோம். இன்னமும் பூரண இணைப்பு தரப்படவில்லை எனினும், நோயாளிகளின் நலனைக் கருதியும் 'அவச்சொல்' ஏற்படக் கூடாதே என்ற எண்ணத்திலும், நான் முயற்சி எடுத்து, பழைய இணைப்புகளை சுத்தப்படுத்தி, தற்காலிகமாகப் பொருத்தி, இரவல் வாங்கிய பூஸ்டர் பம்ப் மூலம் தண்ணீர் அழுத்தத்தை அதிகப்படுத்தி தினமும் டயாலிஸிஸ் நடத்தி வருகிறேன்.
சேலம், டாக்டர். ஜோன்ஸ்.

(டாக்டர் ஜோன்ஸின் சேவை உணர்வைப் பாராட்டும் அதே நேரத்தில் அவருக்குப் பொதுப் பணித்துறையின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதையும் கிடைத்தால் இன்னும் சிறப்பாக அவர் துறை இயங்க முடியும் என்பதையும் அவர் எழுத்திலேயே காண்கிறோம். - ஆர்.)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

# An intelligent formula against rising inflation.



## SANMAC CHITS.
## A chit company that has your best interest at heart!

When you find that your hard earned money is worth less and less as time goes by, it's time to defend your savings against such a sure calamity.

That's where chits offer you a safe and sure way to escape inflation. And a commitment towards regular savings.

When you join a Sanmac Chit group, you can beat inflation by being able to have access to the funds today instead of in the future.

No wonder, thousands of Sanmac subscribers have done just that; buying gold, investing in real estate or shares, making lifetime purchases of airconditioners, etc.

You too can fall back on the professional strength and realiability of the multi-crore, multi-faceted SANMAC group.

**Chit groups ranging from Rs.10,000 to Rs.5,00,000.**
**Join Sanmac Chits today and avail special gifts!**
**Special groups for VINAYAKA CHATURTHI.**

SANMAC CHITS
MEETS YOUR NEEDS

**SANMAC CHITS PRIVATE LIMITED**

**Regd. Off:** 14, Khader Nawazkhan Road, Madras 600 006. Phone: 8250601, 8251232

**Branches:** • Mount Road, Ph: 477363 • T.Nagar, Ph: 478515 • Ashok Nagar, Ph: 4824624 • Mylapore, Ph: 77488 • Anna Nagar, Ph: 6214454 • Tambaram, Ph: 401934 (PP) • Flat 55, 'Bhaiya Complex', 286, Purasawalkam High Road, (Opp Roxy Theatre), Madras 600 007 • Madurai, Ph: 23334 • Trichy, Ph: 25324 • Srinivasa Trade Centre, 160/27, DB Road, R S Puram, (Near Kennedy Theatre), Coimbatore-2 • Tiruvannamalai, Ph: 2579 (PP) • Pondicherry, Ph: 27779 • Bangalore, Ph: 583856

Adwise/3112/92

GISTERED NO. 4392
gistered as Newspaper in Sri Lanka

